
கல்கி




நாகரீக எழில்
மிளிருகிறது இந்த
ஃபுல் வாயில்
அளிப்பது
எஸ்ஆர்எம்
ஒன்றே


தேர்ந்தெடுக்கப் பலரகங்கள்
ரூ. 125 க்கு மேற்பட்டு ரேடியோக்களும் டிரான்ஸிஸ்டர்களும்
மாடல் டிபி 0816
மாடல் டி.பி 0581
மாடல் டிபி 0579
மாடல் டிபி 0509
மாடல் டிஏ/டியு 0777
மாடல் டிஏ 0926
மாடல் டிஏ/டியு 0202
மாடல் டிஏ/டியு 0776
மாடல் டிஏ/டியு 0824
மாடல் டிஏ 0366
நட்பு மிக்க உங்கள் மர்பி வியாபாரியிடம் இன்றே அவற்றைக் காணுங்கள்.
murphy
மர்பி
NAS 6142d
Murphy sets the standard


பட்ஜெட்

கல்கி

நினைவுத் திரையில்...

ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் வேலைக்காரர்களை நடத்திய விதமே ஒரு பெரிய படிப்பினை. பல தடவை அவர்களைச் சந்திக்க நேர்ந்த சந்தர்ப்பங்களில் ஒரு முறையாவது வேலைக்காரர்களை அதட்டுவதையோ கோபித்துக் கொள்வதையோ நான் பார்த்ததில்லை. மோட்டார் டிரைவரிடமோ மற்ற வேலைக்காரர்களிடமோ அவர்கள் பேசும்போது வார்த்தைகளில் அன்பும் ஆதரவும் சொட்டிக் கொண்டிருக்கும். கண்டிப்பான உத்தரவைப் போடும்போது கூட அவர்களுடைய வார்த்தைகளில் இனிமை குறைவதில்லை. ஒரு சமயம் அவர்கள் மோட்டார் டிரைவரின் முதுகைத் தட்டிக் கொடுத்து, ''சாப்பிட்டு விட்டாயா, அப்பா!'' என்று அன்போடு கேட்ட காட்சி இன்றைக்கும் என் மனக் கண் முன் நிற்கிறது.

-'கல்கி'- மலை மறைந்தது
என்ற கட்டுரையிலிருந்து.
கல்கி ஜூலை, 11, 1948.

பொருளடக்கம்

பிலவங்க, வைகாசி, 21 ❋ ஜூன் 4

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 26 ✲ இதழ் 44

குப்பம் விபத்தும் தேசிய விபத்தும்

ஜோலார்ப்பேட்டைக்கு அருகே குப்பத்தில் நிகழ்ந்த ரயில் விபத்தின் உற்பாதத்தைக் கேட்டு நெஞ்சு கலங்காதார் இருக்க முடியாது. விபத்தில் சிக்கியவர்களின் குடும்பத்தினர் விடும் கண்ணீரில் நாமும் பங்கு கொள்கிறோம். அதுவே அவர்களுக்கு நாம் அளிக்கும் அநுதாபமும் ஆகும்.

விபத்தின் காரணம் இன்னும் அதிகாரபூர்வமாக ஆராயப்படாவிடினும், என்ஜினில் பிரேக் பிடிக்காதது விபத்துக்குக் காரணமாயிருக்கலாமோ என்று சிலர் எழுப்பியுள்ள அநுமானத்தைக் கேள்வியுறும்போது, நாம் மனக்கொதிப்பு கொள்ள நியாயம் உண்டு. என்ஜின்கள், பெட்டிகளில் மூன்றிலொரு பங்கு பழையனவாயிருப்பதும் விபத்துக்கள் நிகழ்வதற்கு ஒரு காரணம் என்று அகில இந்திய ரயில்வேக்காரர் சம்மேளனம் சென்ற ஆண்டில் எடுத்துக் காட்டியபின்பாவது, இயந்திரங்களில் கோளாறு இல்லாமல் இருக்கின்றனவா என்று ஒரு முறைக்கு இரு முறையாகப் பரிசோதித்திருக்க வேண்டும். உயிர்களுடன் சம்பந்தப்பட்ட விஷயமல்லவா?

இந்தச் சோகத்துக்கும் கோபத்துக்கும் இடையே சிறிதளவு ஆறுதல் அளிப்பது ஏதேனும் உண்டெனில், அது விபத்துக்காளானவர்களுக்கு மிகுந்த சுறுசுறுப்புடனும், பொறுப்புணர்ச்சியுடனும் வைத்திய உதவிகள் அளிக்கப்பட்டிருப்பதுதான்.

குப்பம் விபத்து நிகழ்ந்த பயங்கரச் செய்தியை ஒட்டியே புதிய ரயில்வே பட்ஜெட்டின் பயங்கரமும் அதையடுத்து பொது பட்ஜெட்டின் பயங்கரமும் வெளியாகியிருப்பது விதியின் விளையாட்டு என்று கூற வேண்டும். காங்கிரஸாட்சியால் நாடு முழுவதற்கும் இதுகாறும் ஏற்பட்டுள்ள விபத்துக்கும் இனி ஏற்படப் போகும் விபத்துக்கும் இந்த பட்ஜெட்கள் அளவுகோல் எனலாம். நடப்பு ஆண்டில் ரயில் வருமானம் அறுபத்தோரு கோடி ரூபாய் உயரும் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் முப்பத்தாறு கோடி ரூபாய் தான் உயர்ந்தது. எதிர்பார்த்ததில் இருபத்தைந்து கோடி ரூபாய் துண்டு விழுந்தது. இதற்கு முக்கியமாகச் சரக்குகளின் போக்குவரத்து பெருகாததே காரணம். சர்க்கார் எதிர்பார்த்ததை விடத் தொண்ணூற்றைந்து லட்சம் டன் குறைவாகச் சரக்குப் போக்குவரத்து இருந்திருக்கிறது. சரக்குப் போக்குவரத்தின் இந்த நிலை தேசத்தின் பொருளாதாரம் முன்னேறவில்லை என்பதற்கே ஓர் அறிகுறி.

ஆனால் பொருளாதாரம் படுத்து வருவதை அரசாங்கம் உணர்ந்ததாகத் தெரியவில்லை. இல்லாவிடில் ரயில்வே மந்திரியவர்கள் பிரயாணிகள் கட்டணத்தையும் சரக்குகள் கட்டணத்தையும் இப்படி ஏகத்தாறாக உயர்த்தியிருக்க மாட்டார். மக்களின் பளுவைக் குறைக்க வேண்டும் என்ற உணர்வு காங்கிரஸுக்கு இல்லாததோடு, மக்களின் பளுவை மேலும் அதிகமாக்க அது சிறிதும் கூசவில்லை என்பதற்கு இந்த ரயில்வே பட்ஜெட் ஓர் அழுத்தமான உதாரணம். தொழில்துறையினரும் விவசாயிகளும் எக்காரணத்தைக் கொண்டும் விலைகளை உயர்த்தக்கூடாது என்று நாள்தோறும் வற்புறுத்தி வரும் அரசாங்கம் தனது துறையில் உள்ள ரயில்வேயில் கொடூரமான கட்டண உயர்வு செய்து வருவது வன்மையான கண்டனத்துக்குரியது. காரணம் கேட்டால், ஊழியர்களின் ஊதியத்தைப் பெருமளவு உயர்த்தவேண்டியிருக்கிறது என்பார்கள். ஊழியரின் ஊதியத்தை உயர்த்தக் காரணம் என்ன என்பது அடுத்த கேள்வி. அரசாங்கத்தின் தவறான திட்டங்களாலும் பணவீக்கத்தாலும் விலைவாசிகள் நாள்தோறும்

விஷமென உயர்ந்து வருவதுதான் ஊதிய உயர்வுக்குக் காரணம்.

ஆக, ரயில்துறை என்பது தனியான ஒன்று அல்ல. ஒற்றைத் தண்டவாளத்தில் ரயில் ஓட முடியாதல்லவா? அரசாங்கத்தின் பொதுவான பொருளாதாரக் கொள்கை என்ற தண்டவாளத்துக்கு இணையாகத்தான் ரயில்வே முறையை அமைக்க வேண்டியிருக்கிறது. அந்தப் பொருளாதாரத் தண்டவாளம் திசை தப்பிச் சென்று விட்டால் அனர்த்தம்தான். ஒரு ரயில் தடம் புரளுவதற்குப் பதில் நாட்டு வாழ்வே தடம் புரண்டு தேசிய விபத்து ஏற்பட்டு விடுகிறது.

பிரயாணிகளுக்கு; விதிக்கும் கட்டண உயர்வே பொதுமக்களின் மீது விழுகிற பாரம் என்று நினைத்துச் சிலர், சரக்குக் கட்டணத்தை மட்டும் ஒரேயடியாக உயர்த்தித் துண்டு விழுவதைப் பூர்த்தி செய்யலாம் என்கிறார்கள். இவர்கள் நினைக்குமளவுக்கு இது சரியான கருத்தல்ல. சரக்குக் கட்டணம் உயர்ந்தால் வியாபாரிகள் பொருட்களின் விலையை உயர்த்தித்தான் அதை ஈடு செய்வார்கள். பொருட்களின் விலை உயர்வை, அவற்றை வாங்கி உபயோகிக்கும் சகல மக்களும் தாங்கியாக வேண்டும். ஆனால் டிக்கெட் கட்டண உயர்வைப் பிரயாணம் செய்பவர் மட்டும்தான் தருகிறார். எனவே, இதில் எது சிலாக்கியம் என்று அவசரப்பட்டு முடிவு செய்துவிட முடியாது.

அரசாங்க பஸ் போக்குவரத்தின் கட்டணத்தைக் குறைப்பதற்குத் தமிழகத்தின் தி. மு. க. அமைச்சரவை நன்முயற்சிகள் எடுத்து வரும் போது, மத்திய காங்கிரஸ் ஆட்சி ரயில் கட்டணங்களை உயர்த்தியிருப்பது மக்கள் நலனில் இக்கட்சிகளுக்குள்ள ஈடுபாட்டைத் தெளிவாகத் தாரதம்மியப்படுத்திக் காட்டுகிறது. ரயில்வே பட்ஜெட்டை அடுத்து வந்துள்ள நிதிமந்திரியின் பொது பட்ஜெட்டில் பெட்ரோல், டீஸல் எண்ணெய், மோட்டார் ஸ்பிரிட் முதலியவற்றின் வரியைக் கணிசமாக உயர்த்தி, பஸ் போக்குவரத்தின் பயனும் பெருகாமல் தடுத்துவிட்டனர். இதனால் மக்களிடம் காங்கிரஸுக்கு உள்ள கொஞ்சநஞ்சம் செல்வாக்கும் அடியோடு அழிந்து விடும். ஸ்ரீ மொரார்ஜி தேசாய் அவர்கள் ரூபாயின் மதிப்பைப் போல் காங்கிரஸின் மதிப்பும் பூரணமாகக் குறைய வழி வகுத்து விட்டார் என்பது விரைவிலேயே தெரியும்.

ஸ்ரீ மொரார்ஜியின் பட்ஜெட்டினால் புதிதாக அதிக பாரம் சுமத்தப்படவில்லை என்று சிலர் கூறுவது விசித்திரம். எலும்புகள் இற்று நொறுங்கி விழுமளவுக்கு ஏற்கெனவே பளுவைத் தாங்கும் பொதுமக்களின் சுமையைக் குறைத்தே தீர வேண்டிய தருணத்தில் புதிதாக அதிக பளுவை ஏற்றவில்லையே என்று பாராட்டுவது பொருளற்ற காரியம்.

பொதுமக்களை நேரடியாகத் தாக்குகிறது இந்த பட்ஜெட். உஷ்ணப்பிரதேசமான இந்தியாவில் காலணிகளுக்குப் பெரும் வரி விதிக்கும் கொடுமையை என்னென்பது? காப்பியும் தேநீரும் ஓரளவு நரம்புத்தளர்ச்சியும் போதையும் உண்டாக்குவனவா யிருக்கலாம். ஆனால் காருண்யமிக்க காங்கிரஸாட்சியில், சோர்வு தவிர வேறெதுவும் காண முடியாத இந்தியக் குடிமகனுக்குச் சுறுசுறுப்பும் உற்சாகமும் அளித்து, ஓரளவு அவன் பசியை மந்தப்படுத்தி வந்த இப்பானங்களின் விலையை ஏறச் செய்திருப்பது அநியாயம்.

'நூற்றைம்பது கோடி ரூபாய் சிக்கனப்படுத்த மத்திய நிருவாகத்திலும் ராணுவத்திலும் இடம் உண்டு. இதைச் செய்திருந்தால் புது வரிகளே வேண்டியிராது' என்று ஆசாரிய ரங்கா கூறி யிருப்பது முற்றிலும் உண்மை. மத்திய – ராஜ்ய திட்டச் செலவுகளுக்காகச் சுமார் 1800 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் அவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்யாத – உடனடியாகப் பயன் தராத – அம்சங்களைக் கணிசமாக வெட்டி யிருந்தால் பல இனங்களில் வரியைத் தளர்த்தி நாட்டுப் பொருளாதாரத்துக்குச் சிறிது தெம்பூட்டியிருக்க முடியும். ஆனால் காங்கிரஸிடம் மீண்டும் மத்திய ஆட்சியைத் தந்ததற்காக இந்தியப் பிரஜைகளுக்குத் தண்டனை கொடுத்து விட்டார் நிதி மந்திரி. காங்கிரஸ் ஆட்சியாளர்கள் தண்டனைபெறும் நாளும் இயற்கை நியதிப்படி ஏற்பட்டேயாக வேண்டும்.

காமகோடியின் கருணைமொழி



ஒரு ஜன்மத்துக்கு ஏற்பட்ட ஒரு தாயையே தெய்வமாகக் கொண்டாட வேண்டும். அம்பிகையோ எந்த ஜன்மத்துக்கும் தாய். இந்த உலகத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் நாலைந்து குழந்தைகளுக்கு ஒருத்தி தாயாக இருக்கிறாள். எல்லாக் குழந்தைகளுக்கும் எல்லாக் காலத்திலும் தாயாக இருப்பவள் அம்பிகை. உலகம் முழுவதிலும் உள்ளவர்கள் யாவரும் சகோதரர்களே. பட்சி புழு எல்லாம் நம்முடைய சகோதரர்களே. இவ்வளவு சகோதரர்களுக்கும் ஒரு தாயாக இருப்பவள் அம்பிகை. அவளது உதரத்திலிருந்து உண்டானவர்கள் இத்தனை சகோதரர்களும். 'தாயாரைத் தெய்வமாக நினை' என்று ஔவையாரும், உபநிஷத்தும் சொல்வதால் அப்படி நினைக்க முடியும் என்பது தெரிகிறது. இதையே திருப்பித் தெய்வத்தைத் தாயாக நினைப்பதுதான் அம்பிகை வழிபாடு. நாமெல்லோரும் குழந்தைகளாகையினால், பரமாத்மாவை அம்பிகையாக, அதாவது தாயாக, நினைத்தால் அப்படியே வந்து அநுக்கிரகம் செய்வாள்.



ராஜாஜியின் கருத்துக்கள்

'காங்கிரஸல்லாத மந்திரிசபைகள் பயங்கரமான பிரச்னைகளைப் புறக்கணித்துவிட்டு, தாங்கள் பொதுஜனங்களிடம் பெயரெடுப்பதிலேயே கவனம் செலுத்துகின்றன' என்று ஒரு பத்திரிகை நிருபர் எழுதியிருக்கிறார். தேசத்தின் பயங்கரப் பிரச்னைகளை முற்றிலும் அலட்சியம் செய்துவிட்டு, கட்சி முன்னேற்றத்தை மட்டும் கருத்தில் கொண்டு காங்கிரஸ் காரியக் கமிட்டி தீர்மானங்கள் நிறைவேற்றியிருப்பதை இந்தியப் பத்திரிகை உலகு கண்டித்துள்ள சமயத்தில் இந்த நிருபர் இவ்வாறு எழுதியுள்ளார்!

வரி உயர்வால் ஏற்பட்ட விளைவைச் சமாளிக்க எண்ணி மேலும் வரி விதிப்பதும், வாங்கிய கடனைத் தீர்ப்பதற்காகப் புதுக் கடன் வாங்குவதும், ஏற்கெனவேயுள்ள சர்க்கார் தொழில் துறைகள் அவமானகரமாகச் செயல் புரிந்து வருவதைத் தடுப்பதற்குப் பதிலாகப் புதிதாக பாங்கு, பொது இன்ஷூரன்ஸ் ஆகியவற்றைச் சர்க்கார் வசமாக்குவதும், பிரிவினைகளால் பாதிக்கப்பட்ட விவசாயத் துறையில் மேலும் பிரிவினை உண்டாக்குவதும், முன்பு தந்த வாக்குறுதிகளைக் காப்பாற்ற முடியாததால் மேலும் புதிய வாக்குறுதிகள் தருவதும் பரிகாரமாகா. சர்க்காரின் கருத்துக்கள் முற்றிலும் மறுதிசையில் திரும்பியாக வேண்டும். பழைய மோட்டார் வண்டியில் 'ரிவர்ஸ்' எடுப்பது சிரமம்தான். அதற்காகத் தவறான பாதையிலேயே போய்க் கொண்டிருப்பார்களா?

* * *

புது ராஷ்டிரபதியாகத் தேர்வு செய்யப்பட்டுள்ள டாக்டர் ஜாகிர் ஹுஸைன் அவர்கள் காங்கிரஸ் மந்திரி சபையின் காரியங்கள் யாவற்றுக்கும் ஒப்புதல் அளிக்கும் ரப்பர் ஸ்டாம்பாக இருந்து விடுவாரோ என்பதே அவரைத் தேர்தலில் ஆட்சேபித்து எழுப்பப்பட்ட கருத்து. அக்கருத்து சரியானதல்ல என்று நிரூபிக்க வேண்டும் என அவர் விரும்பினாராயின் அவர் அச்சமின்றித் தமக்கே உரிய ஒரு முறையில் நடந்துகொள்ளத் தீர்மானம் செய்து கொள்ள வேண்டும். காங்கிரஸ் கட்சி இழந்துவிட்ட வசியத்தை மீண்டும் பெறுவது எப்படி என்பதிலேயே இன்றைய மத்திய மந்திரி சபை தனது சிந்தனை முழுவதையும் வீண் செய்து வருகிறது. இவ்வாறின்றி, தேசத்தின் பொருளாதாரத்துக்குப் புத்துயிர் தருவதிலேயே கூர்ந்த ஈடுபாடு கொள்ளக் கூடிய ஒரு தேசிய சர்க்காரை அமைக்குமாறு புதிய ராஷ்டிரபதி பிரதமரைப் பணிக்க வேண்டும். தேசிய சர்க்காரில் இடம் பெறக் கூடிய அனைவரின் ஒன்று சேர்ந்த அரசியலறிவினால்தான் இன்றைய பொருளாதாரப் பிரச்னையைத் தீர்க்க முடியும். இன்றைய மத்திய அரசாங்கம் தேசிய சர்க்கார் அமைப்பதற்கு மறுத்துத் தன் வழியே செல்வதெனப் பிடிவாதமாக இருந்தால், ராஷ்டிரபதி தம் பதவியை விட்டுவிடுவதற்கு முன்வர வேண்டும். அப்போது தேசமே அவர் செய்தது சரியா, மந்திரி சபை செய்தது சரியா என்பதற்குத் தீர்ப்புக் கூறிவிடும். ராஷ்டிரபதி இவ்வாறு செய்வது சரித்திரத்திலேயே ஒரு புதுமையாயிருக்கும். ஆனால் இப்படிப்பட்ட ஒரு சரித்திரம் காணாப் புதுமையாலன்றி, இந்தத் தேசத்தின் பொருளாதாரம் உயிர் பிழைக்க வழியில்லை. பிரச்னைகளில் முடிவு எடுக்கும் அதிகாரத்தை அரசியல் சாஸனம் ராஷ்டிரபதிக்கு வழங்காதிருக்கலாம். ஆனால் ராஜ்யத்தின் அதிமுக்கியமான ஸ்தானத்தை வகிக்கும் ஒருவர், பதவியிலிருந்து விலகுவதன் உள்ளார்ந்த சக்தியை யாராலும் மறுக்க முடியாது.

அல்லது டாக்டர் ஜாகிர் ஹுஸைன் அவர்கள் மத்திய சர்க்காரின் மடமைகளுக்கு அடங்கியேதான் ராஷ்டிரபதி பவனத்தில் அமர்ந்திருப்பாரா? இப்படிப்பட்ட ஒரு புகழற்ற நிலையை அநுமானிக்க டாக்டர் ஜாகிர் ஹுஸைன் அவர்களின் பூர்வ வாழ்வு அநுமதிக்கவில்லை. 'சம்பிரதாயம்' என்பது அவர் தீர்க்கமாகச் சிந்திப்பதையோ உன்னதமாகச் செயலாற்றுவதையோ தடுத்ததில்லை. மகமத் அலி அவர்களும் ஷௌகத் அலி அவர்களும் தீவிரமாக ஆதரித்த காந்திய இயக்கத்தின் தொடக்கத்தில் இதைக் காண முடிந்தது. அந்தத் தீர சகாப்தத்தை நினைவில் கொண்டு இன்னும் ஜீவியவந்தர்களாக உள்ள ஒருசிலரில் நான் ஒருவன். இப்போதும் டாக்டர் ஜாகிர் ஹுஸைன் அவர்கள் சந்தர்ப்பத்தின் தேவைக்கு ஏற்ப ஓங்கி நிற்பார், காலத்தின் அறைகூவலை ஏற்பார் என்று நம்புகிறேன். 'மதச் சார்பின்மை' என்பது அவரது ராஷ்டிரபதி பதவிக் காலத்தின் பெருமையல்ல. பழைய கனவின் ஒரு துண்டு தாம் என்பதை அவர் வெளிக் காட்டி, அதன் மூலமே தமது ராஷ்டிரபதி பதவிக் காலத்துக்கு ஒளியூட்ட வேண்டும்.

காங்கிரஸல்லாத ராஜ்ய சர்க்கார்களும் அவற்றின் சட்டசபைகளும், எந்தச் சாக்குக் காட்டி மத்திய சர்க்கார் தம்மைக் கலைத்துவிடுமோ என்று அஞ்ச வேண்டியதில்லை. இப்போதே அவை தில்லியில் தேசிய சர்க்காரை அமைக்க வேண்டுமெனத் தீர்மானங்கள் செய்து இதை ராஷ்டிரபதிக்கு அழுத்தமாக எடுத்துச் சொல்ல வேண்டும். ராஜ்யங்களில் பலதரப்பட்ட கட்சி சர்க்கார்கள் அமைந்திருக்கும்போது, சலுகையாளர்களை வைத்துக் கொண்டு மாயம் செய்தே மத்தியில் ஒரே கட்சி தொடர்ந்து ஆட்சி புரிகிற அசம்பாவிதத்தை அகற்றி, தேசிய அரசாங்கம்

அமைக்க வேண்டுமெனப் புதிய ராஷ்டிரபதியிடம் காங்கிரஸல்லாத ராஜ்ய சர்க்கார்கள் உடனடியாக வற்புறுத்த வேண்டும்.

ஃஃஃ

சிறிய குடும்பமாகக் கட்டுப்படுத்திக் கொள்பவர்களுக்குச் சர்க்கார் போனஸ் தரக்கூடும் என்று ஒரு பத்திரிகைச் செய்தி தெரிவிக்கிறது. பணத்தை வாரி இறைத்து எதை வேண்டுமானாலும் சாதித்து விடலாம் எனக் காங்கிரஸ் மந்திரிகள் நம்புகிறார்கள் போலும்! எவ்விஷயமாயினும் சரி — தேர்தலில் வோட்டுப் போடச் செய்வதோ, கருத்தடை செய்து கொள்ளச் செய்வதோ, அல்லது மற்ற விஷயங்களாயினும் சரி — லஞ்சம் தந்து மக்களின் மனத்தை மாற்ற முயல்வதைவிட, அவர்களுக்கு அறிவு புகட்டி முடிவெடுக்கச் செய்வதே சிலாக்கியம் என்று மந்திரிகளுக்கு எப்போது ஞானோதயம் ஆகுமோ?

தமது இலாகாவுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தைச் செலவழிப்பதில் டாக்டர் சந்திரசேகரன் அவர்கள் இவ்வளவு துடியாக இருக்க வேண்டியதில்லை. சர்வதேச அரங்கில் மூண்டுள்ள சச்சரவுகள் வலுத்தால் நம்மையும் அவை நிச்சயம் சூழ்ந்துகொள்ளும். அணு ஆயுத காலத்திய சச்சரவுகள் ராணுவத்தினரை மட்டுமின்றி அனைவரையும் தாக்கும் என்பதை மறப்பதற்கில்லை.

உற்பத்தியில் லாபம் காட்டுவது போல் தொடர்ந்து தாமாக இயங்கக் கூடிய விஷயங்களுக்கு மட்டுமே ஊக்கம் தருவது யுக்தம். குடும்பக் கட்டுப்பாட்டுப் பரிசும் போனஸும் இப்படிப்பட்டவையல்ல. சிறிய குடும்பத்துக்குப் பரிசு தருவதற்கு முடிவே இராது. இதனால் ஜனத் தொகையைக் கட்டுப்படுத்துவதில் ஏற்படுகிற சேமிப்பை விட அதிகமாக போனஸ் பணம் தர வேண்டியிருக்கும். லஞ்சம் தந்து கருத்தடையைப் பிராபல்யம் செய்ய நினைப்பதைவிட சிறிய குடும்பத்துக்குப் பரிசு தருகிற யோசனை மதியீனமானது. 'லஞ்சம்' என்ற ஒரு பிரிஸ்கிருப்ஷனைப் பல பெயரில் தருகிற ஏமாற்று வைத்தியர்களின் கைகளில் நாம் அகப்பட்டுக் கொண்டோம்.

ஃஃஃ

கள்ளுக்கடை மறியலின்போதோ, அல்லது வேலை நிறுத்தம் செய்கிற தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யாதவர்களைத் தடுக்கும் போதோ கூட அஹிம்சை முறையைத் தான் கைக்கொள்ள வேண்டுமா என்பதைக் காந்தியடிகள் விவாதித்திருக்கிறார். எந்தச் சூழ்நிலையிலும் மனிதனின் பௌதிக பலத்தால் ஒரு தடுப்புச் சுவர் எழுப்புவது ஹிம்சை முறைதான் என்று அவர் தெளிவாக, அழுத்தமாக விதித்திருக்கிறார். காந்திய இலக்கணங்களுக்கு இன்று சிறிதேனும் மதிப்பு இருக்குமாயின் தற்போது ஆபீஸ்களிலும் தொழில் ஸ்தாபனங்களிலும் நிர்வாகத்தினரை முற்றுகை இட்டு, நகரவொண்ணாமல் செய்வதை ஹிம்சை முறை என்றே கூற வேண்டும். ஹிந்தியில் 'கேரா' அல்லது 'கேரு' என்பதற்கு 'முற்றுகை' என்று பொருள். முற்றுகை இடுவது நிச்சயமாக வன்முறைதான். இது தமது கருத்தினாலோ பொதுமக்கள் கருத்தினாலோ ஒருவரின் மனத்தை மாற்றாமல், பௌதிக பலத்தையே சார்ந்த முறை. இது தங்களது குறைகளுக்கு ஓர் உருவம் கொடுத்து வெளிக்காட்டும் அறிவிப்பு மட்டுமல்ல. மென்மேலும் வன்முறைக்கு இடம் தருகிற ஒரு செயலே 'கேரா'. இம்முறையைப் பொறுத்துக் கொண்டிருப்பதால் ஏற்படக்கூடிய விளைவுகள் பல. மத்திய சர்க்காரின் அரசியல் கொள்கைக்கு மாற்றாக அமைக்கப்பட்டுள்ள ராஜ்ய சர்க்கார்கள் கலைக்கப்பட ஏதுவாகும் என்பது அவற்றில் ஒன்று.

'கேரா' பற்றிய பல செய்திகளைப் பார்ப்போம்:

> ஒரிஸ்ஸா முதன் மந்திரி ஸ்ரீ ஆர். என். சிங்தேவ் அவர்கள் கேரா சட்ட விரோதமானதென்றும், வெறுக்கத் தக்கதென்றும் கூறினார். இந்திய வர்த்தக சங்கத்தில் பேசிய அவர் 'கேரா ஒரு விஷமயமான உபாயம்' என்றும் 'விலங்குகளின் நடத்தையை அநுசரிப்பது' என்றும் கூறினார். ஒரிஸ்ஸாவில் இந்த முறை மேற்கொள்ளப்பட்டால் சர்க்கார் மிக உறுதியான எதிர்ப்பு நடவடிக்கை எடுக்கும் என்றும் கூறினார்.

பள்ளியில் 'கேரா'

வங்காளத்தில் 'பர்கானா மாவட்டத்திலுள்ள ஒரு பெண்கள் பள்ளியின் மாணவிகள் தலைமை ஆசிரியையை அவரது அறையில் சிறைப்படுத்தினர்.

ஆசிரியை ஒருவரை வேலை நீக்கம் செய்ததை ஆட்சேபித்து அவர்கள் இந்த நடவடிக்கை எடுத்தனர்.

தலைமை ஆசிரியை எப்படியோ தப்பித்துக்கொண்டு செக்ரிடேரியட்டுக்குச் சென்று கல்வி மந்திரியிடமும் தொழில் மந்திரியிடமும் தமது கதையைக் கூறினார். ஆனால் அவர்களால் இப்பிரச்னைக்குத் தீர்வு காண முடியவில்லை.

கோவையில் 'கேரா' பாணி

கோவைத் தொழிலாளிகள்—குறிப்பாக நெசவாலைத் தொழிலாளிகள் — தங்கள் கோரிக்கையை முதலாளிகள் ஏற்கச் செய்வதற்காக 'கேரா'வில் ஒரு புதிய பாணியை முயன்று வருகிறார்கள்.

நூற்றுக் கணக்கான தொழிலாளிகள் மானேஜிங் ஏஜென்ட் அல்லது மானேஜிங் டைரக்டர் வீட்டுக்கு அணிவகுத்துச் சென்று வீட்டைச் சுற்றி மணிக் கணக்கில் உட்கார்ந்து விடுகிறார்கள். காலையிலிருந்து மாலை வரையிலோ அல்லது 24 மணி நேரமோ உட்கார்ந்து விடுகிறார்கள். கோஷங்களைக் கிளப்புகிறார்கள். சில சமயங்களில் வசைமாரியும் எழுப்புகிறார்கள்.

ஹிம்சை என்று சொல்லத் தக்கபடி யாரும் பௌதிகமாகத் தடை செய்யப்படவில்லை எனினும், இது நடைமுறையில் முதலாளி குடும்பத்தினரைச் சிறை செய்வதாகவே உள்ளது. சொந்த வாழ்க்கை

குறித்து என்ன நிந்தனை கிடைக்குமோ என்ற பயத்தில் குடும்ப அங்கத்தினர்கள் வெளியில் தலைகூடக் காட்டுவதில்லை.

இதைப் போலீசார் வெறுமே பார்த்துக் கொண்டு நிற்பாராயின், அது சட்டத்தைப் புறக்கணிப்பதேயாகும். இந்தக் காரியக் கிரமத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட குற்றங்கள் இழைக்கப்படுகின்றன. போலீஸின் தலையீட்டை ஈர்க்கும் வகையில் சட்ட விரோதமாகப் பலர் ஒன்று கூடுவது இக் குற்றங்களில் சிறிய ஒன்றேயாகும்.

'தடுப்பு அணி', 'சூழ்ந்து கொள்ளுதல்', 'முற்றுகை', 'கேரா' என்று எந்தப் பெயரில் சொன்னாலும் சரி — ஆபீஸோ, ஆலையோ, தனியார் துறையோ, சர்க்கார் துறையோ, பள்ளியோ, கல்லூரியோ, எதில் நடந்தாலும் சரி — மக்கள் சட்டப்படி தொழில் செய்யும் இடத்தில் இவ்வாறு செய்வது தவறான தடுப்புச் செயலாகும். இதைச் செய்யும் கோஷ்டி சட்ட விரோதமான கூட்டமேயாகும். பிறர் சுதந்திரமாக உள்ளே செல்லவும், வெளியே போகவும் இடமளித்து, யாரையும் நிந்தியாமலும், உபத்திரவப் படுத்தாமலும் செய்கிற மறியல்தான் உண்மையான மறியல். இவை இல்லாவிடில் அது பீனல் கோடின் கீழ் வரும் குற்றமே. அதோடு காந்தியவர்களின் அஹிம்சா மார்க்கத்துக்கும் விரோதமாகும். கேராக்களைக் கண்டித்து நீக்காமல் பௌதிகத் தடைகளைச் சகித்துக் கொள்வதெனில், இப்போதே சிரம தசையில் உள்ள தொழில் முயற்சிகள் முற்றிலும் தலைகுப்புற விழுந்து மாளும். இதனால் முதலாளிகளும் நிர்வாகிகளும் மட்டுமின்றித் தொழிலாளிகளும் பாதிக்கப்படுவார்கள்.

ஃஃஃ

மும்மொழித் திட்டம் மூன்று காரியங்களுக்கு நல்லது. 1. ஹிந்தியை மற்ற மொழிப் பகுதிகளில் பரப்புதல்; 2. அண்டை ராஜ்யங்களின் மொழிகளை முற்றிலும் புறக்கணித்து இயற்கையின் தேவைக்கு மாறாகச் செல்வது; 3. இந்தியாவின் பழம் பெரும் மொழியான ஸம்ஸ்கிருதத்தைக் கொல்வது.

கல்வித் துறை நிபுணர்கள் இந்த நிலவரத்தைப் பரிசீலனை புரிய வேண்டும். நான் எண்ணுவது யாதெனில், பிரதேச மொழியையும் ஆங்கிலத்தையும் கட்டாய பாடமாக்கலாம். மூன்றாம் மொழியாக ஹிந்தியையோ, ஸம்ஸ்கிருதத்தையோ, அண்டை ராஜ்ய மொழியையோ தேர்வு செய்கிற உரிமை மாணாக்கர்களுக்கு அளிக்கப்படலாம். எம்மொழியைப் படிப்பதற்கும் போதிய தூண்டுதல் தரவேண்டும்.

ஃஃஃ

ஸ்ரீ ஸுதீர் கோஷ் அவர்களின் மறைவு குறித்து என் துயரம் தீரவில்லை. அவர் சுகவீனமுற்றுத் தில்லி ஆஸ்பத்திரி ஒன்றில் படுத்திருந்த போதிலும், அவர் அரசியல் சாஸனத்தின் மீது விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொள்ளவில்லை என்பதால் அவரது வேட்பு மனுவைத் தேர்தல் கமிஷன் நிராகரித்தது. இதுவே அவரது முடிவுக்குக் காரணமாயிருக்குமோ என எண்ணுகிறேன். அடிக்கடி அரசியல் சாஸனத்தின் ஜீவாதார அம்சங்கள்கூட கட்சி அடிப்படையில் மாற்றப்படும்போது, அதனிடம் விசுவாசப் பிரமாணம் செய்வதை இவ்வளவு பெரிதுபடுத்த வேண்டியதில்லை.

'சுதந்திரமான சமுதாயத்துக்கு அதன் ஜீவசக்தியேதான் காப்பு. விசுவாசப் பிரமாணங்கள் எடுத்துக் கொள்ளாமலேயே கல்வி நிலையங்கள் நல்ல முறையிலும், நாச வேலை - அரசியல் தலையீடு ஆகியன இன்றியும் நடந்து வருகின்றன' என்று அமெரிக்க சர்வகலாசாலைகளில் விசுவாசப் பிரமாணத்தைப் புகுத்துவது பற்றி 'ஸாடர்டே ரிவ்யூ' கூறுவது நமக்குப் பொருந்தும்.

ஃஃஃ

துர்ப்பாக்கியவசமாக, இஸ்ரேலுக்கு எதிராக நிற்பதே இந்திய சர்க்காரின் கொள்கையாகி விட்டது. எனினும் இன்று மத்தியக் கிழக்கில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையில் இந்தியாவால் குறிப்பிடத்தக்க முறையில் எதுவும் செய்ய இயலாது. இஸ்ரேலுக்கு நீதி வழங்கப்படவேண்டும் என்பதில் அமெரிக்கா பிரிட்டன் இரண்டும் அக்கறைகொண்டிருப்பதால், இறுதியில் ஒரு திருப்திகரமான உடன்பாடு ஏற்படும் என்று நம்ப இடமுண்டு. இப்போது பத்திரிகைகளில் தெரிவிக்கப்படும் போக்கு வெறுக்கத்தக்க முறையில் வளர்ந்து வந்தாலும் இவ்வாறு நம்ப இடமிருக்கிறது. எகிப்து அதிபர் நாஸர் அவர்கள் திட்டமிட்டிருப்பதுபோல் இஸ்ரேலை நெரித்துக் கொல்வதற்கு உலகம் அனுமதிக்காது.

அகாபா வளைகுடாவை அடைத்து, இஸ்ரேலின் கப்பல் போக்குவரத்தைத் தடுத்தால் அமெரிக்கா தலையிடாது என்ற தவறான கருத்தில் நாஸர் இருக்கக் கூடும். அவருக்கு அமெரிக்காவும் பிரிட்டனும் விஷயத்தைத் தெளிவு செய்ய வேண்டும். சச்சரவுக்குக் காரணமான நாடுகளில் ஒன்றோ சிலவோ தப்பான அனுமானங்களின்மீது நடவடிக்கை எடுப்பதால்தான் சமீப காலத்துப் போர்கள் மூண்டன என்று காலம்சென்ற ஜனாதிபதி கென்னடி அவர்கள் கூறியது நினைவுகொள்ளத் தக்கது. அமெரிக்கா தலையிடாது என்று வடகொரியர்களும், செஞ்சீனா தலையிடாது என்று ஐக்கிய நாட்டு சபையும் தப்பாக அனுமானித்ததால்தான் கொரியப் போர் நிகழ்ந்ததென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. 'விளிம்பில் உலாவும் கொள்கை' பலிக்காது என்று நாஸருக்குத் திட்டவட்டமாக உணர்த்த வேண்டும். வியட்நாம் விஷயமாகவும், அது குறித்த உலகத்தின் கண்டன விமரிசனத்தாலும் அமெரிக்கா அலுப்படைந்தாலும் அடையக் கூடும்; ஆனால் இஸ்ரேலை அது ஒருகாலும் கைவிட முடியாது.

இந்தியாவின் நடுநிலைமை நகைப்புக்கிடமாகிவிட்டது. இந்திய 'சர்க்கார் குரல் கொடுக்கு முன்பே சூயஸ் பிரச்னையின்போது நாஸரை ஆதரித்த நானே இப்போது இந்தியா இஸ்ரேலுக்கு ஆதரவு தந்து, அதன் கடற் போக்குவரத்து தடைப்படாதிருக்க வலிவுதர வேண்டும் என்கிறேன்.





ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கு பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் பிரிவுபசார விழா நடத்திக் கௌரவித்தனர். ராஜ்ய சபாவின் முன்னாளையத் தலைவரும் புதிய ராஷ்டிரபதியுமான ஜாகிர் ஹுசேன் மலர்மாலை அணிவித்து டாக்டர் ராதாகிருஷ்ணனை வழியனுப்புகிறார்.

ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்வாமிகளின் ராமாயண உபன்யாசங்களின் கன்னட ஆக்கமாகிய 'ராமகதாஸார' என்ற நூலைச் சமீபத்தில் மைசூர் முதல் மந்திரி திரு நிஜலிங்கப்பா, பெங்களூரில் வெளியிட்டார்.





பம்பாய் பாரதி கலாமன்றத்தினர், 'சங்கீத டைரக்டர் பர்மன் சங்கீத மாலை' நிகழ்ச்சி நடத்தி, அதில் லதா, முகேஷ், ரஃபி போன்ற சிறந்த ஹிந்திப் பாடகர்களைக் கலந்துகொள்ள வைத்தனர்.

கோயம்பேடு ஸ்ரீகுசலவபுரீசுவரர் ஆலயத்தில் அருணகிரிநாதர் திருவிழா சமீபத்தில் வெகு விமரிசையாக மேயர் திரு இரா. சம்பந்தம் தலைமையில் நடைபெற்றது. அருணகிரிநாதரின் திருப்புகழில் முதல் பரிசைப் பெற்ற குமாரி வசந்தாவுக்குத் திரு எம். பக்தவத்ஸலம் கேடயம் வழங்கினார்.

ஓய்வு பெற்றும் ஓய்வு பெறாதவர்





கே. எஸ். ராமானுஜம்

“டில்லி எப்படி இருக்கிறது? அங்கு அரசியல் நிலைமை என்ன?” இப்படிக் கேட்டவர் டாக்டர் ராதாகிருஷ்ணன்! சென்னையிலுள்ள ‘கிரிஜா’ என்ற பெயர் கொண்ட அவரது இல்லத்தில் ஓய்வுபெற்ற ராஷ்டிரபதி அவர்களை நான் சந்திக்கச் சென்றபோது தான் அவர் இவ்விதம் வினவினார்.

நான் தலைநகரில் ஒருசில தினங்கள் தங்கிவிட்டு அண்மையில்தான் சென்னை திரும்பியதாகச் சொன்னேன்.

டாக்டர் ராதாகிருஷ்ணன் காற்றைக் குளிர்விக்கும் சாதனம் பொருத்தப்பட்ட தமது அறையில் தாம் வழக்கமாக உட்காரும் சாய்மான நாற்காலியில் விச்ராந்தியாக அமர்ந்திருந்தார். அந்த அறையை அவர் தமது படிப்பகமாகவும் படுக்கை அறையாகவும் பயன்படுத்தி வருகிறார். அறையின் ஒரு பகுதியில் நீளமான புத்தக அலமாரி. அதில் சுமார் மூந்நூறு புத்தகங்கள் இருக்கலாம். இதே புத்தக அலமாரியில் ஒரு பக்கத்தில் 1956ல் காலமான அவரது மனைவியின் படம் ஒன்று வைக்கப்பட்டுள்ளது. டாக்டர் ராதாகிருஷ்ணன் தமது மனைவியைப் பற்றி முன்பொரு முறை எழுதியிருக்கிறார்: “என் முதுமைப் பிராயத்தில் எனக்கு ஹெகெல் கூறிய ஒரு வாசகம் அடிக்கடி நினைவுக்கு வரும். அதாவது ‘மனிதன் வாழ்க்கையில் நிறைவு பெறுவது எப்போது என்றால் தனக்கு ஏற்றதான ஒரு உத்தியோகத்தையும் தான் மனமாரக் காதலிக்கும் ஒரு மனைவியையும் அடையும்போதுதான்.’ ”

இதைத் தவிர இந்த அறையில் மகாத்மா காந்தி அவர்களது புகைப்படம் ஒன்றும்; வெண்கலத்தாலான புத்தர் சிலை ஒன்றும்; தந்தத்தால் செய்யப்பட்ட கிருஷ்ணன், சரஸ்வதி உருவங்களும்; பக்த மீராவின் ஓவியம் ஒன்றும் இடம் பெற்றுள்ளன.

நான் இன்று அவரைச் சந்திக்கும்போது அவர் சென்னைக்கு வந்து பதினைந்து நாட்கள் ஆகியிருந்தன. இதற்கு முன் பதினைந்து ஆண்டுகள் அவர் புதுதில்லியில் தேசியப் பிரச்னைகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவராக விளங்கி வந்திருக்கிறார். முதலில் உப ராஷ்டிரபதியாகவும் பிறகு ராஷ்டிரபதியாக அடுத்தடுத்து இரு தடவைகளிலும் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார். இந்த இரு உன்னதமான பதவிகளிலும் அவரது வாழ்க்கை முழுமை பெற்றுக் கனிந்திருக்கிறது. அடுத்தடுத்து மூன்று பிரதம மந்திரிகளுக்கு வழிகாட்டியாகவும் நண்பராகவும் விளங்கி வந்திருக்கிறார் என்பதோடு நாடெங்கிலுமுள்ள பலப் பல முதன் மந்திரிகளும் மற்ற முக்கிய தலைவர்களும் பல விஷயங்கள் குறித்து அவர் கருத்தை அறிய விரும்பி

வந்து யோசனைகளைப் பெற்றுச் சென்றிருக்கிறார்கள்.

பதினைந்தாம் தேதி மாலை எதிர்பாராத அளவுக்கு ஒரு பெரும் கூட்டம் சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனில் கூடியிருந்தது. ஓய்வு பெற்றுத் திரும்பும் ராஷ்டிரபதிக்கு வரவேற்பு நல்க. இக்கூட்டத்தில் அரசாங்க உயர்அதிகாரிகள், அபிமானிகள், நண்பர்கள், பொதுமக்கள் போன்ற பலதரப்பினரும் அடங்கியிருந்தனர்.

அநேகமாக இனி தம் வாழ்நாள் முழுவதையும் அவர் சென்னையிலேயேதான் கழிப்பார் என்று எதிர்பார்க்கலாம். தமது நெருங்கிய உறவினர்களுக்கிடையில் அமைதியான வாழ்க்கை நடத்துவார் அவர். இளம் பிராயம் முதற்கொண்டே அவர் இதயத்தைக் கவர்ந்த இந்தக் 'கிரிஜா' இல்லத்தில் இனி அவர் ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட்டிருப்பார். கம்பீரமாகத் தோற்றமளிக்கும் இந்த இல்லத்திலிருந்து மெரினாக் கடற்கரை ஒரு கிலோமீட்டர் தூரத்தில்தான் இருக்கிறது. வீட்டின் வாசலில் நீண்ட 'போர்டிகோ'வும் அதற்கு முன்பாக விசாலமான கரும் பச்சை நிறப் புல்தரையும் உள்ளன. நீண்ட காலத்துக்கு முன்பே அவரால் கட்டி முடிக்கப்பட்டதாயினும் தமக்கு மிகவும் பிடித்தமான இந்த வீட்டில் அதிகமாகத் தங்கி இருக்கும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியதில்லை.

முகமன் கூறிய பிறகு டாக்டர் ராதாகிருஷ்ணன் என்னைக் கேட்டார்: ''ஓய்வு பெற்ற ராஷ்டிரபதி பற்றி எழுத விரும்புவதாகக் கூறுகிறாயே, அதற்கு என்ன அர்த்தம்? எனக்கு ஓய்வு பெறுவது என்பதே கிடையாது. மக்களின் நல்வாழ்வு குறித்த சிந்தனையே என் மனத்தை நிரப்பி யிருக்கிறது.''

''நான் ஏதும் தவறான அர்த்தத்தில் 'ஓய்வு பெற்ற ராஷ்டிரபதி' என்று குறிப்பிடவில்லை'' என்று அவசரம் அவசரமாகச் சமாதானம் சொல்ல முற்பட்டேன்.

டாக்டர் ராதாகிருஷ்ணன் சிரித்தார். ''கவலைப்படாதே. உன்னை நான் சரியாகத்தான் புரிந்து கொண்டிருக்கிறேன். ஆனால் நான் இவ்வளவு குறுகிய காலத்தில் உனக்கு என்ன புதிய விஷயத்தைக் கூற முடியும்?''

''உங்கள் தேக நலம் குறித்து; உங்கள் பொழுதை எப்படிச் செலவிடுகிறீர்கள் என்பது பற்றி... இதையெல்லாம் அறிய மக்கள் விரும்புவார்கள்.''

டாக்டர் ராதாகிருஷ்ணன் யோசித்தபடியே நிதானமாகப் பேசினார்: ''ஓ, அதைச் சொல்கிறாயா? என் உடல்நிலை ஆரோக்கியமாகவே உள்ளது; நான் இங்கு வந்தபோது குளுமையாக இருந்தது. இலேசாக மழையும் பெய்தது. ஆனால் பிறகு தாங்க முடியாத அளவுக்கு வெய்யில் கொளுத்த ஆரம்பித்து விட்டது. ஆயினும் நான் சென்னையை விட்டு எங்கும் சமீப காலத்தில் செல்லப் போவதில்லை.''

''உங்களைப் பார்க்கப் பலர் வருவார்களே?'' என்றேன்.

''மாலை நேரங்களில் நான் பலரைச் சந்திக்கிறேன். இளைஞர்கள், முதியோர்கள் இரு சாராரும் வருகிறார்கள். சாயந்திரம் வீட்டின் முன்னால் உள்ள புல் தரையில் நான் நடக்கும்போது சாலையோடு போகும் சிலர் உள்ளே புகுந்து அவர்களுக்கு என்னிடம் உள்ள அன்பை வெளிப்படுத்துகிறார்கள். சில வாலிபர்கள் தங்கள் வாழ்க்கையைப் பற்றி என்னிடம் சொல்கிறார்கள். தங்களுக்குள்ள பிரச்னைகளைக் கூறவும் துணிகிறார்கள்; யோசனை கேட்கிறார்கள். குழந்தைகள் பலரும் தோட்டத்தில் உலவும் தாத்தாவைப் பார்த்துப் போக வருகிறார்கள். அது எனக்கு ஆனந்தத்தை அளிக்கிறது. வேறு சிலருக்கு ஏதாவது காரியம் ஆக வேண்டியிருந்தால் அதைச் சொல்லி நான் அவ்விஷயத்தில் அவர்களுக்கு உதவ வேண்டும் என்று கோருகிறார்கள். நான் அதில் தலையிட்டு அவர்களுக்கு உதவும் நிலையில் இல்லை என்பதைச் சொல்ல எனக்கு வருத்தம்தான். ஆயினும் உண்மையை அப்பட்டமாகக் கூறத்தானே வேண்டியிருக்கிறது? ஆனால் இது அவர்களுக்குப் புரிவதில்லை.''

''நாட்டின் நலன் குறித்த பிரச்னைகளில் நீங்கள் இனி என்ன செய்யப் போகிறீர்கள்? அவ்வப்போது பத்திரிகைகளில் உங்கள் அறிக்கைகள் வெளியாகுமா?''

''இல்லை. அப்படி ஒன்றும் நடக்காது. இப்போதைக்கு ஆட்சியிலுள்ளோரது கடமைகளில் குறுக்கிட நான் விரும்பவில்லை. அவர்கள் வழியில் செல்லட்டும் என்று இருந்து விடப் போகிறேன். இங்கு வந்ததிலிருந்து எனது பேரன் பேத்திகள், கொள்ளுப் பேரன் பேத்திகள் ஆகியோருடன் அவர்களுக்குச் சமதையாக இருந்து மகிழ்கிறேன்.''

''சமீபத்தில் நீங்கள் என்ன படித்தீர்கள்?''

''நிறையப் படித்தேன்; படித்துக்கொண்டிருக்கிறேன். கடைசியாக பெட்ராண்ட் ரஸ்ஸலின் சுய சரிதையைப் படித்து முடித்தேன். அவர் பேரன்புடன் எனக்கு அந்த நூலின் ஒரு பிரதியை அனுப்பி வைத்திருந்தார். அதைப் படிக்க இப்போதுதான் எனக்கு நேரம் கிடைத்தது.''

தமது அபிப்பிராயத்தைக் கோரியும் மதிப்புரை வழங்குமாறு கேட்டும் பல புத்தகங்கள் தமக்கு உலகெங்கிலுமிருந்து வருகின்றன என்றும் குறிப்பிட்டார் முன்னாள் ராஷ்டிரபதி. சம்ஸ்கிருதம், தெலுங்கு, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பலரகமான நூல்களைத் தாம் படிப்பதாகவும் சுமார் முப்பதாயிரம் புத்தகங்கள் தம்மிடம் உள்ளதாகவும் கூறினார்.

''மேனாடுகளிலிருந்து எனக்குப் பல அழைப்புக்கள் வந்துள்ளன. எனினும் நான் எங்கும் செல்லத் தற்போது விரும்பவில்லை. சென்னையிலேகூட எந்த அழைப்பையும் நான் ஏற்கப் போவதில்லை. சென்னைமக்கள் சார்பில் ஒரு வரவேற்புக் கொடுக்க வேண்டும் என்றார்கள். அதையும் நான் வேண்டாம் என்று மறுத்து விட்டேன்.''

டாக்டர் ராதாகிருஷ்ணன் காலையில் ஆறு மணிக்கெல்லாம் எழுந்து விடுகிறார். ஏழு மணிக்குத் தமது அன்றாட அலுவல்களைக் கவனிக்கத் தயாராகி விடுகிறார். காலையில் ஒரு கப் காப்பியும் எட்டு மணிக்கு ரொட்டியும் பழ ரசமும் அருந்துகிறார். பகலிலும்

இரவிலும் எளிமையான தென்னிந்திய உணவு சாப்பிடுகிறார். வயதானதன் காரணமாக டாக்டர்களின் ஆலோசனைப்படி சில வைட்டமின் மாத்திரைகளை விழுங்குவது தவிர, அவர் தேகம் மிகவும் ஆரோக்கியமாகவே இருக்கிறது.

டில்லியிலிருந்து திரும்பியதும் முதல் ஞாயிற்றுக்கிழமையன்று ராஜாஜியை அவரது இல்லத்தில் சந்திக்கச் சென்றார் டாக்டர் ராதாகிருஷ்ணன். பாரதத்தின் கவர்னர் ஜெனரலாக இருந்து ஓய்வு பெற்றவரும் ராஷ்டிரபதியாக இருந்து ஓய்வு பெற்றவரும் — இருவரும் இங்கு வசிப்பது சென்னை பெற்ற தனிப் பெரும் சிறப்பாகும். இந் நகருக்குள்ள வேறு பல பெருமைகளுக்குச் சிகரமாக அமைகிறது இது. ராஜாஜியும் ராதாகிருஷ்ணனும் சிறந்த, அத்யந்த நண்பர்களாக விளங்கி வந்திருக்கின்றனர். ராஜாஜி கவர்னர் ஜெனரலாக இருந்த போது டாக்டர் ராதாகிருஷ்ணன் அவரது அதிகாரபூர்வமான கடிதத்தைப் பெற்றுக் கொண்டு ருஷ்யாவுக்குப் பாரதத்தின் பிரதிநிதியாகச் சென்றார். அந்த நாள் முதலே இவ்விரு பெருந் தலைவர்களிடையேயும் நட்பு வளர்ந்து இறுகியிருக்கிறது. இனியும் தொடர்ந்து அடிக்கடி சந்திக்கவும் தங்களுக்கு மிகவும் பிடித்தமான விஷயங்களான மதம், தத்துவ சாஸ்திரம் ஆகியவை பற்றிப் பேசவும் முடிவு செய்திருக்கின்றனர்.

டாக்டர் ராதாகிருஷ்ணனைக் காணப் பலர் வருகிறார்கள். அண்மையில் உபராஷ்டிரபதி ஸ்ரீ கிரியும், முன்னாள் உணவு அமைச்சர் ஸ்ரீ ஸி. சுப்பிரமணியமும் வந்து போனார்கள். சென்னைக்கு வந்ததிலிருந்து முதலில் சில தினங்களுக்கு நாள்தோறும் நூற்றுக்கு மேற்பட்ட கடிதங்கள் வந்தன அவருக்கு. இப்போது நாளைக்கு முப்பது அல்லது நாற்பது கடிதங்கள் வருகின்றன. முடிந்தவரை பதில்களைக் கூறி டைப் செய்யச் செய்து தாமே கையெழுத்துப் போடுகிறார்.

குழந்தைகள் தம்மைக் காண வரும்போது தமது கொள்ளுப் பேரப் பிள்ளைகளுடன் சேர்ந்து அவற்றையும் பாடும்படி சொல்கிறார். வேடிக்கையாகப் பேசிக் குழந்தைகளைச் சிரிக்க வைக்கிறார்; பழமொழிகளைச் சொல்கிறார்; சம்ஸ்கிருத சுலோக வரிகளை ஒவ்வொன்றாகக் கூறி, குழந்தைகளைத் திரும்பச் சொல்லச் சொல்லி மகிழ்கிறார்.

டாக்டர் ராதாகிருஷ்ணன் அனாவசியமாக யாருடைய உதவியையும் நாடுவதில்லை. தமது காரியங்களைத் தாமே கவனித்துக் கொண்டு விடுகிறார். பத்திரிகைகளைப் படிப்பதோடு, ஆங்கில, தெலுங்குச் செய்திகளை நாள் தவறாமல் வானொலியில் கேட்கவும் செய்கிறார். வானொலியில் ஒலிபரப்பப்படும் பக்திப் பாடல்களை ரசித்துக் கேட்கிறார்.

சென்னைக்குத் திரும்பியதில் டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ரொம்பவும் சந்தோஷம் என்பதை அவர்கள் இல்லத்துக்கு ஒரு முறை சென்று திரும்பும் யாரும் எளிதில் உணர்வார்கள்.

தருமத் திருவிழா


இன்று நம் நாட்டில் இந்த அளவாவது ஆஸ்திகமும் ஆசாரமும் இருக்கின்றனவென்றால் அவற்றுக்கு முதற்பெரும் காரணம் ஸ்ரீ காஞ்சி சங்கராசாரிய சுவாமிகள்தாம். கடந்த பிப்ரவரியுடன் சுவாமிகள் பீடமேறி அறுபதாண்டுகள் நிறைந்தன என்பதை எண்ணும் போது, இந்த அறுபதாண்டுகள் அவர்கள் எத்தகைய புனிதப் போர் நிகழ்த்தி, அலையை அடுத்து அலையாக வந்த நாஸ்திகத்தையும் ஒழுங்கீனத்தையும் தடுத்து நம்மை ரட்சித்து வந்திருக்கிறார் என்பது தெரிகிறது. அவர் போராடியதாக உருவகித்துச் சொல்வதுகூடத் தவறுதான். ஏனெனில், அப்படி ஒரு வீர எழுச்சியை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளாத அடக்கப் பெட்டகம் அவர். மேலும், போர் என்றால் யாரையோ பகையாகப் பாவித்துத்தானாக வேண்டும். காஞ்சி காமகோடி அதிபர்களுக்குப் பகை என்பது இன்னதென்றே தெரியாது. ஆயினும் அவர்கள் வாழ்வதாலேயே, தாமாக ஆஸ்திகமும் ஆசாரமும் மலர்ந்து வருகின்றன என்பது சர்வ சத்தியம்.

இப்படி ஓர் உபகாரம் செய்து நம்மைக் காத்து வருபவரின் பீடாரோஹண மணிவிழாவைக் கொண்டாட வேண்டும் என்று நாம் யாரையும் கேட்டுக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. மக்கள் தாமாகவே ஆசாரியரின் மணிவிழாவைக் கொண்டாடி வருகிறார்கள்.

ஜூலை மாத மத்தியில் ஐந்து நாட்களுக்குச் சென்னையில் ஸ்ரீ காமகோடி பீடாரோஹண மஹோத்சவக் குழுவினர் சிறப்பான முறையில் மணிவிழா எடுக்கவிருக்கிறார்கள். கருத்தரங்கமும், சிறப்பு மலர்கள் வெளியீடும், கட்டுரைப் போட்டிப் பரிசு வழங்குதலும், கண்காட்சி சாலையும் நடத்தப்படும். ஆசாரியர்களின் அபூர்வமான புகைப்படங்கள் கைவசமுள்ளவர்கள் தயைசெய்து அவற்றை அனுப்பி வைத்துக் காட்சிசாலையை நிறைவு செய்ய வேணும். ,

இவை யாவற்றையும்விட முக்கியமாக, அடுத்த வியாஸ பூஜையின் போது சுவாமிகளிடம் அவரது திரு உள்ளத்துக்கு உகந்த விதத்தில் ஏதேனும் ஒரு தர்மத்தில் பயன்படுத்துவதற்காக நிதியம் சேகரித்து வழங்கவும் உத்தேசித்திருக்கிறார்கள். தரும ரக்ஷணத்துக்காக ஆசாரியர்களுக்குத் தரும் திரவியம் புண்ணியம் என்கிற பொக்கிஷத்தில் பத்து மடங்காகி நம்மிடம் திரும்பிவிடும். அவர் அமைத்து வரும் தரும சேதுவுக்கு அணிலும் உதவலாம் !

நிதிக் காணிக்கையும், புகைப்படமும் அனுப்ப வேண்டிய முகவரி: **காரியதரிசி, ஸ்ரீ காமகோடி ஜகத்குரு பீடாரோஹண கமிட்டி, 'சங்கர விஹார்', 48 காமராஜ் அவென்யூ, சென்னை — 20.**


அருணகிரி விலாஸ்
சீயக்காய் பவுடர்

வீரமும் தேச பக்தியும் மட்டுமின்றிப் படைக்கலப் பயிற்சியும் சுதந்திர யுத்தத்துக்கு இன்றியமையாதது என்ற கொள்கையுள்ள ஒரு சிறு குழுவை வ. வே. சு. அய்யர் லண்டனில் நிறுவி வளர்த்தார். அய்யர் அவர்கள் பல மொழிகளைப் பயின்றவர். கம்பராமாயணத்துக்கு ஆராய்ச்சி விமரிசனம் எழுதினார். திருக்குறளை ஆங்கிலத்தில் அழகாக மொழிபெயர்த்தார். கரிபால்டி, நெப்போலியன், சந்திரகுப்தன் முதலியோரின் வரலாற்றை எழுதினார். பல நல்ல சிறுகதைகளை யாத்துத் தந்தார். தீர புருஷர் வ. வே. சு. அய்யர் தம் அருமை மகளை, பாபநாசம் கல்யாண தீர்த்தம் அருவியில் விழுந்தவளை உய்விக்க எண்ணி, 1925ம் ஆண்டு ஜூன் மாதம் 3ந் தேதி தம் 44வது வயதில் குதித்தார். அதன் வேகத்தில் அடியுண்டு விழுந்து மாய்ந்தார். தூய சேவை, புரட்சி மிக்க தேச பக்தி, தமிழ் பக்தி ஆகியவற்றில் தலைசிறந்து விளங்கிய வ. வே. சு. அய்யரின் நினைவைப் போற்றுவோம். ★

தீரம் மிக்க தேசபக்தர்

தேசிய இயக்கத்தில் ஈடுபட்ட பலருக்கு உளவுகாரர்களின் கண்காணிப்பு பலமாயிருந்தது. லண்டனில் இருந்த இந்திய நண்பர்கள் 'இந்தியா விடுதி'யை நடத்தி வந்தனர். உண்ணும் பொழுதும் ஓய்வு நேரங்களிலும் இந்திய விடுதலை இயக்கத்தின் தத்துவங்கள், கையாள வேண்டிய முறைகள் பற்றி இந்திய நண்பர்கள் வாக்குவாதம் நடத்தினர். உளவுப் போலீஸ்காரர்கள் தொல்லை 'இந்தியா விடுதி'யில் ஏற்பட்டதால் விடுதியில் வசிப்போர் எண்ணிக்கை ஏழுக்குமேல் போகவில்லை.

1909ம் வருஷம் இந்தியா விடுதிக்கு ஒரு புதிய பேர்வழி வந்தார். அவரை முன்பின் தெரிந்தவர் யாருமில்லை. தம்மை இன்னார் என்று தெரிவித்துக் கொள்வதற்குக் கடிதமோ சிபாரிசோ ஒன்றும் அவர் கொண்டு வரவில்லை. மூட்டை முடிச்சுகளுடன் வந்து இறங்கியவர் மராட்டியர். 'பிரபு' என்னும் உயர் வகுப்பினர். பம்பாய் கோர்ட்டுகளில் மொழிபெயர்ப்புப் பதவியில் உள்ளவர். பல் வைத்தியம் கற்றுக் கொள்வதற்காக லண்டன் வந்திருப்பதாகத் தெரிவித்தார். மறுநாளே லண்டன் ஆஸ்பத்திரியில் பல் மருத்துவம் பயிலுவதற்குக் கட்டணம் கட்டிப் பெயரையும் பதிவு செய்து கொண்டார். அந்த மராட்டிய நண்பர் கீர்த்திகர் நடவடிக்கை 'இந்திய விடுதி' அன்பர்களுக்குச் சந்தேகத்தைக் கிளப்பியது. ''இந்தக் கீர்த்திகர் இங்கு படிப்பதற்காக வரவில்லை. நம்மையெல்லாம் பின்தொடர்ந்து தொல்லை செய்யும் ஸ்காட்லாந்து உளவுகாரர்கள் இவரைக் கவனிப்பதில்லை. இவர் வேலையில்லாமல் இந்த ஊருக்கு வர வேண்டிய அவசியமில்லை. இவரை நாம் சற்றுக் கவனிக்க வேண்டும்!'' என்று டாக்டர் டி. சே. சௌ. ராஜன், வ. வே. சு. ஐயரிடம் கூறினார்.


ஒரு நாள் இரவு கீர்த்திகர் நாடகம் பார்ப்பதற்குச் சென்றார். அந்தச் சமயத்தில் வ. வே. சு. ஐயர் கீர்த்திகர் அறைப் பூட்டுக்கு மறுசாவி போட்டுத் திறந்து உள் நுழைந்து அவருடைய பெட்டி, படுக்கை எல்லாவற்றையும் சோதனை போட்டார். கீர்த்திகர் போலீஸ் அதிகாரிகளுக்கு அனுப்ப வேண்டிய இந்திய சங்கத்தின் அவ்வாரத்திய நடவடிக்கைகளை விவரமாக எழுதியிருந்த அறிக்கை அகப்பட்டது. அதை மட்டும் கைப்பற்றிக்கொண்டு வந்து விட்டார் வ. வே. சு. ஐயர்.

அன்றிரவு கீர்த்திகர் நாடகம் பார்த்து விட்டுத் திரும்பியதும் வ. வே. சு. ஐயர் அவருடன் கலந்து பேச எண்ணி, தம்மிடம் இருந்த கைத் துப்பாக்கி ஒன்றில் ரவைகள் போட்டுத் தயாரித்துத் தம் பையில் போட்டுக் கொண்டார். கீர்த்திகருடைய அறைக்குள் சென்று, நாடகத்தின் விவரங்களைக் கேட்டறிபவர் போல் முதலில் பேசி, கடைசியில் உளவாளியாக அவர் காலம் கழிப்பதைப் பற்றி இகழ்ந்து பேசினார் ஸ்ரீ வ. வே. சு. அய்யர். கீர்த்திகர் தாம் நிரபராதி என்று சாதித்தார்.

உடனே அய்யர் கோபமடைந்து, கைத் துப்பாக்கியை எடுத்துக் காட்டினார். ''இது வெறும் துப்பாக்கியல்ல. ஆறு ரவைகள் கொண்டது. நீ உண்மையைச் சொல்லாவிடில் உன்னை இங்கேயே கட்டு முடிவுசெய்து விட எண்ணி வந்திருக்கிறேன். நீ உள்ளதைச் சொல்லி விட்டால் நான் உனக்கு ஒரு தீங்கும் செய்ய மாட்டேன்!'' என்றார் வ. வே. சு. அய்யர். அப்படியும் கீர்த்திகர் அசையவில்லை.


உடனே தம்மிடமிருந்த அறிக்கையை எடுத்துக்காட்டி, ''இது உன் கையெழுத்து என்று எனக்குத் தெரியும். நீ அனுப்புவதற்காகத் தயாரித்ததை நான் உன் பெட்டியைத் திறந்து எடுத்திருக்கிறேன். இதையும் நீ மறுப்பதாக இருந்தால் உன் முடிவு இப்பொழுதே என் கையால் நேரிடும்'' என்றார்.

ஸ்ரீ வ. வே. சு. அய்யர்



இதைக் கண்டதும் கீர்த்திகர் திகிலடைந்து வ. வே. சு. ஐயரின் இரு பாதங்களையும் இறுகப் பிடித்துக் கொண்டு தம்மைக் காப்பாற்ற வேண்டும் என்று கெஞ்சினார். அன்று முதல் கீர்த்திகர் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு 'இந்திய விடுதி'யில் வசிக்க வேண்டும் என்று ஓர் ஒப்பந்தம் செய்யப்பட்டது. வாரந்தோறும் அவர் போலீசுக்குத் தயாரித்தனுப்பும் அறிக்கையை வ. வே. சு. அய்யர் தணிக்கை செய்து அனுப்பினார். இப்படிப் போலீஸ் உளவாளிகளையும் மடக்கித் தம் தொண்டர்களாக்கிய பெருமை ஐயரைச் சாரும்.

பொன்னும் பெண்ணும்



அவன் ஏழை; கிழவனும் கூட. விறகுக் கட்டுச் சுமையைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு நடந்தான். வெண் பனி பெய்யத் தொடங்கியது. பூமியெல்லாம் மேகக் கூட்டங்கள் வந்து இறங்கிவிட்டாற்போலத் தோன்றியது. கிழவனுக்கு ஒவ்வோர் அடி எடுத்து வைப்பதும் சிரமமாக இருந்தது. கால்கள் வெண்பனியில் புதைந்து கொண்டன. சிரமப்பட்டு முன்னேறியவன் காதில் ஒரு துயரக் குரல் கேட்டது. ஏதோ ஒரு பறவையின் தீனமான குரலொலிதான் அது! கிழவன் சுற்று முற்றும் பார்த்தான். சற்றுத்தூரத்தில்..

ஐயோ பாவம்! ஒரு கொக்கு கண்ணியில் கால்கள் மாட்டிக் கொள்ளவே ஓலமிட்டுக் கொண்டிருந்தது. கிழவன் விறகுச் சுமையை இறக்கினான். மெல்ல மெல்லக் கஷ்டப்பட்டு அடியெடுத்து வைத்து அந்தக் கொக்கை அணுகினான். கண்ணியைத் திறந்தான். விடுபட்ட பறவை 'விர்'ரென்று கிளம்பியது. இப்போது நிர்மலமாக விளங்கிய நீல வானில் அதன் வெண்மைச் சிறகுகள் விரிந்து படபடத்தபோது எவ்வளவு அழகாக இருக்கிறது! கிழவனின் உள்ளம் ஆனந்தத்தால் நிரம்பி வழிந்தது. அந்தக் காட்சியைக் காணும் பாக்கியம் பெற்ற கண்களில் இரு நீர் முத்துக்கள் திரண்டன. பின்னர் அவை கீழே விழுந்து வெண்பனியாக உறைந்தன.

ஃ ஃ ஃ

இல்லத்துக்குத் திரும்பிய கிழவன் தன் மனைவியிடம் நடந்ததை விவரித்தான். அவளும் ஆவலுடன் அதைக் கேட்டபடியே தேநீர் தயாரித்தாள். அன்று இரவு அவர்களுக்கு அருந்துவதற்குத் தேநீர் மட்டுமே தான் இருந்தது. குளிர் காய்ந்தபடியே அதைக் குடித்த பிறகு கிழவி ராட்டை சுழற்றி நூல் நூற்றாள். கணவன் தறியில் நெய்தான். சற்று நேரத்தில் இருவருமே களைத்துப் போனார்கள். கிழவன் கொண்டு வந்த விறகு பாதிக்குமேல் தீர்ந்து போயிற்று. அவர்களுக்குக் கணப்பு அளித்ததில். குளிரும் களைப்பும் சேர்ந்து 'அவர்கள்



விழிகளைச் சுழற்றிச் செருகின. இமைகள் தாமாகவே மூடிக் கொண்டன.

மறுநாள் விடிந்த போது பட்டணத்திலிருந்து வியாபாரி ஒருவன் வந்தான். இவர்கள் தயாரித்துள்ள துணியை வாங்கிப் போய் நகரில் விற்கலாம் என்ற நோக்கம் அவனுக்கு. ஆனால் கிழத் தம்பதியரிடம் ஒரு முழத் துணிகூட இல்லையே.

வியாபாரி திரும்பிப் போய்விட்டான். இப்படியே நாட்கள் சென்றால் வருவாய்க்கு வழி ஏது? கிழவனும் கிழவியும் மீண்டும் தங்கள் தங்கள் காரியத்தில் ஈடுபட்டார்கள். ஆயினும் வறுமையும் முதுமையும் ஆட்கொண்டிருக்கும் அவர்களால் எத்தனை நேரம் உழைத்துவிட முடியும்?

களைப்பு மிகுதியான தருணத்தில் வாசல் கதவை யாரோ தட்டுவது கேட்டது. யாராக இருக்கும்? வியாபாரிகூட வந்து போய் விட்டானே!

கிழவன் கதவைத் திறந்தான். அதி ரூபவதியான ஒருத்தி அங்கு — வாசலில் — நின்று கொண்டிருந்தாள். அவள் அழகும் யௌவனமும் பிரகாசமும் கிழவனைத் திகைக்க வைத்தன. இதற்குள் கிழவி முன்வந்து யுவதியைப் பண்புடன் வரவேற்றாள். மீதமிருந்த சிறிதளவு தேநீரை மூவருமாகச் சேர்ந்து அருந்தினார்கள்.

பண்பாளர்களான அந்தத் தம்பதியர் அந்த நங்கை யார், எங்கிருந்து எதற்காக வந்தாள் என்றெல்லாம் கேட்கவில்லை. அவள் ஓர்

அரச குமாரி என்று கிழவியும் பட்டணத்திலிருந்து வந்த நாடகக்காரி என்று கிழவனும் எண்ணினார்கள். அவள் யாராக இருந்தால் என்ன? அவள் அங்கேயே தங்கினாள். அவள் வந்த பிறகு அந்தக் குச்சு வீடு தனிக் களையுடன் ஒளிர்வது போல் தோன்றியது. அக்கம் பக்கத்து வீட்டுக் குழந்தைகள் அக்காளோடு விளையாட வந்தனர். வெண் பனியில் சறுக்கியும் வெண் பனியைப் பந்தாக்கி ஒருவர்மீது ஒருவர் வீசியும் விளையாடினர். வீட்டைச் சுற்றிலும் கலகலப்பான சிரிப்பொலி எழுந்தது. அந்தக் கிழத் தம்பதியரின் இதழ்களில் கூடப் புன்னகை தோன்ற ஆரம்பித்து விட்டது.

இரண்டு நாட்களில் வியாபாரி மீண்டும் வந்தான். பட்டணத்துக்குக் கொண்டுபோய் விற்பதற்கு ஏதேனும் இருக்கிறதா என்று கிழவனைப் பார்த்துக் கேட்டான். உதட்டைப் பிதுக்கி வருத்தத்துடன் இலேசாகத் தலையசைத்தான் கிழவன். அவர்களால் வயதுக் காலத்தில் அதிகமாக உழைக்க முடியவில்லையே என்ன செய்வது? வயிறு வளர்ப்பதுதான் எப்படி? வியாபாரியைக் கண்டதும் அக்கிழத் தம்பதியரை மீண்டும் கவலை ஆட்கொண்டு விட்டது.

''நாளை வாருங்கள்'' என்றாள் அந்த நங்கை, வியாபாரியை நோக்கி. ''துணி நெய்து தயாராக இருக்கும்; நீங்கள் வாங்கிப் போகலாம்.''

அன்று மாலை அக்காளோடு விளையாட வந்த சிறுமிகள் ஏமாற்றத்தோடு திரும்பிச் சென்றார்கள். அவர்களுடைய அக்காள் உள்ளே ஓர் அறையில் துணி நெய்து கொண்டிருந்தாள். அறைக் கதவு சாத்தியிருந்தது. ஆம், அவள் கண்டிப்பாகச் சொல்லியிருந்தாள்; தான் துணி நெய்யும்போது யாருமே பார்க்கக் கூடாது என்று.

ஒரு கோப்பை தேநீர்கூட அருந்தாமல் இப்படி ஒரேயடியாக வேலையில் ஈடுபட்டிருக்கிறாளே என்ற துயரம் கிழத் தம்பதியருக்கு. பாவம்! சிரமமாக இராதோ அவளுக்கு! ஆனாலும் கதவைத் திறப்பதில்லை என்று உறுதி கூறியிருந்தார்களே!

நேரமாகிக் கொண்டேயிருந்தது. உள்ளே தறி போடும் சத்தம் கேட்டுக்கொண்டே இருந்தது. நள்ளிரவு நெருங்கியது. கிழவனும் கிழவியும் களைத்துப்போய்க் கண்ணயரத் தொடங்கும் தருணம். கதவு திறந்தது. அந்த எழிலரசி தங்கள் மகள்! ஆனால் ஐயோ பாவம், எவ்வளவு சோர்வுற்றுப் போயிருக்கிறாள். நிமிர்ந்து நிற்கவும் முடியாமல் தள்ளாடுகிறதே அவள் உடல்!

அவள் அவர்களிடம் தான் நெய்த துணியைக் கொடுத்தாள். பிரித்துப் பார்த்தான் கிழவன். அவனுக்கு மூச்சு விடவே மறந்து போய்விடும்போல் தோன்றியது. அத்தனை அழகான வேலைப்பாடுகளுடன் கூடிய அத்தனை மென்மையான அத்தனை பிரகாசமான ஒரு துணியை அவன் தன் வாழ்நாளில் இதுவரை கண்டதில்லை! அடேயப்பா! பட்டணத்தில் நிரம்பக் காசு கிடைக்குமே இதற்கு!

வியாபாரி வந்தான். அந்த அழகிய துணியைப் பார்த்தான். அவன் கண்கள் வியப்பால் விரிந்தன. மூன்று தங்கக் காசுகளை எண்ணி வைத்தான் அவன். கிழவனுக்கு ஏனோ அந்தத் துணியை விற்க மனமில்லை. 'எங்கள் மகள் நெய்தது எங்களிடமே இருந்துவிட்டுப் போகட்டும்' என்றான். வியாபாரி விட்டுக் கொடுக்கவில்லை. மேலும் ஒரு தங்கக் காசை எடுத்து வைத்துவிட்டுத் துணியுடன் கிளம்பிச் சென்றான்.

மாலையில் மீண்டும் அக்கம் பக்கத்துக் குழந்தைகளின் சிரிப்பொலி கேட்டது. அக்காளைக் காணாமலிருந்து கண்ட மகிழ்ச்சி அவைகளுக்கு. அவர்கள் குதூகலமாக விளையாடுவதை வாசலில் நின்று பார்த்த கிழவனுக்குத் தன் மகள் அச்சிறுவர் சிறுமியரிடம் அடிக்கடி விளையாட்டில் தோற்றுப் போவது விநோதமாக இருந்தது. வேண்டுமென்றே விட்டுக் கொடுக்கிறாளா? அல்லது நிஜமாகவே அவள் தேகம் பலவீனமுற்றுவிட்டதா? ஏன் அவள் கன்னங்கள் ஆப்பிள் போன்று சிவந்து ஒளிராமல் வெண் பனிபோல் வெளிறித் தோன்றுகின்றன?

மறுநாள் காலையிலேயே வந்துவிட்டான் வியாபாரி. பட்டணத்தில் அவன் அந்தத் துணியை எட்டுத் தங்கக் காசுகளுக்கு விற்றானாம். அதேபோல் இன்னும் வாங்கிப்போக வந்திருக்கிறான். இந்த முறை மேலும் அதிகமாகக்கூட விலை போகலாம்!

நடிக்கும் பொம்மைகள்

இது ஒரு ஜப்பானியக் கதை. கர்ண பரம்பரையாக வந்துள்ள நாடோடிக் கதை இது. அழகான இந்தக் கதையை ஜப்பானியர் அதி அற்புதமாகத் திரைப்படமாக்கியுமிருக்கிறார்கள். இதில் நடிப்பது முழுக்க முழுக்கப் பொம்மைகளே! இந்தப் பொம்மைகள் தளர்நடை பயிலும் குழந்தை போல் நடக்கின்றன; கரங்களையும் அசைக்கின்றன. முகத்தில் பாவங்களைத் தேக்கிப் பொலிகின்றன. பொம்மைக்கு அதனை உருவாக்கிய கலைஞன் கொடுத்த ஒரே பாவம்தான் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை. ஆயினும் படம் பிடிக்கும் கோணங்கள் காரணமாகக் கதைப் போக்குக்கு ஏற்ப பாவங்கள் மாறுவதுபோல் ஓர் உணர்ச்சி நமக்கு ஏற்படுகிறது. வண்ணக் கலவையின் விசித்திரமும் சேர்ந்து கொள்கிறது. பத்துப் பதினைந்து நிமிஷங்களே திரையில் தோன்றும் இப்படத்தில் பத்துப் பதினைந்து முறை மெய்சிலிர்த்துப் போகிறோம். இந்தப் படத்தை அண்மையில் ஜப்பானிய தூதரகத்தின் அழைப்பின் பேரில் பார்த்த அனைவர் உள்ளத்திலும் இம்மாதிரியெல்லாம் நூதன உத்திகளைக் கையாண்டு நாம் படமெடுக்கும் நாள் என்றோ என்ற ஏக்கப் பெருமூச்சு எழாமல் இருந்திருக்காது. அந்நாள் விரைவில் வரட்டும்.

'வேண்டாம் வேண்டாம்' என்றனர் அக் கிழத் தம்பதியர். ஏனென்று தெரியவில்லை. அன்று தறியில் துணி நெய்த பிறகு அவர்கள் மகளுக்கு ரொம்பப் பலவீனமாகப் போய்விட்டது. மறுபடியும் அவளை நெய்யச் சொல்லிப் பரீட்சை செய்ய விரும்பவில்லை அவர்கள். வியாபாரி ஆசை காட்டினான். ''உனக்கு ஆறு பொற்காசுகளைத் தருகிறேன். அதுவும் முன்கூட்டியே தந்துவிடுகிறேன்'' என்று கூறிக் காசுகளை எண்ணி மேஜைமீது அடுக்கினான்.

கிழவனும் கிழவியும் பிரமித்து நின்றார்கள். அவர்கள் இவ்வளவு பொற்காசுகளை ஒருசேர ஒருபோதும் பார்த்ததேயில்லை. அவர்களுக்கு என்ன பதில் சொல்வது என்றே தெரியவில்லை.

அவர்கள் தயக்கத்தைக் கண்ட அந்தப் பெண் அவர்களுக்குப் பதில் தானே மறுமொழி கூறிவிட்டாள். ''நாளைக் காலையில் வாருங்கள், துணி தயாராக இருக்கும்!''

அன்று மாலை அக்கம் பக்கத்துக் குழந்தைகள் அக்காளைக் காணாது ஏங்கின. அவர்களைப் பார்த்துக் கிழவனும் வருத்தப்பட்டான். உள்ளே மூடிய கதவுக்குப் பின்னால் தறி போடும் ஓசை கேட்டுக் கொண்டேயிருந்தது.

நள்ளிரவு ஆயிற்று. அதற்கு மேலுமாகி விட்டது. உள்ளே தறி போடும் வேகம் குறைவது புரிந்தது அந்தக் கிழத் தம்பதியருக்கு.

ஆயினும் அவர்கள் என்ன செய்ய? மகளுக்காக ஒரு கோப்பைத் தேநீரை எடுத்துக்கொண்டு உள்ளே செல்ல வேண்டும் என்ற ஆசையை ரொம்பவும் கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்டான் கிழவன்.

இருவருமே அசதி மிகுதியினால் சுவரில் சாய்ந்தபடியே உறங்கி விட்டனர்.

படபடவென்று கதவைத் தட்டும் ஓசை அவர்களைக் குலுக்கி எழுப்பியது. வியாபாரி தான் வந்துவிட்டார். ''எங்கே துணி?''

கதவு திறக்கப்படவில்லையே, தறி போடும் ஓசை கேட்கிறதே: அதுவும் எவ்வளவு மெல்லியதாக, பலவீனமாக, நிதானமாக ஒலிக்கிறது!

''ஏன் இவ்வளவு நேரம்? உள்ளே போய்ப் பாரேன்'' என்றான் வியாபாரி. 'ஐய்யோ! கூடவே கூடாது' என்ற கிழவன் நிபந்தனையை எடுத்துரைத்து விளக்கினான்.

வியாபாரி பல்லைக் கடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். கதவு திறக்கும் வழியாக இல்லை. பொறுமை இழந்துவிட்டான் அவன். எந்த அளவுக்கு வேலை முடிந்திருக்கிறது என்று பார்ப்பதில் என்ன குடி முழுகிப் போய்விடும்? ஒரு தடவை எட்டிப் பார்த்துவிட்டு வேணுமானால் மறுபடியும் கதவை மூடிவிட்டால் போகிறது!

கிழவன் என்ன தடுத்தும் கேளாமல் வியாபாரி தடதடவென்று நடந்து முன்னேறினான். கதவைத் திறந்தும் விட்டான்.

அங்கே அவர்கள் கண்ட காட்சி! கொக்கு ஒன்று தறி போட்டுக் கொண்டிருந்தது!



''அதோ போகிறாரே, அவர்தான் திருவாளர் மு. ம. அவர்கள்.''

''கதை கிதை எழுதுகிறவரோ?''

''ஊகும்! கதைகளுக்கும், புத்தகங்களுக்கும் முன்னுரை எழுதுவதில் சிறந்தவர். முன்னுரை மன்னன்!''

அதன் மேனியின் இறகுகள் ஒவ்வொன்றாகத் தறியில் விழுந்து நூலாகவும் பிறகு ஒளியும் மென்மையும் கலை வேலைப்பாடுகளும் மிகுந்த துணியாகவும் உருமாறிக் கொண்டிருந்தன.

கிழத் தம்பதியரும் அந்த வியாபாரியும் திகைப்பிலிருந்து மீள்வதற்குள் அந்தக் கொக்கு ஜன்னல் வழியே வெளியேறி வானில் வெண் சிறகு விரித்துப் பறந்தே போய்விட்டது.

வாசலுக்கு ஓடினான் கிழவன். ''திரும்பிவா, தயவுசெய்து திரும்பி வாயேன்'' என்று கெஞ்சலுடன் கத்தினான். கொக்கு வரவில்லை.

முன்பொரு முறை அவன் இதே போன்ற காட்சியைக் கண்ணுற்றிருக்கிறான். நிர்மலமாக விளங்கிய நீல வானில் வெம்மைச் சிறகுகள் விரிந்து படபடப்பதைப் பார்த்து ரசித்திருக்கிறான். அப்போது அவன் உள்ளம் ஆனந்தத்தால் நிரம்பி வழிந்தது. ஆனால் இப்போது மட்டும் துயரம் இதயத்தைக் கவ்விப் பிடித்துக் குதறுகிறதே ஏன்? கிழவனின் கண்களில் நீர் முத்துக்கள் திரண்டன. பொல பொலவென்று அவை வெண் பனியில் உதிர்ந்து உறைந்தன.

மாலையில் சிறுவர்கள் வந்தார்கள். அன்று மட்டுமல்ல; ஒவ்வொரு நாளும் விளையாடிக் கொண்டே அந்தப் பக்கம் வந்தார்கள். அக்காள் இருந்த வீட்டை ஒருவித ஏக்கத்தோடு பார்த்தார்கள். பிறகு விளையாடப் போய்விட்டார்கள்.

அந்த வீட்டில் பொன் இருந்தது: அந்தப் பெண் இல்லை.

☐ போர் முனையில் நிகழும் வீர தீரச் செயல்களைப் பற்றிய பல கதைகளைப் படித்திருப்பீர்கள். ஆனால் இந்தக் குருசாமிக்கு வீர சொர்க்கம் கிட்டுமா? நீங்களே யோசித்துச் சொல்லுங்கள்!



வீர சொர்க்கம்

உண்மைக் கதை

சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது 1945ஆம் வருடவாக்கில் நான் என்னுடைய ராணுவ 'யூனிட்'டில் பேச்சு எழுத்துச் சுதந்திரமற்ற எழுத்தாளனாகச் சேவகம் செய்துகொண்டிருந்தேன். எனக்குச் சிறிது தட்டெழுத்துப் பயிற்சியும் இருந்தது. ஆகையால் அலுவலகத்தில் எல்லாத் தட்டெழுத்து வேலையும் என்னுடையதுதான்.

பர்மாவின் மேற்குப் பாகத்தில் இருக்கும் அரகான் நாட்டிலுள்ள பவ்லி பஜார் என்ற சிற்றூரில் முகாம் செய்திருந்தோம். மிகவும் வளமான இடம். கிராமத்தில் உள்ள ஜனங்கள் தங்கள் குடிசைகளை விட்டு ஓடிப் போயிருந்தனர். மாடு கன்றுகள் அவிழ்த்து விட்டபடி கேட்பாரற்று அலைந்து திரிந்து கொண்டிருந்தன. குடிசைகளில் தட்டுமுட்டுச் சாமான்களும் அரிசி நெல் முதலிய உணவுப் பொருள்களும் கைவிடப்பட்டுச் சிதறிக் கிடந்தன. சில குடிசைகளில் உள்ள அடுப்புகளில் சோறு சமைத்துப் பாதி உபயோகப்பட்டு மீதி பாதிப் பானைகளிலேயே வைத்தபடி மக்கள் விட்டுச் சென்றிருந்தனர். விசாலமான மிளகாய்ப் பாத்திகளில் மிளகாய்ச் செடிகள் காய்த்துக் கேட்பாரற்றுப் பழுத்துத் தொங்கிக் கொண்டிருந்தன. எங்கள் கம்பெனி ஜமேதார் [illegible]னர் சிப்பாய்களை விட்டு மிளகாய்ப் பழங்களைப் பறித்து, காய வைத்து மூன்று சாக்கு மூட்டைகள் மிளகாய் வற்றல் தயார் செய்தது எனக்கு நன்றாக ஞாபகம் உள்ளது. ராணுவத்தில் அடிக்கடி மிளகாய் வற்றல் வழங்குவது கிடையாது. ஆகையால் தென் இந்தியர்களாகிய எங்களுக்கு இந்த மிளகாய் வற்றல் மிக உபயோகமாக இருந்தன.

இரண்டு வருஷங்களாக ஒன்று சேர்ந்து இணை பிரியாமல் யுத்த அரங்கில் பணி புரியும் இருவர் எந்த வகுப்பு, மதம், ஜாதியாக இருந்தாலும் பாகுபாடு இன்றி ஒருங்சே இணைந்து விடுவர். இது யுத்த களத்தில் எங் நேரடி அநுபவம். திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த குருசாமி என்ற ஒரு சிப்பாயும் திருவனந்தபுரத்தைச் சேர்ந்த குமாரன் என்ற சிப்பாயும் எங்கள் யூனிட்டில் மிகவும் சிநேகிதமாக, துன்பத்திலே அவ்வப்போது தென்படும் சிற்சில நிமிஷ இன்பங்களையும் சேர்த்து அநுபவித்துக் கொண்டு புன்சிரிப்புடன் நாட்களைக் கழித்து வந்தனர்.

குமாரனுக்கு வயது சுமார் இருபத்திரண்டு இருக்கலாம். விவாகம் ஆகாதவர். ஆனால் குருசாமிக்கு வயது சுமார் முப்பத்தைந்து இருக்கும். மனைவி குழந்தைகள் இருந்தனர். குமாரன் சிறு பிராயத்தினரானபடியால் விளையாட்டு சுபாவமும் அலட்சியப் போக்கும் உள்ளவர். இளங்கன்று பயமறியாது அல்லவா! ஆனால் குருசாமி கவனம் உள்ளவர். பொறுப்புக்களை நன்கு உணர்ந்தவர்.

யுத்த அரங்கங்களில் இருக்கும்போது ராணுவத்தில் காலை ஐந்து மணிவாக்கிலும் மாலை சுமார் ஆறு மணி வாக்கிலும் 'உஷார் நிலை' என்ற ஒரு நிகழ்ச்சி நடைபெறும். அதிகாரிகள் உள்பட யாவரும் அவர் அவர்களுக்கெனத் தோண்டி ஒதுக்கப்பெற்ற பாதுகாப்புக் குழிகளில் பூரண ஆயுதபாணிகளாக எதிரிகள் திடீரென்று படையெடுத்து வந்தால் எதிர்த்து முறியடிக்க ஆயத்தமாகப் பதுங்கி இருக்க வேண்டும். இந்தக் குழிகள் சுமார் மூன்று அடி ஆழத்துக்கு ஒன்றரை அடி அகலத்

துக்கு நான்கு அல்லது ஐந்து அடி நீளமிருக்கும். இவைகளில் போய் ஒளிந்து கொண்டு யுத்த சன்னத்தார்களாக இருக்க வேண்டிச் சமிக்ஞை ஊதல்கள் மூலமோ அல்லது சங்குகள் மூலமோ கொடுக்கப்படும். பொதுவாக வைகறையிலும் அஸ்தமிக்கும் வேளையிலும்தான் படையாட்கள் உறக்கம் காரணமாகவும், அயர்வு மிகுதியாலும் கவனக் குறைவாக இருப்பார்கள் என்றும் அப்படிப்பட்ட வேளைகளில் எதிர்பார்க்காமல் திடீரென்று கடும் தாக்குதல் செய்தால் எதிரிகளை முறியடிப்பது சுலபம் என்றும் ஓர் எண்ணம் தொன்றுதொட்டு ராணுவத்தில் உஷார் நிலைக்கு மற்றவர்களைப் போக் கூத் தரவை எதிர்நோக்கிக் கொண்டு தயாராக இருந்தனர். ராணுவத்தில் யுத்தகாலத்தில் போர் இல்லாமலிருந்தால் மாலைச் சாப்பாடு அநேகமாக ஐந்து அல்லது ஐந்தரை மணிக்கு முடிந்து விடும். அதிகாரிகளைத் தவிர எல்லாரும் ஒன்றாக அமர்ந்து வரிசையாக உணவு கொள்வார்கள்.

குருசாமி ஸ்டென் — கன் என்ற முப்பத்திரண்டு ரவைகள் பிடிக்கும் ''மாகஸைன்'' சாதனத்துடன் கூடிய அமெரிக்கத் துப்பாக்கியைத் தாங்கியிருந்தார். எட்டு அல்லது பத்து ''மாகஸைன்''களை ஒவ்வொரு சிப்பா



உண்டு. இந்த எதிர்பார்க்காத ஐமர்த் தாக்குதலைச் சமாளிக்கவே காலை மாலை நேரங்களில் மேற்சொன்ன உஷார்நிலை நிகழ்ச்சி நடைபெறும். ஒரு நிமிஷ நேரத்துக்குள் அவரவர்கள் தங்கள் தங்கள் பாதுகாப்பு குழிகளுக்கு ஓடிச் சென்று மறைந்து விடுவார்கள். யாராவது விஷயம் தெரியாத அன்னியர் திடீரென்று அவ்விடம் வந்தால் அங்கு மனித நடமாட்டமே இல்லாதது போல் அரவமெல்லாம் அடங்கி யிருந்த அமைதி தென்படும். அந்தனிதக் கட்டுப்பாடும் ஒழுங்கும் மிகவும் பிரமிப்பையூட்டுவதாக இருக்கும்.

குருசாமியும் குமாரனும் ஒரு நாள் மாலை உணவை ஐந்து மணிக்கு முடித்துக் கொண்டு யும் ஸ்டென் கன்னுடன் சுமந்து செல்வார். இந்த வகைத் துப்பாக்கிகள் ஒரே நொடியில் முப்பத்திரண்டு ரவைகளையும் சுட்டுத் தீர்த்துவிடும். இதிலுள்ள ஒரு சாதனத்தைக் கட்டை விரலால் அழுத்திவிட்டு மறுபடியும் சுட ஆரம்பித்தால் ஒவ்வொன்றாக விட்டு விட்டு முப்பத்திரண்டு ரவைகளையும் சுட்டுத் தீர்க்கும். அதாவது ஒவ்வொன்றாகவும் அல்லது ஒரே நொடியில் முப்பத்திரண்டு

ரவைகளையும் கட்டுக் காலி செய்யும் இரண்டு வித ஏற்பாடுகளைப் பெற்றது இந்தத் துப்பாக்கி. இது யுத்த காலத்தில் ஏற்பட்ட புதுவித அதிகச் செலவில்லாத கண்டுபிடிப்பு.

மற்ற நண்பர் குமாரன் .303'' ஸர்விஸ் ரைபிள் என்ற வழக்கமான ராணுவத் துப்பாக்கியைப் பெற்றிருந்தார். இந்தத் துப்பாக்கிகளில் தானியக்கம் கிடையாது. திறமையாக இயக்கினால் வேகமாகச் சுடலாமே ஒழிய ஸ்டென் கன்னைப் போல் ஒரு நொடியில் முப்பத்திரண்டு ரவைகளைச் சுடுவது என்பது இயலாத காரியம்.

குமாரன் வைத்திருந்த இந்த ரைபிளானது மத்தியக் கிழக்கில் யுத்தத்தில் உபயோகிக்கப்பட்டுப் பழுதடைந்து, இந்தியாவில் உள்ள ஆயுதச் சாலைகளுக்கு அனுப்பிப் பழுது பார்க்கப்பட்டுப் பிறகு தூரக் கிழக்கு யுத்த களங்களுக்கு உபயோகத்துக்கு அனுப்பப்பட்டது. இந்த வகைத் துப்பாக்கிகளில் பாதுகாப்புக்காக 'ஸேப்டி காட்ச்' என்ற ஒரு சிறு அமைப்பு உண்டு. ரைபிளில் குண்டுகள் நிரப்பி இருந்தாலும் இந்தப் பாதுகாப்பு சாதனத்தைத் திருப்பி விட்டால் துப்பாக்கியின் 'குதிரை'யை இழுத்தாலும் துப்பாக்கி வேலை செய்யாது. மறுபடியும் 'ஸேப்டி காட்சை' மடக்கித் திருப்பினால்தான் வேலை செய்யும்; துப்பாக்கி இயங்கும். ஆனால் குமாரனுடைய ரைபிளில் 'ஸேப்டி காட்ச்' சரிவர வேலை செய்யவில்லை. இது குமாரனுக்கே தெரியாது. அத்துப்பாக்கி புதிதாக விநியோகிக்கப்பட்டு அண்மையில்தான் அவர் வசத்துக்கு வந்திருந்தது.

அன்று மாலை குமாரனும், குருசாமியும் உணவருந்திவிட்டு இருக்கும் போது விளையாட்டாக ஓர் உரையாடலில் ஈடுபடலானார்கள்.

குமாரன்: குருசாமி, என்னிடம் ஸ்டென் கன் இல்லை. ஆனாலும் என்ன? இங்கு எவ்வளவு ஜப்பானியர் வந்தாலும் நான் ஒருவனே இந்தத் துப்பாக்கியால் எல்லோரையும் சுட்டுத் தள்ளிவிடுவேன் தெரியுமா?

குருசாமி: நீ ஜப்பானியர்களைக் கொல்லுவது இருக்கட்டும். தைரியமிருந்தால் முதலில் என்னைச் சுடு, பார்க்கலாம்.

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே குமாரன் விளையாட்டாகத் துப்பாக்கியைத் தோள் மட்டத்தில் உயரத் தூக்கிப் பிடித்துக் குருசாமியின் மார்புக்குச் சரியாகக் குறி பார்த்து நின்றார். ''சுட்டு விடட்டுமா?'' என்றார் மறுபடியும்.

''சுடேன், பார்க்கலாம்!'' என்றார் குருசாமி பதிலுக்கு.

ஸேப்டி காட்சை இயக்கி முன்னால் தள்ளிவிட்டுத் துப்பாக்கியின் குதிரையைக் குமாரன் அழுத்தினார், குறி பார்த்து நின்ற நிலையிலேயே. பாதுகாப்புச் சாதனத்தைப் போட்டிருப்பதால், 'குதிரையை இழுத்தாலும், துப்பாக்கி சுடாது' என்ற பொது விதியை மனத்தில் கொண்டு குமாரன் குதிரையை இழுத்தாரோ இல்லையோ, 'டமார்' என்ற சத்தத்துடன் ரவை குருசாமியின் மார்பில் பாய்ந்தது.

குருசாமி 'ஓ'வென்று அலறிக் கொண்டு தரையில் சாய்ந்து வலி பொறுக்கமாட்டாமல் புரண்டு கொண்டிருந்தார். மார்பில் ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. குமாரன் ஒன்றும் புரியாதவராக என்ன நேரிடுமோ என்று பயந்து நடுங்கிக் கொண்டு அருகில் நின்று கொண்டிருந்தார். இந்தச் சம்பவம் நடந்த இடத்திலிருந்து சுமார் நூறு அடி தூரத்தில் நான் நின்று கொண்டிருந்தேன்.

நான் முதலுதவி செய்யச் சிறிது பயிற்சி பெற்றிருந்தேன்.

யுத்த களத்தில் ஒவ்வொரு சிப்பாயின் கால் சட்டையின் பின்புறத்தில் உள்ள பைகளில் முதலுதவி சிகிச்சைக்கான பஞ்சு, பாண்டேஜ் துணி முதலியவை இருக்கும். காற்று, ஈரம் புகாத மேலுறைகளைக் கிழித்து அகற்றிவிட்டு உடனே காயங்களின் மேல் வைத்துக் கட்டுப் போட்டு விடலாம்.

இப்போது நான் சத்தம் வந்த திசை நோக்கி ஓடினேன். குருசாமி, உதிர வெள்ளத்தில் புரண்டு கொண்டிருந்தார். அருகிலிருந்து ஒருவரை மற்றவர், .303'' சர்விஸ் ரைபிளால் மார்பைக் குறி வைத்துச் சுட்டால் சுடப்பட்டவர் உயிர் உடனே பிரிந்து விடும். ரவை மார்பைப் பிளந்து கொண்டு பெரிய துவாரத்தை உண்டு பண்ணி வெளியே சென்றுவிடும். ஆனால் குருசாமி யுத்த முஸ்தீபுக்கான உடை உபகரணங்களுடன் இருந்தார். வலது இடது மார்புப் பக்கம் உள்ள இரண்டு துப்பாக்கி ரவைகளிலும் தமது ஸ்டென் கன்னுக்குத் தேவையான பத்து மாகஸைன்களைத் தாங்கி இருந்தார். குமாரனுடைய ரைபிள் குண்டானது, குருசாமியின் மார்பில் அணியப்பட்டிருந்த இந்த 'மாகஸைன்' தகடுகளைத் துளைத்துக் கொண்டு சட்டைப் பையிலிருந்த ஓர் அணா நாணயத்தையும் சிதற அடித்துவிட்டு மார்பையும் துளைத்துச் சென்றிருந்தது. சற்று முன்புதான் குருசாமி மாலை உணவு உட்கொண்டிருந்தார். ஆகையால் அவரது தொண்டை வழியாகச் சோற்றுப் பருக்கைகளும், பருப்பும், காய்கறி வகைகளும் வெளியே தள்ளப்பட்டிருந்தன.

குருசாமி நல்ல உடற்கட்டும், எடையும் உள்ளவர். எழுத்து வாசனை அற்றவர். பல நாட்கள் பெருமுயற்சி செய்து தம் பெயரை மாதா மாதம் சம்பளம் வாங்கும்போது எழுதக் கற்றுக் கொண்டவர். குருசாமி பனியன், சட்டை அதன் மேலே பெல்ட் மற்றும் ராணுவ அணிகளைத் தரித்திருந்தார். ஆகையால் உடைகளைக் கழற்றிக் கண்டு காயங்களைக் கவனிக்கத் தடையாயிருந்தது. உயர் அதிகாரி ஒருவரது உடைவாளால் குருசாமியின் உடுப்புக்களை அறுத்துக் கிழித்துவிட்டு முதல் சிகிச்சை செய்தேன். குருசாமி என்னைப் பார்த்தவுடன் கண்களில் நீர் தாரை தாரையாக வழிய, ''சாமி, நான் பிழைப்பேனா?'' என்று பரிதாபமாகக் கதறினார்.

நான், ''உமது உயிருக்கு எவ்வித ஆபத்துமில்லை; கட்டாயம் பிழைத்து விடுவீர். நீர் அனுபவமுள்ள சிப்பாய் ஆயிற்றே.

இந்தச் சிறு குண்டுக் காயங்களையும் தாங்கிக் கொண்டு எதிரிகளைக் கொல்லக் கூடிய திடம் பெற்றவராயிற்றே. நீரே பயப்படலாமா?'' என்று ஆறுதல் கூறினேன்.

குருசாமியை ஒரு ஸ்டெச்சரில் கிடத்தி, லாரியில் வைத்து அருகிலிருந்த ராணுவ ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றோம். குமாரனும் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.

மருத்துவ நிலையத்தில் குருசாமிக்கு ரத்தம் செலுத்த ரத்த சேமிப்புக் கிடங்கில் ரத்தம் கை இருப்பு இல்லை என்றும் ஆகையால் எங்களை ரத்த தானம் செய்யும்படி ஓர் ஆங்கிலச் சிப்பந்தி சொன்னார். ஆகவே, குருசாமியின் கூடச் சென்றிருந்த எங்கள் ஏழு பேர்களின் இடது கை நுனி விரலிலிருந்து சிறிது ரத்தம் எடுத்துச் சோதனை செய்து பிறகு ரத்தம் கொடுக்க என்னைத் தேர்ந்தெடுத்தார் அந்த ஆங்கிலச் சிப்பந்தி.

ஒரு பாட்டிலில் நிறைய ரத்தம் எடுத்தார்கள். ''ஹவில்தார் இதோ உன் ரத்தம்!'' என்று அந்த ஆங்கில டாக்டர் என்னிடம் பாட்டிலைக் காண்பித்துப் புன்னகை புரிந்தார். அது என் நண்பனின் உயிரைக் காப்பாற்றப் போகிறது என்ற எண்ணத்தில் பெருமிதம் அடைந்தேன். ஆனால் என்ன பரிதாபம்! இதற்குள் குருசாமியின் ஆவி பிரிந்து போய் இருந்தது.

நான் ரத்த தானம் செய்யும் விஷயத்தை முன்கூட்டியே தொலைபேசி மூலம் அறிந்த என் மேலதிகாரி அதற்காக என்னைப் பாராட்டி, தினசரி மாலை வெளியிடப்படும் ராணுவ அறிக்கையில் இதைக் குறிப்பிட்டிருந்தார். குருசாமியின் எதிர்பாராத மரணத்துக்கும் அனுதாபம் தெரிவித்திருந்தார். என்னை நேரில் பார்த்த போது, ''நிறையத் தண்ணீர் குடி. இழந்த ரத்தம் நிரப்பிக்கப்பட அது உதவும்'' என்றார் பரிவுடன்.

குருசாமி ஒரு மாத ரஜாவில் இந்தியாவுக்கு வர ஏற்பாடாகிப் பெயர் பதிவாகி இருந்தது. ஆனால் அவர் தாய்நாட்டை மீண்டும் மிதிக்கவே முடியாதபடி ஆண்டவன் சித்தம் வேறுவிதமாக இருந்தது. இந்த விபத்து விஷயமாக வழக்கம்போல் ஒரு விசாரணை நடந்து முடிந்தது. ''முன் பகையில்லாமல், ஆனால் அஜாக்கிரதையால் ஏற்பட்ட உயிர்ச் சேதம்'' என்று முடிவு கட்டிக் குமாரனுக்கு மூன்று மாதம் வெறும் காவல் தண்டனை அளிக்கப்பட்டது. ஆனால் இந்த விசாரணையில் இறுதி முடிவெடுக்கும் அதிகாரி சம்பந்தப்பட்ட காகிதங்களைப் பார்வையிடுவதற்கே மூன்று மாதங்களுக்கு மேலாகி விட்டது. ஆகையால் தளபதி, ''இந்தக் குற்றத்துக்கு அளிக்கப்பட்ட தண்டனையைக் காவலில் உள்ள குமாரன் இதற்குள்ளாகவே அனுபவித்துவிட்டபடியால் உடனே விடுதலை செய்துவிடலாம்'' என்று உத்தரவு கொடுத்துவிட்டார். குமாரன் விடுதலை செய்யப்பட்டார். இப்போது அவர் எங்கே இருக்கிறாரோ, எனக்குத் தெரியாது. ஆயினும் அவர் மனம் இன்றைக்கும் என்ன பாடுபட்டுக் கொண்டிருக்கும் என்பதை என்னால் உணர முடிகிறது.

சிறுவன் தனக்கென்று வீட்டுத் தோட்டத்தில் ஒரு பகுதியைப் பிரித்துக் கொண்டான். அதில் மலர்ச் செடிகளையும் காரட்டையும் பயிராக்கினான். நட்ட சில நாட்களுக்குள்ளேயே தன் பயிர் செழித்துவிட்டதா என்று பார்க்க அந்தச் சிறுவனுக்கு ஆசை. ஆகவே காரட்டைப் பூமியிலிருந்து பிடுங்கி, பருமனாக இருக்கிறதா என்று பார்த்தான் சிறுவன். மறுபடியும் அதைப்பூமிக்குள் புதைத்துவிட்டான். ஆனால் அதைப் பிடுங்கினதால் அது வாடிவிட்டது. அவன் தந்தை சொன்னார்: ''அப்பா! பொறுமையைக் கடைப் பிடிக்க வேண்டும். எந்தக் காரியமானாலும் கால மறிந்து சரியான சமயத்தில் நிறைவேற்ற வேண்டும்'' என்றார். அந்தச் சிறுவன் ஒட்டுப் போடும் முறையில் புதுமாதிரியான மலர்ச் செடி ஒன்றை உருவாக்கிப் பயிரிட முயன்றான். அப்பொழுது அவன் தந்தைசொன்னார்: ''கடவுளின் வேலையில் ஒருவர் குறுக்கிடமுயலக்கூடாது.'' இந்த அறிவுரைகள் அந்தச் சிறுவன் வளர்ந்து பெரியவனானபோது அவனுக்கு அரசியலில் அறிவூட்டும் வாசகங்களாக விளங்கின. இச் சிறுவன் யார் தெரிகிறதா? தெரியாவிட்டால் 53ம் பக்கம் பார்க்க.



சூரன் பீட்டர்

8

வால்ட் டிஸ்னி



காப்டன் ஹூக்குடன் போராடிக் கொண்டிருக்கும்போதே கடலில் அலைகள் உயர்ந்தன. மண்டை ஓட்டுப் பாறைக் குடைவுகளுக்குள் கடல் நீர் பொங்கிப் பெருகி உயர்ந்தது. வேங்கை விழியாள் உட்கார்ந்திருந்த சிறு பாறையை மூழ்கடித்த கடல்நீர் வரவர மேலே மேலே உயர்ந்து கொண்டே சென்றது. கட்டுண்ட நிலையிலும் கலங்காத உள்ளத்துடன் கடல்நீரில் மூழ்கிக் கொண்டிருந்தாள் அவள். வெண்டி



சினிமா

தங்கை

அண்ணன், தங்கை பாசம் தமிழ்ப் படத்துக்குப் புதியதல்ல — சுஜாதா சினி ஆர்ட்ஸ் தயாரிப்பான 'தங்கை'யும் உடன் பிறந்தவனிடம் கொண்ட பாசத்தில் பிறந்ததுதான்.

சிவாஜி கணேசனை இந்தப் படங்களில் புதிய கோணங்களில் காண முடிகிறது. சிவாஜியின் உருக்கமான நடிப்பு. மதனின் பாத்திரப் படைப்பும், நடிகர் திலகத்தின் இணையற்ற நடிப்புத் திறமையும்தான் ''தங்கை'' படத்துக்கே உயிர் கொடுக்கின்றன.

வெளிப் பார்வைக்கு நல்லவனாகவும், அந்தரங்கத்தில் அயோக்கியனாகவும் விளங்கும் மேஜர் சுந்தரராஜன், படத்தின் முக்கியமான பாத்திரம். நன்றாய் நடித்திருக்கிறார். ஆனால் ஏற்கனவே வேறு படங்களில் அவரே இம்மாதிரி நடித்திருக்கிறாரே !

கே. ஆர். விஜயா லேடி டாக்டர்; கதாநாயகி. டாக்டருக்குப் படித்த ஒரு பணக்காரப் பெண் — முன்பின் தெரியாத, படிக்காத, வேலை ஏதும் இல்லாத ஓர் அநாதை வாலிபனை அவசரமாகக் காதலித்துத் தன் மனத்தைப் பறி கொடுப்பது நிஜவாழ்க்கைக்கு ஒத்து வராத நிகழ்ச்சி! கே. ஆர். விஜயாவுக்கு நடிக்க நிறைய 'சான்ஸ்' இல்லை. எனினும், தங்கையை உயிர்ப்பிக்கும் லேடி டாக்டர் அவர் !

நாகேஷ் சூதாடும் கிளப்புக்கு ஆள் தேடும் ஆசாமி. தம் தொழிலை நன்றாய்ச் செய்கிறார். பாலாஜி வேஷப் பொருத்தத்திலேயே ஜயித்து விட்டார். இன்ஸ்பெக்டர் வேஷத்தைப் போலவே, சேட்ஜி வேஷமும் அவருக்கு நன்றாய்ப் பொருந்துகிறது. காஞ்சனா 'கிளப் டான்ஸ்' ஆட்டங்களுடன் நின்று விடாமல் உருக்கமாகவும் நடித்திருக்கிறார்.

''தண்ணீரிலே தாமரைப்பூ தள்ளாடுதே'' என்ற பாட்டுப் பாடப்படும் போது கண்ணீர் ததும்பும் சிவாஜி கணேசனின் முக பாவம் அற்புதமாயிருக்கிறது. மற்றப்படி பாடல்கள் ஏதும் உள்ளத்தைத் தொடுவதாயில்லை. ஒளிப்பதிவின் சிறப்புக்கோ, டைரக்ஷனின் திறமைக்கோ எடுத்துக்காட்டாக எந்தக் காட்சியும் அமையவில்லை.

மனம் உருகி நெகிழவும், நடிப்பின் உயர்வைக் கண்டு மகிழவும் ''தங்கை''யில் பல காட்சிகள் இருக்கின்றன. பாராட்டுவதற்கு அவை போதும்.





நாட்டிய நாடகம்

பொன்னியின் செல்வி

பேராசிரியர் கல்கி அவர்களின் ''சிவகாமியின் சபத''த்தை நாட்டிய நாடகமாகப் பல மேடைகளில் நடித்துப் புகழ்பெற்று விளங்கும் குமாரி கே. சந்திரகாந்தா ''பொன்னியின் செல்வி'' என்ற வரலாற்று நாட்டிய நாடகத்தை 13–5–67 அன்று அரங்கேற்றினார். (கல்கியின் 'பொன்னியின் செல்வ'னுக்கும், 'பொன்னியின் செல்வி'க்கும் ஓர் எழுத்து மாத்திரம் அல்ல — முழுக்க முழுக்க வித்தியாசம் இருக்கிறது ! சிலப்பதிகாரத்தில், வஞ்சி மாலையில் ஏழு பத்தினிப் பெண்டிரின் வரலாறு கூறப்படுகிறது: அவர்களுள் முதலாவதாகக் கூறப்படும் ஆதிமந்தியின் வரலாற்றை ஆதாரமாகக் கொண்டது இது.) தலைமை வகித்த தமிழக முதலமைச்சர் திரு அண்ணா அவர்கள் குமாரி சந்திரகாந்தாவைப் பாராட்டி ஒரு நடராஜர் சிலையைப் பரிசாக அளித்தார்.

மூன்றாவது பரிசு நாவல்

மணக்கோலம்

அத்தியாயம் 9

சீதா பெருமூச்சு விட்டாள். ரேழியின் சுவரில் சாய்ந்தவளாய் அவள் நிற்கும் கோணத்தைப் பார்க்கவே, சந்தானத்துக்குப் பரிதாபமாக இருந்தது. ஏதோ ஒரு வேதனையைத் தன்னுள் அடைத்து வைத்து அவள் தவிக்கிறாள் என்பதைக் கண்டபோது ''ஏன், இப்படிக் கேட்கிறாய்?'' என்றான் சந்தானம். சீதா மௌனமாக நின்றாள்.

''உன் மனசிலே என்ன துக்கமோ சங்கடமோ இருந்தாலும் என்னிடம் சொல்லு, சீதா! என்னை நீ பரிபூரணமாக நம்பலாம்!'' என்றான் அவன்.

''ஊஹூம்! இனி மேல் நான் தெய்வத்தைக்கூட நம்ப மாட்டேன்.''

''உனக்குக் கலியாணமே பண்ணிக் கொள்ள இஷ்டமில்லையா, சீதா?''

இப்போது சீதா சிரித்தாள்.

''இந்தக் கேள்விக்கு 'நான் விருப்பமில்லை'னு பதில் சொன்னா, அது நான் என்னையே ஏமாத்திக் கொள்ற மாதிரித்தான். எந்தப் பெண்ணுக்குத்தான் கல்யாணம் வேண்டாம்னு இருக்கும்?''

''அப்போ?'' என்று முணுமுணுத்த சந்தானம் கேள்வி ஏதும் கேட்காமல் கண்களை மூடிக் கொண்டான். அவனுக்குப் புரிந்து விட்டது. சீதா கல்யாணத்தை வெறுக்கவில்லை. இருபத்தேழு வயதாகிய அவள், வாழ வேண்டும் என்ற ஆசையைத் துறந்து விடவில்லை. ரகுபதிதான் அவளுக்குப் பிடித்திராத வரன்!

''ஏதோ கேட்டேனே?'' என்றாள் சீதா.

பி.வி.ஆர்.



"ஒன்றுமில்லே, சீதா! எதுக்கும் கவலைப்படாதே! எல்லாம் உன் விருப்பப்படி நடக்கும்!"

"அதுக்கு ஒரே வழிதான் இருக்கு!"

"என்ன?"

"என் மனசை நான் மாத்திக்கணும்!"

"அப்படின்னா?"

"இப்போ இருக்கிற மனசைத் திருப்பிப் போடணும்."

"மனசு என்ன, ஸ்லேட்டுப் பலகையா? இல்லாட்டா பிரேம் போட்ட படமா திருப்பி வைக்க?"

"வேறே வழியே இல்லே. அம்மாவுக்குப் பூரணமாகப் பிடித்து விட்டது. நான் ரகுபதியைக் கல்யாணம் பண்ணிக் கொண்டால் அதனால் எனக்கு மட்டும் அனுகூலமில்லேயாம்! ஜானுவுக்கும் கமலாவுக்கும்கூட நாளைக்கு....!"

"எனக்குப் புரிகிறது சீதா!"

"அம்மா இவ்வளவு தூரம் யோசனை செய்கிறவள், சாமர்த்தியக்காரின்னு எனக்கு இப்பத்தான் தெரியறது!"

"இந்தச் சாமர்த்தியத்துக்கெல்லாம் காரணம் அவள் அடிநாட்களில் அநுபவித்த கஷ்டம், சீதா! மூணு பெண்களைப் பெற்றவள் நிர்க்கதியாக நடுத்தெருவிலே நிற்கிறபோது, நெஞ்சுத் திடமும் சாமர்த்தியமும் தானே வரும். அது தனக்குத் தானே ஏற்படுகிற தைரியம். அதை யாராலும் புதிசா உண்டாக்கிக் கொள்ள முடியாது!"



''அதனாலே எனக்கு இப்போ என்ன தோணறது, தெரியுமா? நான் எனக்காக மட்டும் கல்யாணம் செய்து கொள்ளவில்லை. என் தங்கைகளுக்காகத்தான் இந்தக் கல்யாணத்தைச் செய்து கொள்ளுகிறேன்!''

''இனி மேல் சீதா, நீ யாருக்காக வேண்டியும் தியாகம் பண்ண வேண்டாம். மற்றவர்கள்தான் உன் பொருட்டுத் தியாகம் செய்யணும்.''

அவனைப் பார்த்துச் சிரித்த சீதா, ''அது இந்த ஜன்மத்தில் இல்லை. யாரும் செய்யவும் வேண்டாம்....!'' என்றாள்.

''செய்யமாட்டார்கள் என்கிறாயா?''

''சந்தர்ப்பமே வராது!'' என்று சொன்னவள், திடீரென்று, ''இப்போது யாராவது எனக்காகக் கஷ்டப்படாமல் தியாகம் செய்ய முடியுமென்றால் அது நீங்கள்தான்'' என்றாள்.

''எனக்குப் புரியவில்லை.''

''என்ன புரியல்லியா? என் அம்மா பணம் கேட்டால் இல்லேன்னு சொல்லி விடுங்கள். அதாவது உங்கள் வாக்கை மீறி விடுங்கள்....!''

சந்தானத்துக்குச் சிரிப்பு வந்தது.

''அது ஒண்ணும் பெரிய கஷ்டமில்லை. இந்த உலகத்திலே பொய்யும் புரட்டும் தலைவிரிச்சாடற போது, என் 'பிராமிஸை' நான் 'பிரேக்' பண்ணறதிலே பெரிய குற்றம் ஏதும் இல்லேன்னே வைச்சுண்டாலும் அதனாலே இந்தக் கல்யாணம் தடைப்பட்டுப் போய்விடும்னு நீ நினைக்கிறாயா? அப்படி நீ நினைச்சா, அது நீ போடற பெரிய தப்புக் கணக்கு!''

''ஏன்?''

''ரகுபதியே பணத்தைக் கொடுத்து, தன் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்து விடுவான்.''

''ஏன் அவருக்கு அவ்வளவு அக்கறை இருக்க வேண்டும்?''

''அதுதான் எனக்கு இன்னும் சரியாக விளங்க மாட்டேன் என்கிறது. இந்த அலமேலு மாமி கொஞ்ச நாட்களாகத்தானே தனக்கு அண்ணா பிள்ளை இருக்கிற விஷயத்தையே உன் அம்மாவிடம் சொல்லியிருக்கிறாள்?''

''ஆமாம்......!''

''அலமேலு மாமியின் குடும்பத்தைப் பற்றி அதிகம் ஒண்ணும் தெரியாவிட்டாலும், அவளும் அவளுடைய கணவனும் இலேசுப்பட்டவர்கள் இல்லேன்னு மட்டும் தெரியும்....!''

''எனக்கு அவளுடைய புருஷருக்கு என்ன வேலைன்னுகூடத் தெரியாது'' என்றாள் சீதா.

''தரகு வேலை, புரோக்கர்... வீடு நிலம் வாங்கி விற்கிறவர்களுக்கு நடுவே நின்னுண்டு, இரண்டு பக்கமும் பேசி, இரண்டு பக்கத்திலிருந்தும் அகப்பட்டதைச் சுருட்டற வேலை. ஆனா அதிலே ஆடிக்கு ஒரு தடவை அமாவாசைக்கு ஒரு தடவைதான் ஏதாவது பணம் பெயரும்.....!''

''அப்படியா?'' என்று கேட்ட சீதா, ''அலமேலு மாமி தினம் தினம் வந்து இப்படி உசிரை வாங்கறதைப் பார்த்தால், அவளுக்கு இதிலே ஏதானும் ஆதாயம் இருக்குமோன்னுகூட எனக்குச் சந்தேகமாக இருக்கு!'' என்றாள்.

''எனக்குச் சந்தேகமேயில்லை!'' என்றான் சந்தானம்.

சீதா மெல்ல நகர்ந்தாள். எந்த விதமான விருப்பு வெறுப்பும் இல்லாதவளைப் போல அவள் கூடத்தை நோக்கிச் செல்லுவதைக் கண்ட சந்தானம், தாழ்ந்த குரலில், ''சீதா!'' என்று அழைத்தான்.

இரண்டடி சென்றவள் திரும்பினாள்.

''என்ன?''

''எவ்வளவு தள்ளிப் போட முடியுமோ, அவ்வளவு தூரத்துக்குத் தள்ளிப் போடச் சொல்லு உன் அம்மாவிடம். நமக்கும் 'டயம்' கிடைக்கும்!''

சந்தானம் என்னதான் தாழ்ந்த குரலில் பேசினாலும், ரேழியிலிருந்து திண்ணைக்கு மூன்றடி தூரமே இருந்ததால் திண்ணையில் அவன் குரல் ஸ்பஷ்டமாகக் கேட்டது.

அதே சமயத்தில் திண்ணையேறி வந்த பாகீரதி அம்மாள், சந்தானம் கூறியதை யெல்லாம் காதில் வாங்கிக் கொண்டாள்.

இது வரையில் அவள் உணர்ந்தறியாத கோபமும் ஆத்திரமும் பீறிட்டுக் கொண்டு வந்தன.

''எத்தனை நாட்களாக, நீ என் பெண்களுக்கு இந்த மாதிரி உபதேசம் செய்துண்டு வர்றே? அம்மாவுக்கும், பெண்ணுக்கும் நடுவே நின்னு, மூட்டி விடறதுதான் உன் வேலையா?''

''அவர் ஒண்ணும் சொல்லல்லே அம்மா! நீ பேசாமல் உள்ளே வா!'' என்றாள் சீதா.

''மாமி..... நான் வந்து....!'' சந்தானம் தவித்தான்.

''என்னடா நான் வந்து, நீ வந்து? மலை மலையா மூணு பெண்களைப் பெத்துட்டு, அதுகள் கை வளருமா, கால் வளருமான்னு தவிச்சுட்டு, இத்தனை தரித்திரத்திலும் கலியாணமாகணுமேன்னு ஏங்கிண்டு கிடக்கேன். ஏதோ ஒரு நல்ல வரன் கிடைச்சிருக்கு. நல்லபடியா அது நடக்கணும்னு தூக்கமில்லாம மாய்ஞ்சு போயிண்டிருக்கேன். நீ உபகாரமா இல்லா விட்டாலும், உபத்



Bensons-618A15 TAM

- திரைப்படத்தில் நடிகர்களை நாம் பார்க்கிறோம். ஆனால் அவர்கள் நம்மைப் பார்க்க முடிவதில்லை. உலக நாடக மேடையில் நம்முடைய அன்றாட நடிப்பை ஆண்டவன் பார்க்கின்றான். அவனை நாம் பார்க்க முடிவதில்லை.
- எல்லாரிடமும் சிந்தனை உருவாகிறது. ஆனால் சிலருக்குத்தான் சில சாதனைகளைச் செய்ய உதவுகிறது. பலருக்கு அது வேதனையைத்தான் தருகிறது.

சிந்தனை - சாதனை - வேதனை!

அனுப்பியவர் : பத்மநாபன்

திரமாகவா இருக்கே! சீச்சீ... உன்னைப் பத்தி நான் என்னவெல்லாமோ நெனைச்சிண்டிருந்தேனே, இவ்வளவு தானா நீ !''

மூச்சு விடாமல் அம்மா கத்த, கமலா படிப்பை நிறுத்திவிட்டு ஓடோடியும் வந்தாள்.

சீதாவுக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது.

''ஏம்மா.... சும்மா அவரை ஓட ஓட விரட்டறே? அவர் என்ன சொல்லி விட்டார்? நாளைத் தள்ள முடியற அளவுக்குத் தள்ளிப் போடச் சொன்னார். அவ்வளவுதானே....! நீ கலியாணத்துக்குப் பணம் கேட்டிருந்தாயாம்...... 'ஃபிக்ஸட் டெபாஸிட்'டிலே இருக்கு. அதிலிருந்து எடுக்கக் கொஞ்சம் தாமதமாகும்னு சொன்னார்.....''

என்னதான் சமயசஞ்சீவியாக ஒரு பொய்யைச் சொல்லிச் சீதா சமாளிக்க முயன்றாலும், பாகீரதி சமாதானம் அடையவில்லை.

''எல்லாம் தெரியும்டீ. என் பெண்ணே எனக்கெதிரா சதி செய்யறது என் தலை விதி.... இத்தனை வருஷமா நல்ல சரக்குன்னு நம்பிச் சொந்தபந்தமில்லாதவர்களையெல்லாம் வீட்டிலே வைச்சுண்டிருந்தேன் பாரு ! அதுக்கு நல்ல சன்மானம் இன்னிக்குக் கிடைச்சிருக்கு!''

பாகீரதி சொன்னவள் சரசரவென்று உள்ளே சென்றாள்.

தன்னைப் பற்றிக் குத்தலாகப் பேசிய அவள் மீது சந்தானத்துக்குக் கோபம் உண்டாகவில்லை. கோபித்துக்கொள்ள யோக்கியதையோ, உரிமையோ இல்லை என்று மனச்சாட்சியே உறுத்திற்று. ரகுபதி சீதாவுக்குக் கணவனாக வாய்க்கக் கூடாது என்று அவன் தன் மனத்தில் தீர்மானித்துக் கொள்ளலாம். அதில் எந்த விதமான தவறும் இல்லைதான். ஆனால், தன் மனத்தின் முடிவை அவன் அமுலாக்குவதற்கு ஒரே ஒரு வழி தான் உண்டு. அது பாகீரதி அம்மாளிடம் நேரடியாகச் சொல்லி அவள் மனத்தை மாற்றுவதுதான்! எப்போது அந்த விஷயத்தில் அவன் தோல்வி அடைந்து விட்டானோ, அப்போதே அவன் எல்லாவற்றையும் மறந்திருக்க வேண்டும்! மற்றவர்களுடைய வாழ்க்கைப் பாதையை நிர்ணயிக்கவோ, மற்றவர்களுடைய வழிக்குக் குறுக்கே நிற்பதற்கோ அவனுக்கு என்ன உரிமை இருக்கிறது?

இனி அவனுக்கு இதில் எந்தவிதமான அக்கறையும் இருக்கக் கூடாது. அவன் சீதா, ஜானு, கமலா விஷயங்களில் தலையிடவே மாட்டான். இத்தனை நாட்களாக இருந்த சிநேகம்—முழுத் தேங்காய் போலிருந்த அந்நியோன்னியம் — உடைந்து விரிசல் ஏற்பட்டு விட்டது. அந்த விரிசல் என்றுமே விரிசல்தான். இனிமேல் அது மேலும் பிளந்து போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

பாகீரதி அம்மாள் இரைந்து விட்டுச் சென்ற பிறகு நீண்ட நேரத்துக்கு அமைதி நிலவியது. அந்த அமைதியைக் கலைத்துக் கொண்டே ஜானு வந்தாள். அவளை இறக்கிவிட்டுச் சென்ற காரின் ஹாரன் தெரு முனையில் கேட்டது.

மணி ஒன்பதரை. சீதாவும் கமலாவும் கூடத்திலேயே இருந்தார்கள். சந்தானத்துக்குச் சாப்பிடப் பிடிக்கவில்லை என்றாலும், சாப்பிட அழைக்கவில்லையே என்ற குறை மட்டும் மனத்தை அரித்துக்கொண்டேயிருந்தது.

ஜானு வந்தவள் புடவையை மாற்றிக் கொண்டு கூடத்துக்குத் திரும்பினாள்.

''அக்கா! நீங்களெல்லாம் சாப்பிட்டாகி விட்டதோ இல்லையோ? அம்மா எங்கே கதையிலிருந்து திரும்பி வந்தாச்சா? அது சரி, உனக்குப் பாத்

திருக்கிறாளே அவர் பேரு என்ன? ரகுபதிதானே....? இந்த அலமேலு மாமியை நாளையிலிருந்து வீட்டிலே ஏற்றப்படாது !''

இது வரையில் நடந்த விபரீதத்தை அறியாத ஜானு தன் இயல்பில் பேசிக் கொண்டே செல்வதைக் கண்ட சீதா, அவளைச் சமிக்ஞையால் அடக்கினாள். பிறகு, தாழ்ந்த குரலில், ''இப்போ ஒண்ணும் பேசாதே, ஜானு! எல்லாம் அப்புறம் சொல்கிறேன்!'' என்றாள்.

ஆனால் ஜானு சட்டை செய்யவில்லை. அக்கா என்ன சொல்லுகிறாள், எதற்காகச் சொல்லுகிறாள் என்பதையும் ஆராய்ந்து பார்க்கவில்லை. அம்மாவும் அப்போது கூடத்துக்கு வரவே, ''ஏன் அம்மா! இந்த அலமேலு மாமி, அது தான் உன் பிரண்டு... அவளை இந்த வீட்டிலே இனிமே அனுமதிக்கப்படாது. சுத்த ஃபிராடு...!'' என்றாள்.

''என்னடீ உளர்றே.... உம்... நீ உளறல்லே. குளிப்பிள்ளைக்குச் சொல்லிக் கொடுக்கிற மாதிரி உபதேசம் நடந்துண்டிருக்கு, இந்த வீட்டிலே....! நான் தான் கதை புராணத்துக்குப் போயிடறேனே! சந்தர்ப்பம் நன்னு அமைகிறது......!''

''நீ என்னம்மா இப்போ உளர்றே?'' என்று ஒன்றும் புரியாமல் ஜானு அம்மாவையும், சீதா, கமலாவையும் மாறி மாறிப் பார்த்தாள்.

''போ... போ... அந்த அறையிலே உபதேசம் செய்யறவா இருக்கா. போய்க் கேளு.....!''

''யாரு சந்தானமா? அக்கா, அம்மா என்ன சொல்றா? நான் இன்னிக்கு ஒரு சமாசாரம் சொல்லணும்னு துடியாத் துடிச்சுண்டு வந்தேன். அம்மா என்னவோ அவளே நினைச்சுண்டு உரலே இடிக்கிறாளே!''

நிதானமாகச் சீதா, 'நீ என்ன சமாசாரம் கொண்டு வந்தே?'' என்று கேட்டாள்.

''புரசைவாக்கத்திலே என் பிரண்டு சித்ரா இருக்காளே, தெரியுமா? அவ அம்மாவுக்கு ஒரு தங்கை இருக்கா! முப்பது வயசு ஆய்டுத்து.... இன்னும் கலியாணம் ஆகல்லே.'' — ஜானுவுக்கு மூச்சு வாங்கியது. சிலை போல நின்று கேட்கும் அம்மாவையும், செய்தியைக் கேட்கப் பொறுமை இழந்து நிற்கும் கமலாவையும் மாறி மாறிப் பார்த்து விட்டு, சீதா இருக்கும் திசையில் முகத்தைத் திருப்பிக் கொண்டே ஜானு, ''அவளுடைய சித்தி ரயில்வேயிலே புக்கிங் கிளார்க்கா இருக்கா. செவ்வாய் தோஷம் இருக்கிற ஜாதகம் அவள் ஜாதகம். இத்தனை காலமா ஒண்ணும் பொருந்தி வரல்லே. போன மாசம் இந்த அலமேலு மாமி என்ன செய்திருக்கா தெரியுமா?''— என்று ஆரம்பித்து நிறுத்தினாள்.

''விஷயத்தைச் சொல்லேண்டீ...'' என்றாள் சீதா.

''அவ பிறந்த தேதியையும் நேரத்தையும் வாங்கிக் கொண்டு, ஜாதகத்தையும் எடுத்துண்டு போயிருக்கா ஒரு ஜோஸ்யர்கிட்டே. யாரோ திருவல்லிக்கேணியிலே இருக்காராம். அப்புறம் அவ்வளவுதான். எட்டாம் வீட்டிலே இருக்கிற செவ்வாய் ஆளும் வீட்டுக்குத் தாவிப்பிடுத்து. எப்படி இருக்கு.....?''

''ப்பூ! இவ்வளவுதானு!'' என்றாள் கமலா.

''நீ கொஞ்சம் சும்மாயிரு'' என்ற ஜானு, அம்மா பக்கம் திரும்பி, ''ஏம்மா, அக்கா கலியாணத்தை முடிச்சுக் கொடுத்தால் இத்தனை பணம் தரணும்னு அலமேலு மாமி கண்டிஷன் போட்டிருக்காளா? எத்தனை ரூபாய்?'' என்று கேட்டாள்.

''என்னடீ.... திடீரென்று வந்து குதிச்சு, என்னென்னமோ பேத்தறே? மணி பத்தடிக்கப் போறது!'' என்றாள் பாகீரதி.

''இல்லேம்மா.... சித்ராவின் சித்திக்குக் கலியாணத்தை முடிச்சு வைக்க இருநூறு ரூபாய் கேட்டாளாம். சித்ராதான் சொன்னாள்.''


''யாராவது ஏதாவது சொன்னாள்னு, அதை உடனேயே நம்பிடறதாக்கும். ஒருத்தர் உபகாரம் செய்யறேன்னு முன்வந்தாலே எல்லாருக்கும் அவர்கள் பேரிலே சந்தேகம்தான் வர்றது. நன்றி கெட்ட உலகம்!'' என்றாள் பாகீரதி. பிறகு, ''ஜானு, எனக்கு மூணு வருஷமா இந்த அலமேலு அம்மாளைத் தெரியும். அவள் எப்படிப்பட்டவள் என்கிறதைப் பத்தி நீங்கள் சொல்லி எனக்கு இனிமேல் புத்தி வரவேண்டாம்.... நீங்கள் உங்கள் காரியத்தைப் பார்த்துக் கொண்டு இருங்கள். தலை இருக்கிற போது வால் ஆட வேண்டாம். அலமேலு இருநூறு ரூபாய் கேட்டாளாம். இவ வந்து சொல்றா இங்கே!'' என்றாள்.

''உனக்கு வெளுத்ததெல்லாம் பால்!'' என்றாள் ஜானு.

''அதுக்குத்தான் விஷத்தைக் கலக்கிறவா நிறையப் பேர் வந்து சேர்ந்திருக்கிறார்களே!'' என்றாள் பாகீரதி.

சாட்டை அடி அறையில் இருந்த சந்தானத்தின் இதயத்தைப் பிளந்தது. ஆனால் கோபத்தைக் காட்டினும் வருத்தமே கசிந்தது, பாகீரதியின் அறியாமையை நினைத்து !

(தொடரும்)



வெள்ளி விழா இரண்டாவது பரிசு நாவல்

அத்தியாயம் 21

இரயிலடியில் சிந்திய ரத்தம்

"**வா**ழ்க்கையில் உள்ள எந்த அம்சத்தைக் கூறலாம், எதைக் கூறக்கூடாது என்ற பண்பாடெல்லாம் உங்களுக்குக் கிடையாதுபோல் இருக்கிறது. சேரிவாழ் மக்களை யதார்த்தப்போக்கிலே ஆராயும்போதுகூட அவர்களிடம் எத்தனையோ உயர்ந்த அம்சங்களைக் காணலாமே. அவற்றையெல்லாம் நீங்கள் ஏன் எழுதுவதில்லை?" என்று ரங்கமணி அந்தப் புரட்சி எழுத்தாளரைக் கேட்டான்.

"உங்கள் பத்திரிகையில் என் கதைகளைப் போடவில்லையென்றால் வேண்டாம். என் கதைகளை விளம்பரத்துடன் பிரசுரிக்க வேறு பத்திரிகை இருக்கிறது" என்று கோபமாகப் பேசினார் எழுத்தாளர்.

தீக்ஷிதருக்குத் தர்மசங்கடமாகி விட்டது. தம்முடைய ஊர்க்காரனைப் பெருமையுடன் அறிமுகப்படுத்தப் போய் இப்படி இவர்கள் அவனுடைய முகத்தில் கரியைப் பூசுகிறார்களே என்று பரிதவித்தார். "உனக்குப் பிடிக்கவில்லை என்றால் விட்டுவிடு. அவ்வளவுதானே!" என்றார் ரங்கமணியைப் பார்த்து.

"இது எங்களை மட்டும் பொறுத்த விஷயமில்லையே. தமிழைப் பொறுத்த விஷயம்; தமிழ் நாட்டையும் மக்களையும் பொறுத்த விஷயம்" என்றான் சோமு.

"நீங்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளுங்கள். இப்போது எனக்கு எழுத்துலகிலிருக்கும் மதிப்பைக் கண்டு உங்களுக்குப் பொறாமை. எனக்கு எதிராக ஒரு துரும்பைக்கூட நீங்கள் அசைக்க முடியாது. எந்தக் கொம்பனும் எனக்கு நிகர் இல்லை. யாரைப் பற்றியும் எனக்கு அக்கறை இல்லை. என்னுடைய கதைகள் சினிமாப் படங்களாகவும் தயாராகப் போகின்றன. உங்களுடைய தயவோ, நட்போ எனக்குத் தேவையே இல்லை" என்றார் 'வெற்றி வீரன்'.

கோபத்தால் தத்தளித்தார் அவர். தம்முடைய எழுத்தை இவ்வளவு மட்டமாகப் பேசி விட்டார்களே என்ற ஆத்திரத்தால் பொருமிக் கொண்டிருந்தார். நல்லவேளையாக அந்தச் சமயம் வண்டி மதுரை ஸ்டேஷனுக்குள் நுழைந்தது. எழுத்தாளர் அவசரமாக இறங்கிப் போய் விட்டார்.

"அவனை நேருக்கு நேர் இப்படித் தாக்கி இருக்கக் கூடாது" என்றார் தீக்ஷிதர்.

"இவருடைய கதை பிரசுரமாகும் பத்திரிகை, குடும்பப் பெண்களும் சிறுவர்களும் தீண்டவே லாயக்கில்லை. வீட்டில் குழந்தைகளின் கையில் இந்தப் பத்திரிகை அகப்பட்டால் என்னவாகும்?" என்றான் ரங்கமணி மிகுந்த வேதனையுடன்.

"இப்படி இரண்டு பேரும் சேர்ந்து கொண்டு அவனை ஒரேயடியாகத் தாக்கியிருக்க வேண்டாம். நாசுக்காகப் பேசி

யிருக்கலாம். பாவம் அவன் முகம் கறுத்து விட்டது'' என்று அங்கலாய்த்தார் தீக்ஷிதர்.

''அவர் முகம் கறுத்து விட்டதைப் பெரிதாகச் சொல்லுகிறீர்களே, அவர் தமிழ் இலக்கியத்திலும் பண்பாட்டிலும் கரி பூசிக் கொண்டிருக்கிறாரே, வெள்ளைச் சுவரில் கரி தீட்டிய மாதிரி'' என்றான் ரங்கமணி.

''இந்த மாதிரி ஆபாசமாக ஏன் எழுதுகிறார்கள்?'' என்று கேட்டார் தீட்சிதர்.

ரங்கமணி சொன்னான்:

''மேல்நாட்டு இலக்கியகர்த்தாக்கள் இன்று யதார்த்த நோக்கு தவிர வேறு பல புதுப் பாணிகளிலும் இறங்கிப் பரீட்சை செய்கிறார்கள். சிலர் பிரமாத வெற்றி பெறுகிறார்கள். பலருடைய படைப்புக்கள் குப்பை என்று ஒதுக்கப்படுகின்றன. ஆனால் அங்கெல்லாம் மக்களின் கலாரசனையும் கல்வித் தரமும் வாழ்க்கைத் தரமும் எந்த அளவுக்கு உயர்ந்த பிறகு இத்தகைய புது முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதைக் கவனிக்க வேண்டும். நமது இன்றைய சூழ்நிலைக்கு ஏற்ப எழுத வேண்டியது இன்றைய எழுத்தாளனின் கடமை. அப்படிப் பார்க்கையில் நமக்கு இன்று தேவை லட்சிய நோக்கு தான். இதை விட்டு விட்டு மேனாட்டில் எழுத்தாளர்கள் என்ன செய்கிறார்கள் என்று பார்த்து அந்தப் பாதையைப் பின்பற்ற முயலுவது விபரீதமாக முடியும். பத்திரிகையின் விற்பனைக்காக இந்த மாதிரிக் கதைகளை விளம்பரத்துடன் பிரசுரிக்கப் பத்திரிகை அதிபர்களும் சிலர் இருக்கிறார்கள்.'' ரங்கமணியின் விளக்கம் நியாயமானதாகப் பட்டது தீட்சிதருக்கு.

திருச்சியில் சோமு இறங்கி விட்டான். வண்டியில் கூட்டம் அதிகமில்லை. ரங்கமணி இருந்த பெட்டியின் அடுத்த பகுதியில் யாரோ கிழட்டுத் தம்பதிகள் மட்டும் இருந்தார்கள். திருச்சியை விட்டு வண்டி நகர்ந்ததும் தீக்ஷிதரும், ரங்கமணியும் ஆளுக்கொரு பெஞ்சில், எதிர் எதிராகத் துண்டை விரித்துப் படுத்தார்கள். அடுத்த பகுதியிலிருந்த கிழட்டுத் தம்பதிகள் குறட்டை விடத் தொடங்கி விட்டார்கள். ரங்கமணிக்குத் தூக்கம் வரவில்லை. தீக்ஷிதரும் புரண்டு கொண்டிருந்தார். வண்டி நிலவொளியைக் கிழித்துக் கொண்டு ஓடியது. அது ஓடும் சத்தம், தாளம் தவறாமல் தாலாட்டுவது போல் இருந்தது.



''தில்லி வரை போகிறாய். ஜாக்கிரதையாகப் போய் வா'' என்றார் தீக்ஷிதர்.

''நான் தில்லி போகிறேன் என்று எப்படித் தெரியும்?''

''நீ சொல்லா விட்டால் எனக்குத் தெரியாமல் போய் விடுமா?''

''திரிவேணி சொல்லி யிருப்பாள். இல்லையென்றால் அத்தை சொல்லி யிருப்பாள். கிரிப்ஸ் வருகிறார்; தூதர் என்ற முறையில்.''

''நான் கேட்க வில்லையே நீ போகும் காரணத்தை. வீணாகப் பொய் சொல்லவேண்டாம்'' என்றார் தீக்ஷிதர் சிரித்துக் கொண்டே.

''இதில் பொய் என்ன இருக்கிறது?''

''ரங்கா! கொல்லன் உலையிலேயே ஊசி விற்கிறாயே. சர்தார் உன்னை அனுப்பி வைக்கிறான் என்றால் போதாதா? அதற்கு வியாக்கியானம் எதற்கு?'' என்றார் தீக்ஷிதர். ரங்கமணி ஓர் அசட்டுச் சிரிப்பை உதிர்த்தான்.

''எவ்வளவு பெரிய பொறுப்பை உன் தலையில் சுமத்தி யிருக்கிறானோ? ஜாக்கிரதையாக இருந்து கொள்'' என்றார் தீக்ஷிதர்.

''சர்தாரைப் பற்றி இன்னொரு சமயம் சொல்லுகிறேன் என்றீர்களே.... இப்போது சொல்லுங்களேன்'' என்றான் ரங்கமணி.

''நீயே அவனிடம் கேட்பதுதானே?''

''இரண்டு மூன்று முறை முயன்றேன். ஆனால் கேட்கவில்லை. இதைப் பற்றிக் கேட்க எனக்கு ஏனோ பயமாக இருந்தது'' என்றான் ரங்கமணி.

படுத்திருந்த தீக்ஷிதர் பெஞ்சில் எழுந்து உட்கார்ந்து சன்னலில் சாய்ந்து கொண்டார். வெற்றிலைச் செல்லத்திலிருந்து பாக்கை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு, வெற்றிலையில் சுண்ணாம்பைத் தடவினார். சன்னலுக்கு வெளியே பார்த்தார். நிலவு காய்ந்து கொண்டிருந்தது. அவருடைய நினைவு கடந்த காலத்துக்குள் புகுந்து ஓடியது. வெற்றிலையைச் சுருட்டி வாயில் போட்டுக் கொண்டு ரங்கமணியைப் பார்த்தார்.

''இப்படி இந்தப் பெஞ்சுக்கு வா. மெதுவாகப் பேச வேண்டிய விஷயம். இது பரம இரகசியம்'' என்றார் தீக்ஷிதர். ரங்கமணி எழுந்து எதிரே யிருந்த பெஞ்சில் தீட்சிதரின் பக்கத்தில் போய் உட்கார்ந்தான்.

ஆவலோடு அவரையே பார்த்தான். வெற்றிலையை மென்று ஒரு முறை சன்னல் வழியாக வெளியில் துப்பிவிட்டுச் சொன்னார் தீட்சிதர் : ''எனக்கு ஒரு நம்பிக்கை இருக்கிறது ரங்கா. என்றாவது ஒரு நாள் நீ அஹிம்சையை நம்புவாய்.''

''திடீரென்று ஏன் இந்த எண்ணம் ?''

''முப்பது வருஷங்களுக்கு முன்னால் நான் உன்னைப் போல்தான் இருந்தேன். ஒரு வெள்ளைக்காரக் கலெக்டரை நான்தான் சுட்டுக் கொல்லுவேன் என்று பிடிவாதம் பிடித்தேன். அதை யெல்லாம் இப்போது நினைத்தாலும் ஏதோ கெட்ட கனவு போல் தோன்றுகிறது. அந்தச் சம்பவங்களை மறந்து விடத்தான் முயலுகிறேன். ஆனாலும் பிரும்மஹத்தி தொடருவதுபோல் அந்த நினைவு என்னைத் தொடர்ந்தே வருகிறது'' என்றார் தீட்சிதர்.

''வயதாகும் போது பலவீனம் ஏற்படும். அந்தப் பலவீனத்தில் நீங்கள் அஹிம்சாவாதி



யாக மாறி யிருப்பீர்கள்!'' என்றான் ரங்க மணி. இதைக் கேட்டுத் தீட்சிதர் சிரித்தார்.

''என் உடல் தளர்ச்சி அடைவதற்கு முன்பே நான் அஹிம்ஸாவாதியாகி விட்டேன். மணியாச்சி ரயில்வே ஸ்டேஷனில் வெள்ளைக்காரன் குண்டடிபட்டு இரத்த வெள்ளத்தில் துடித்ததை இந்தக் கண்களால் பார்த்தகணமே என் வெறி எல்லாம் மறைந்து விட்டது. ஹிம்ஸையின் கொடுமையை ஓர் உயிர் துடிக்கும்போது தானப்பா உணர முடியும்!'' என்றார் தீட்சிதர்.

''நீங்களே சுட்டுவிட்டீர்களா?'' — ரங்க மணி ஆவலோடு கேட்டான்.

''நல்லவேளை! அந்தப் பாவத்துக்கு நான் ஆளாகவில்லை. கொலைகாரன் என்ற பழி எனக்கு வரவில்லை.''

''எதிரியைக் கொன்றால் பழியா?''

''தனிப்பட்டவன் நமக்கு எதிரியா ? பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அல்லவா நமக்கு எதிரி? இந்த மாதிரி ஒன்றிரண்டு வெள்ளைக் காரர்களைக் கொலை செய்தால் பிரிட்டிஷ் ஆட்சியை ஒழித்ததாகி விடுமா? இதென்ன போர்க்களமா, இந்த மாதிரிக் கொலைகளை ஏற்றுக் கொள்வதற்கு ? நிரபராதியான ஒருவனை சுட்டுத் தள்ளுவது பெரிய வீரமா...? என்னவோ அந்தக் காலத்தில் உன்னைப்போல் வெறி பிடித்து அலைந்தேன். அந்தக் காரியத் துக்கு ஊக்கமளித்தேன். பைத்தியக்காரச் செயல்தான். தீவிரவாதியான சிதம்பரம் பிள்ளைகூட அந்தக் கொலையை ஒப்புக் கொள்வதில்லையே!''

''கலெக்டராக இருந்த ஆஷ் என்பவரைக் கொலை செய்ததைத்தானே சொல்லு கிறீர்கள்?''

''ஆமாம். அந்தக் கொலைதான். அப்பப்பா! இப்போது நினைத்தால்கூட மனசுக்கு எவ்வளவு கஷ்டமாக இருக்கிறது! அந்தச் சதிக்கு உன் அப்பா சாமிநாதனும் உடந்தை யாக இருந்தான்.''

''அந்தக் கலெக்டரால்தானே நாலு பேர்கள் செத்தார்கள்?''

''ஆமாம். அவன் வெறி பிடித்தவன்தான். சிதம்பரம் பிள்ளையையும், சுப்பிரமணிய சிவாவையும் கைது செய்த போது திருநெல்வேலியே கொந்தளித்துப் பொங் கியது. அந்தக் கிளர்ச்சியில் கண்ணை மூடிக் கொண்டு சுட்டுத் தள்ளினான் ஆஷ். அதற்குப் பழி வாங்கத்தான் நாங்கள் சதி செய்தோம்.''

''நாங்கள் என்றால் நிறையப் பேரா?''

''பதினைந்து பேர்களுக்கு மேல் கூடினோம். நான், உன் அப்பா சாமிநாதன், ஏட்டு குருநாதய்யர், மாடசாமிப்பிள்ளை, வாஞ்சி நாதன் இப்படிப் பலர் உண்டு. எங்களுக்குத் தலைமை வகித்தவர் நீலகண்ட பிரும்மச் சாரி என்ற ஒரு முரட்டு ஆசாமிதான். அவர் இரத்தத்தில் எங்களிடம் கையெழுத்து வாங்கினார்.''

''ஏட்டு குருநாதய்யர் என்கிறீர்களே, போலீஸ் இலாகாவில் உள்ளவருமா உங்க ளோடு சேர்ந்தார்?''

''உம்!... அது மட்டுமல்ல, அந்த ஏட்டு குருநாதனால்தான் ஆஷ் கொலையைச் சாதிக்க முடிந்தது. அவன் போலீஸாக இருந்து கொண்டே எங்களுக்கு உதவினான். அவ னுடைய தயவால்தான் போலீஸின் சந் தேகத்துக்கு ஆளாகாமல் நாங்கள் கூட்டம் கூடிச் சதித் திட்டம் தீட்ட முடிந்தது. எங்கள் கூட்டம் நடந்த இடம்தான் விசித்திரம். தென்காசியில் மட்டப்பாத் தெருவில் அந்தக் காலத்தில் ராஜம் என்று ஒரு தாசி இருந் தாள். அவளுடைய வீட்டில்தான் நாங்கள் அடிக்கடி கூடினோம்.''

''சேச்சே, போயும் போயும் ஒரு தாசி வீடு தானா கிடைத்தது?'' என்று கூறி முகத்தைச் சுளித்தான் ரங்கமணி.

''இந்த மாதிரியான சதிகளுக்கெல்லாம் தாசி வீடுதான் பத்திரமான இடம். தாசி வீட்டுக்குப் பலர் வருவார்கள், போவார்கள். ஆகையினால் நாங்கள் அங்கு போவதைப் பற்றி மற்றவர்களுக்கு வேறு விதமான சந் தேகம் தோன்றாது. இந்தத் தாசி வீட்டை ஏட்டுக் குருநாதன்தான் தேர்ந்தெடுத்தான். முதலில் தாசி வீட்டுக்கு வர நீலகண்ட பிரும்மச்சாரி மறுத்தார். ஆனால் குருநாதன் விளக்கிச் சொன்ன பிறகு பிரும்மச்சாரி ஒப்புக் கொண்டார்.''

''நல்ல வேடிக்கைதான்!'' என்று சிரித் தான் ரங்கமணி.

''தாசி ராஜம் எங்களுக்கு எவ்வளவு உதவினாள் தெரியுமா? ஒரு சமயம் நாங்கள் உள்ளே இருந்த போது ஒரு போலீஸ்காரன் சந்தேகப்பட்டுக் கதவைத் தட்டி விட்டான். ராஜம் என்ன செய்தாள் தெரியுமா? எங் களை யெல்லாம் வேறு ஓர் அறைக்குள் அடைத்துவிட்டுக் குருநாதனை மட்டும் தன் படுக்கையறையில் படுக்கையில் படுக்க வைத்து விட்டாள். ராஜத்தின் அம்மா, வந்த போலீஸ்காரரிடம் உள்ளே ஆள் இருக் கிறது என்று சொல்லிப் பார்த்தாள். அவன் விடவில்லை. சந்தேகமான பேர்வழி உள்ளே வந்தாக வேண்டும் என்று அவன் சாதித்தான். கடைசியில் ராஜம் வெளியே வந்து ஏட்டு உள்ளே இருப்பதாகச் சொன் னாள். அதையும் அந்தப் போலீஸ்காரர் நம்ப வில்லை. கடைசியில் குருநாதன் வெளியே வந்து விட்டான். அவனைப் பார்த்த பிறகு தான், 'ஏட்டய்யாவா! மன்னியுங்கள். தொந்தரவு பண்ணி விட்டேன்' என்று கூறிச் சலாமையும் போட்டு விட்டு மரியாதையாகப் போய் விட்டான். ராஜத்துக்கு மட்டும் அப்போது அந்தப் புத்தி தோன்றவில்லை என்றால் நாங்கள் அனைவரும் அகப்பட்டுக் கொண்டிருப்போம்.''

தீட்சிதர் பேசுவதை நிறுத்திவிட்டுக் கூஜாவிலிருந்து தண்ணீர் எடுத்து வாயைக் கொப்புளித்து விட்டு மீண்டும் வெற்றிலை போடத் தொடங்கினார்.

''பிறகு உங்கள் சதி எப்படி உருவா யிற்று?'' என்று பொறுமை இழந்து கேட் டான் ரங்கமணி.

''கொஞ்சம் பொறு. அந்தப் பகுதியில் யாராவது விழித்திருக்கிறார்களா, பார்!'' என்றார் தீட்சிதர். ரங்கமணி எழுந்து அந்தப் பகுதியில் எட்டிப் பார்த்துவிட்டு, ''நல்ல தூக்கம்'' என்றான். வெற்றிலையைச் சுருட்டி வாயில் போட்டுக்கொண்டு பேசினார் தீட்சிதர்.

''குருநாதன் போலீஸ் இலாகாவிலிருந்து எப்படியோ இரண்டு கைத்துப்பாக்கிகளைத்

திருடிக்கொண்டு விட்டான். அதை உன் அப்பாவின் பொறுப்பில்தான் கொடுத்திருந்தோம். ஒரு நாள் இரவு பத்து மணிக்கு மேல் இருக்கும். நாங்கள் எல்லாரும் ராஜத்தின் வீட்டில் இருந்தோம். ஏட் குருநாதன் பரபரப்புடன் உள்ளே வந்தார். மறுநாள் கலெக்டர் ஆஷ"ம் அவன் மனைவியும் திருநெல்வேலியிலிருந்து கொடைக்கானலுக்குப் புறப்படுவதாகச் சொன்னான். நல்ல சந்தர்ப்பம். கூட்டத்தில் ஒவ்வொருவனும் தான்தான் சுட வேண்டும் ஆஷை என்று துடித்தான். ஆனால் நீலகண்ட பிரும்மச்சாரி சீட்டுப் போட்டுப் பார்த்துவிடும்படி சொன்னார். சீட்டுக்களை நான்தான் எழுதினேன். எழுதும் போது என் பெயர் சீட்டில் விழ வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டு தான் எழுதினேன். ஆனால் வாஞ்சிநாதன் என்பவனுக்குச் சீட்டு விழுந்து விட்டது!''

நீட்சிதர் சிறிது நிறுத்தினார். ரங்கமணி பொறுமையிழந்து, ''அப்புறம் என்ன?'' என்று ஆவலுடன் கேட்டான்.

''அப்புறம் என்ன....? மணியாச்சி ஸ்டேஷனில் ரயில் வண்டி நிற்கும்போது, கலெக்டரை அவருடைய பெட்டிக்குள்ளேயே நுழைந்து சுட்டுவிட்டுத் தப்பி ஓடி விட வேண்டும் என்று வாஞ்சிநாதனுக்கு உத்தரவிடப்பட்டது. அவனுக்குத் துணையாக, நானும் உன் அப்பாவும், ஏட் குருநாதனும் போவது என்று முடிவாயிற்று.''

''நீங்கள் என்ன துணை?''

''ஒருவேளை, வாஞ்சியால் சுடமுடியாமல் போய்விட்டாலோ அல்லது சுடுவதற்குமுன்பே அவன் அகப்பட்டுக்கொண்டாலோ ஆஷைச் சுடுவது உன் அப்பாவின் பொறுப்பு. உன் அப்பா தன்னிடமிருந்த இரண்டு கைத்துப்பாக்கிகளில் ஒன்றை வாஞ்சியிடம் கொடுத்தான். மணியாச்சியில் என்ன நடக்கிறது என்பதைக் கவனிக்க வேண்டியது என் பொறுப்பு. குருநாதன் போலீஸ் என்ற முறையில் ஏதாவது தேவை இருந்தால் உதவ வேண்டியது. இதுதான் எங்கள் திட்டம்.''

''திட்டப்படி எல்லாம் நடந்ததா?''

..''ஓ.... நாங்கள் நால்வரும் திருநெல்வேலியிலிருந்து கோவில்பட்டி வரை டிக்கெட் எடுத்துக் கொண்டு கலெக்டர் சென்ற ரயிலிலேயே ஏறிக் கொண்டோம். குருநாதன் போலீஸ் உடையில் வேறொரு பெட்டியில் ஏறிக் கொண்டான். நானும் உன் அப்பாவும் கலெக்டர் இருந்த பெட்டிக்கு முந்திய பெட்டியில் ஏறிக் கொண்டோம். பின்னால் உள்ள பெட்டியில் வாஞ்சி ஏறிக் கொண்டான். வண்டி மணியாச்சி ஸ்டேஷனில் நின்றதும் வாஞ்சி கீழே இறங்கிப் பிளாட்பாரத்தில் நின்றான். நான் வண்டிக்குள்ளேயே இருந்து சன்னல் வழியாகக் கவனித்துக் கொண்டிருந்தேன். சாமிநாதனும் கீழே இறங்கிக் கலெக்டர் இருந்த பெட்டிக்கு வந்தான். அந்தப் பெட்டியின் வாசலில் ஒரு போலீஸ்காரர் காவலுக்கு நின்று கொண்டிருந்தார். அவரிடம் இன்ஸ்பெக்டர் கூப்பிடுவதாகச் சொல்லி அவரை அங்கிருந்து அனுப்பிவிட்டு அந்த இடத்தில் குருநாதன் நின்று கொண்டான். பிறகு ஒரு முறை சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு வாஞ்சியைப் பார்த்துச் சமிக்ஞை செய்தான். வாஞ்சி கலெக்டர் இருந்த பெட்டியின் பக்கம் வந்தான். அந்தப் பெட்டியின் கதவைக் குருநாதன் திறந்து வாஞ்சியை உள்ளே விட்டுக் கதவை அடைத்தான். ஒரு நிமிஷம்கூட ஆகியிருக்காது. துப்பாக்கிச் சத்தம் கேட்டது. ஆஷ் துரை அலறிக் கொண்டு பெட்டிக்கு வெளியே வந்து விழுந்து பிணமானான். வாஞ்சி கையில் துப்பாக்கியுடன் ஓடி வந்தான். ஒருகணம் வெற்றிப் பெருமிதத்தில் என்னைப் பார்த்தான். அதற்குள் அவனைப் போலீஸ்காரர்கள் துரத்தினர். அவன் ஒரு கக்கூஸ"க்குள் நுழைந்து தன்னையே சுட்டுக் கொண்டு இறந்தான்.'' நீட்சிதர் கூறிவிட்டு ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார்.

''நீங்கள் என்ன செய்தீர்கள்?''

''நான் என்ன செய்ய முடியும்? உட்கார்ந்த இடத்திலேயே பிரமை பிடித்துப் போய் அசையாமல் இருந்தேன். ஏட் குருநாதன் என்னிடம் வந்து தன் வேலை முடிந்து விட்டது; முடிந்தால் என்றைக் காவது சந்திக்கலாம் என்று கூறிவிட்டுக் கூட்டத்துக்குள் மறைந்து விட்டான். கோவில்பட்டி போய்ச் சேரும் வரை பிரமை பிடித்துப் போயிருந்தேன்.''

''வாஞ்சிதான் செத்து விட்டாரே, பிறகு என்ன பயம்?''

''எங்கள் கூட்டத்தில் உள்ள ராமசாமி என்பவன் எங்களுக்கு எதிராகச் சாட்சி சொன்னான். அந்தத் துரோகி என்ன காரணத்தாலோ என்னையும் உன் அப்பாவையும் காட்டிக் கொடுக்கவில்லை.''

''அப்புறம்?''

''சதி வழக்கு நடந்தது. ஆனால் மாடசாமி பிள்ளையும் ஏட் குருநாதனும் தப்பிவிட்டார்கள். போலீஸில் இன்று வரை அகப்படவேயில்லை. ஏட் குருநாதன் மட்டும் இல்லை என்றால் அன்று கலெக்டர் இருந்த பெட்டிக்குள் வாஞ்சி ஏறியிருக்கவே முடியாது.''

''இவ்வளவு தீரத்துடன் இருந்த நீங்கள் கோழையானது எப்போது?'' என்று கேட்டான் ரங்கமணி.

(தொடரும்)

சாக்கடை நீரின் மகிமை



இந்தியாவில் கிடைக்கும் பாலில் ஒரு பைண்டுக்கு 4 கோடி கிருமிகள் இருக்கின்றன. ஆனால் இலண்டன்மா நகர் சாக்கடையில் உள்ள நீரில் ஒரு பைண்டுக்கு மூன்றரைக் கோடி கிருமிகளே இருக்கின்றன.

இக்கருத்தை பெப்பரால் என்ற ஆங்கில விஞ்ஞானி கூறியுள்ளார்.

ஆதாரம்: உயிரணுக்களின் உலகம்.
தகவல்: அடந்தையான்.

CIBA



பிரிகா டால்க்

இனிய நறுமணம் ஊட்டி, வியர்வை நாற்றத்தை அறவே அகற்றும் டால்க். நாள் முழுவதும் உங்களைக் 'குளிர்ந்தெ முக' புத்துணர்ச்சியுடன் விளங்கச் செய்யும். அங்கமெல்லாம் பட்டுப் போன்ற மென்மைதவழ, விசேஷப் பொருள்களைக் கொண்ட டால்க்.

'சருமத்தை மிருதுவாக்கி,' வியர்வை நாற்றத்தை அகற்றும் டால்க்.



ஊர் வம்பு

✽ தஞ்சை சகோதரிகளின் ஹரிகதை
✽ இளைஞர்கள் தந்த மருத்துவ மனை
✽ பஞ்ச நிவாரண நிதி

சென்னை அமைந்தகரை ஸ்ரீ ஏகாம்பரேசுவரர் சந்நிதியில் ஜகத்ரக்ஷக தேவார திருப்புகழ் சபையின் பதின்மூன்றாம் ஆண்டு நிறைவு விழாவையொட்டி குமாரி சாவித்திரியும் குமாரி காமாட்சியும் 'பார்வதி கல்யாண'த்தைப் பாதி பாதியாகப் பிரித்துக் கொண்டு ஹரிகதை செய்தனர். குமாரி சரஸ்வதி தம்புரா மீட்டியதோடு, பின் பாட்டுப் பாடினார். குமாரி ராஜேசுவரி மிருதங்கம் வாசித்து ஹரிகதையைப் பரிமளிக்கச் செய்தார். காளிதாசனின் சுலோகங்களைத் தஞ்சை சகோதரிகள் இனிமையாக வழங்கினர். கதை நடுவில் ஒளிவிளக்கு



தஞ்சை சகோதரிகள்

அணைந்து விட்டது. உடனே திரும்பி விளக்கு வந்ததும் ஹரிகதை வழங்கிய குமாரி சாவித்திரி, "பார்த்தீர்களா? ஒளிவிளக்கு ஒரு கணத்தில் அவிந்து விட்டது. நம் வாழ்க்கையும் இப்படித்தான். ஒரு க்ஷணத்தில் பொட்டென்று போய் விடும். நாம் இருக்கும் வரை பக்தியோடு இறைவனைத் துதித்து வரவேணும். இமவானின் அநுமதி பெற்றுப் பார்வதி தேவியும் ஏகாக்ரசித்தத்துடன் பரமசிவனை நோக்கித் தவமிருந்தார்!" என்று சமயோசிதமாகப் பேசிக் கதையைத் தொடர்ந்ததை அனைவரும் ரசித்தனர்.

1927ம் ஆண்டில் வேல்ஸ் இளவரசர் தாம் நிகழ்த்திய ஓர் உரையில் "இளைஞர்கள் வட்ட மேஜையைச் சுற்றி அமர்ந்து விவாதிக்க வேண்டும்; பழைமையில் உள்ள நல்ல விஷயங்களை ஏற்க வேண்டும். அவற்றைக் காலத்துக்கேற்ப மாற்றிக் கொண்டு, அவற்றில் பல அபிவிருத்திகளையும் செய்ய வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

இதன் விளைவாகத் தோன்றியது உலக இளைஞர் சேவைக் கழகம். உலகில் 70,000 அங்கத்தினர்கள் படைத்த இந்த இளைஞர் சேவைக் கழகம் பல அரும் பணிகளைச் செய்து வருகிறது. இதன் ஓர் அங்கமாகச் சென்னையில் 1957ம் வருஷம் தோன்றிய சென்னை வட்ட மேஜை—1 பதினெட்டு வயது முதல் நாற்பது வயதுக்குள் உள்ள சேவா மனப்பான்மை படைத்த இளைஞர்களைக் கொண்டிருக்கிறது. கடந்த பத்து வருஷங்களில் ஒன்றரை லட்சத்துக்கு மேல் நல்ல காரியங்களுக்காகச் செலவிட்டிருக்கின்றது. பள்ளிப்பட்டு சிறுவர் விடுதி, அடையாறு கான்சர் இன்ஸ்டிட்யூட், அவ்வை இல்லம், செஷையர் இல்லம், சேவா சமாஜம், பால மந்திர், போலீஸ் குடும்ப நல நிதி முதலிய பல நற்பணிகளுக்கு உதவி புரிந்திருக்கிறது. இப்பொழுது ஒன்றரை லட்சம் செலவில் அடையாறு வாலண்டரி ஹெல்த் சர்வீஸ் மருத்துவ மனைக்குக் காது, மூக்கு, தொண்டை மருத்துவ மனையைக் கட்டிக் கொடுத்திருக்கிறது.

இந்தப் புதிய மருத்துவ மனையைச் சென்னை சுகாதார மந்திரி ஜனாப் சாதிக் பாஷா திறந்து வைத்தார். "நான் வக்கீல். எனக்கும் டாக்டர்களுக்கும் உள்ள உறவு அவர்களை நீதி மன்றத்தில் குறுக்கு விசாரணை செய்ததுதான். இப்போது நான் சுகாதார மந்திரி. எல்லோருடைய ஒத்துழைப்பையும் கோருகிறேன்!" என்று மனுப் போட்டுக் கொண்டார் அவர்.

இந்தக் காது, மூக்கு, தொண்டை மருத்துவ மனையின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள பிரபல ஈ. என். டி. ஸர்ஜன் டாக்டர் வி. எஸ். சுப்பிரமணியம் இந்த மருத்துவ மனை எழும்பக் காரணமாக இருந்தார். டாக்டர் சஞ்சீவியும் இந்த நல்ல காரியத்துக்கு உறுதுணையாக இருந்தார்.

இந்த விழாவில் பீஹார் பஞ்ச நிவாரண நிதிக்கு வட்டமேஜை இளைஞர்கள் 2500 ரூபாய் நன்கொடை வழங்கியது ஒரு சிறப்பான அம்சம். இளைஞர்கள் மனசு வைத்தால் ஆகாத காரியமில்லை என்பதற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது சென்னை அடையாற்றில் உள்ள இந்தக் காது, மூக்கு, தொண்டை மருத்துவ மனை.

தென்னிந்திய பிலிம் வர்த்தக சபையில், 29-4-67 அன்று தமிழக முதல் அமைச்சருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. மேற்படி வர்த்தக சபையின் தலைவரான ஏ. எல். சீனிவாசன் அவர்கள் தமது வரவேற்பு உரையில், "முதல் அமைச்சருக்கு வரவேற்புக் கூறும் இந்த நல்ல தருணத்தில் நமது குறைகளைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. மாண்புமிக்க நமது முதல் அமைச்சர் திரு அண்ணாதுரை அவர்கள் ஒரு சிறந்த சினிமாக் கதாசிரியர். திரைப் படக் கலையின் அருமை பெருமைகளை நன்கு உணர்ந்தவர். ஆகவே, அவரிடம் நமது குறைகளைச் சொன்னால், அவைகளைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்து ஆவன செய்ய அவரால் முடியும் என்ற காரணத்தினால்தான் தாயிடம் சேய் முறையிடுவது போல் நமது குறைகளைச் சொல்லுகிறோம்" என்றார். பிறகு தென்னிந்திய பிலிம் வர்த்தக சபையின் நன்கொடையான ரூ. 16,000 பீஹார் பஞ்ச நிவாரண நிதிக்கு முதல் அமைச்சரிடம் அளிக்கப்பட்டது.

வெண்ணிலவுப் பெண்ணரசி

சோமு

அத்தியாயம் 8

வினையின் விளைவு

வேலவன் கோதையை நோக்கிப் பேசத் தொடங்கினான் கொங்குச் சேரன்.

''தம்பி, நீ வெள்ளைத் தீவில் இருந்தபோது வானமண்டலக் கடம்பன் செய்த பழி பாவங்களைப் பற்றியும் அந்தத் தீவிலிருந்து அவன் வெளியேற்றிய துறவிகளைப் பற்றியும் கேள்விப் பட்டிருக்கிறாய் அல்லவா?''

சேரன் இவ்வாறு கேட்டதும் வேலவன் சொல்லுவான்:

''அரசே, வானமண்டலக் கடம்பன் யவன மரக்கலங்களைக் கொள்ளையடிப்பதும், கடல் மீது கொடுமைகள் இழைப்பதும் பற்றி ஏற்கனவே நான் அறிந்திருந்தேன். ஆனால், அந்தக் கொடிய கொலை பாதகன் புனிதமான துறவி ஒருவரை ஒரு நாள் இரவில் வாளால் வெட்டி வீழ்த்தினான் என்ற வரலாற்றை வெள்ளைத் தீவுக்குப் போன பிறகுதான் கேள்விப் பட்டேன்'' என்று சொல்லி ஆழ்ந்த துயர நினைவிலே உள்ளம் உருகினான் வேலவன்.

''தம்பி, கடம்பன் தனது வாளால் வெட்டி வீழ்த்திய அந்தத் துறவியின் வரலாறு பற்றி நீ அறிந்து கொண்டது என்ன?''

''மன்னர் பெருமானே, ஒரு நாள் இரவு குகை ஒன்றின் எதிரே துறவி ஒருவர் நின்று வான மண்டலத்தை நோக்கியவாறு ஏதோ கணக்குப் பார்த்துக் கொண்டிருந்தாராம். அப்போது அவரிடம் சென்று பகடி பேசினானாம் கடம்பன். அந்தத் துறவி அங்கேஒரு கிணற்றின் அடியில்



புதையல் இருப்பதாகவும், அந்தப் புதையலை ஒரு பூதம் காத்து வருவதாகவும், ஒரு மனிதனை அந்தப் பூதத்துக்குப் பலி கொடுத்தால் புதையல் வெளி வரும் என்பதாகவும் சொன்னாராம். உடனே கடம்பன் அந்தத் துறவியையே தனது வாளால் வெட்டி வீழ்த்தி விட்டானாம்!''

இவ்வாறு சொன்னான் வேலவன் கோதை. கொங்குச் சேரர் சொல்லுவார்:

''தம்பி, நீ கேட்ட வரலாறு மெய்தான். வெள்ளைத் தீவிலே புதைந்து கிடக்கும் தமிழர்களின் செல்வங்கள் எல்லாம் வெளியே வர வேண்டும் என்றால் கடம்பனைப் பலி கொடுத்தால்தானே முடியும்! புதையல் என்பதற்கு இப்படி ஒரு உட்பொருள் இருப்பதாக எண்ணி நீ அந்தத் துறவியின் சொற்களை ஆராய்ந்து பார்! அதோடு அந்தத் துறவி யார் என்று உனக்குத் தெரியுமா?''

''அந்தத் துறவியா? அவரைக் கொலை செய்த பிறகு கடம்பனுக்கு ஏற்பட்ட மனக் குமைவிலே தீவிலிருந்த எல்லாத் துறவிகளையுமே வெளியேற்றிவிட்டதால் இந்தத் துறவியைப்பற்றி மேற்கொண்டு விசாரித்துத் தெரிந்து கொள்ள முடியவில்லை'' என்றான் வேலவன் கோதை. கொங்குச் சேரர் ஏதோ ஒரு துயர நினைவின் வசமாகிக் கலங்கி நின்றார். பிறகு சொல்லுவார்:




White
det
டெட்
whitens
while it washes
clean

''தம்பி, அகப்பா நகரத்தைத் தீயிட்டுச் சாம்பலாக்கியபோது அந்தப் போரிலே நமது இளைச் சேரருக்கு வலக் கரமாக நின்றவர் வேறு யாருமில்லை. உன்னுடைய வீரம் மிகுந்த தந்தையேதான். ஆனால் அந்தப் போரிலே ஏற்பட்ட வெற்றிக்குப் பிறகு நமது இளைச் சேரர் அதிக நாள் முடிசூடி அரசாளவில்லை என்பது உனக்குத் தெரிந்திருக்குமே—''

''தெரியும், அண்ணலே! அரசர் தமது ஆசிரியருடன் தாமும் துறவு பூண்டு தவம் செய்யச் சென்றதும், அதைக் கண்ணுற்ற எனது தந்தை நீண்ட நாள் அதையே எண்ணி எண்ணிக் கலங்கிக் கண்ணீர் வடித்ததும், பிறகு ஒரு நாள் என் தந்தையும் அரசரைப் போலவே துறவு மேற்கொண்டு எங்களை விட்டுப் பிரிந்து சென்றதும், பின்னர் இந்த உலகிலிருந்தே மறைந்ததும் பற்றி அரை குறையாக உற்றார் உறவினர் வழியாகக் கேட்டுத் தெரிந்து கொண்டிருக்கிறேன். என்றாலும் எதுவும் தெளிவாகத் தெரியாது.''

இவ்வாறு கூறினான் வேலவன் கோதை. கொங்குச் சேரர் மேலே எதுவும் பேசாமல் மௌனமாக இருந்தார். நீண்ட நேரம் கழித்துக் கேட்டார்:

''தம்பி, உன் தந்தை துறவு மேற்கொண்டதும், பிறகு இந்த உலகிலிருந்து ஒரு நாள் மறைந்துவிட்டார் என்பதும் உண்மையான செய்திகளே. ஆனால் துறவு மேற்கொண்ட பிறகு உன் தந்தை தமது வாழ்நாளின் பிற்பகுதியை எங்கே கழித்தார் தெரியுமா? வெள்ளைத் தீவிலேதான்! இதற்குக் காரணம் சமணர்களோடும் சாக்கியர்களோடும் பழகிப் பழகி அவருக்கு ஊழ்வினை ஆராய்ச்சியிலும், வினைப் பயனிலும், சோதிடக் கணக்குகளிலும் முற்பிறப்பு மறு பிறப்பு ஆகிய கல்விகளிலும் எல்லையற்ற ஆர்வம் ஏற்பட்டிருந்தது. வெள்ளைத் தீவில் தங்கியிருந்து அவர் செய்த இத்தகைய ஆராய்ச்சிகளும் எழுதி வைத்த ஏடுகளும் கணக்கில் அடங்கா! தம்முடைய முடிவு காலத்தைப் பற்றியும் வெள்ளைத் தீவின் முடிவு காலத்தைப் பற்றியும் அவருக்குத் தெரியாமலா இருந்திருக்கும்! வானத்தைப் பார்த்துக் கணக்குப் போட்டுக் கொண்டிருக்கும்போதே தம்முடைய முடிவு காலம் நெருங்குகிறது என்பதும், அந்த முடிவு காலம் கடம்பனுடைய வடிவிலே தம்மை நெருங்கி வருகிறது என்பதும், அவருக்குத் தெரியாமலா போயிருக்கும்! நிச்சயம் தெரிந்திருக்கும், அவருடைய அந்த வானக் கணக்கிலே!''

கொங்குச் சேரர் இப்படிச் சொன்னதும் அப்படியே உடல் பதறி நின்றான் வேலவன்.

''அண்ணலே, என்ன சொல்லுகிறீர்கள் நீங்கள்? இந்தச் செவிகளிலே புகுந்த சொற்கள் எத்தகைய பெருந்துயரத்தைத் தாங்கி வருகின்றன! உண்மையில் வெள்ளைத் தீவிலே—''

''தம்பி, கலக்கம் அடையாதே. உன் தந்தை வருங்காலம் உணர்ந்தவர். கடம்பனுடைய கையிலே தான் மடியப் போவதும் தன் மகனுடைய கையிலே அந்தக் கடம்பன் மடியப் போவதும் ஆகிய ஊழ்வினை விளைவுகளையெல்லாம் கணக்கோடு தெரிந்து கொண்ட ஞானி அவர்! கிணற்றுக்குள்ளே புதையல் இருக்கிறது என்றார் அல்லவா. இப்போது அந்தத் தீவு முழுவதுமே உனக்குக் கிடைக்கப் போகிற புதையல் என்று நீ கருத வேண்டும். அதற்குரிய நரபலியை, வானமண்டலக் கடம்பனின் உயிரையே காவு கொடுத்தாகிவிட்டது. இனி விலை மதிப்பற்ற ஆராய்ச்சிகள் அடங்கிய பௌத்தப் பள்ளி ஏடுகளும், கலைப் பொருள்களும், ஞானச் செல்வங்களும் எல்லாம் தமிழகத்துக்கு உன் மூலமாகப் புதையல் போன்று கிடைக்கப் போகின்றன. உன் தந்தையைக் கொன்ற அந்தக் கொலை பாதகனை நீயே கொன்று முடிக்க வேண்டும் என்ற பெரிய நோக்கம் சேரலாத மன்னருடைய உள்ளத்தின் ஆழத்தில் உயிர் வாழ்ந்து வந்தது. அவர் உயிரோடு இருக்கும்போதே அந்த நோக்கம் நிறைவேறியதையும் பார்த்துவிட்டார். அத்தனை பெரிய அரசச் சுற்றத்தார்களிலே உன்னைத் தேர்ந்தெடுத்து வெள்ளைத் தீவுக்கு அனுப்பியதிலே எத்தகைய நோக்கம் அவருக்கு இருந்தது என்பதை நான் ஒருவன் நன்கு அறிந்தவனாதலால், அவர் வாழ்ந்திருந்து செய்ய வேண்டிய குறைக் கடமைகளையும் இனி அவருடைய சார்பிலே நான் செய்ய வேண்டும். செய்து உன்னை வெள்ளைத் தீவிலே குடியேற்றி விட்டேன் என்றால், பிறகு எனக்கு எத்தகைய கவலையும் இராது. ஆனால் அதுவரை என்னுடைய ஆசைகளுக்கும் எண்ணங்களுக்கும் குறுக்கே நிற்பது துளுநாட்டுப் போர்தான். துளு நாட்டுக் கயமை ஒழிந்து மும்முனைப் போரிலே நாம் வெற்றி பெற்றுவிட்டால் என் ஆசைகள் அனைத்தும் நிறைவேறிவிடும். தமிழகத்தின் வாழ்வு சீரடைவதோடு, வெள்ளைத் தீவு மறுமலர்ச்சி பெறும். துளுநாட்டுக்

குமே மறு வாழ்வு உண்டாகும். இள நன்னன் அத்தனை நல்ல பிள்ளை. அப்படிப்பட்ட கொடிய தகப்பனுக்கு இப்படிப்பட்ட ஒரு பிள்ளை தோன்றியிருக்கிறான். அவனை எண்ணியாவது துளு நாட்டுக்கு மறு வாழ்வு தோன்ற வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். மிஞிலியினுடைய இடத்தில் அழலாடியைப் போல ஒரு நல்ல வீரன் இருந்தால் போதும். துளுநாடு தழைத்து விடும். வெள்ளைத் தீவைப் பற்றியோ கவலையே இல்லை. உன்னைப் போன்ற பண்புகள் நிரம்பிய ஒரு வீரன் அந்த அறிவுப் புதையலான தீவைப் பாதுகாக்கத் தொடங்கினால், தமிழகமே பெருமை கொள்ளக் கூடிய அளவுக்கு நமது கலைக் கழகங்களும் அறச்சாலைகளும் தழைத்தோங்கும் என்பதில் ஐயமில்லை. எனக்கு நல்ல நம்பிக்கை இருக்கிறது. கொற்றவை திருவருளும், உன் தந்தையின் ஆசியும் இருக்கும்போது நாம் ஏன் தயக்கம் அடைய வேண்டும்? என்னைக் கேட்டால் இப்போதே நீயும் அழலாடியும் நமது ஆனைப் படைகளை நடத்திக் கொண்டு துளு நாட்டின்மீது நேரே படையெடுத்துச் செல்லலாம் என்று சொல்லுவேன். ஆனால் நார்முடிச் சேரல் முதன் முதல் ஏற்பட்ட பாழிப் போர் அநுபவத்துக்குப் பிறகு சற்றுத் தயங்குகிறார். எனவே மும்முனைகளிலே தாக்க வேண்டும் என்பது அவருடைய கருத்து. நம்முடைய ஆனைப் படையும் குறுநாடுகளின் படையும் ஒன்று சேர்ந்து புன்னாடு வழியாகத் தாக்க வேண்டும். செங்குட்டுவன் கடற் படையோடு வந்து கடற் கரையிலே தாக்குவான். மலைப் பகுதி வழியாக மற்றொரு படை வந்து துளு நாட்டுக்குள்ளே புகுமானால், நன்னனுக்கும் மிஞிலிக்கும் மூச்சுத் திணறிவிடும் அல்லவா! அதனால்தான் நார்முடிச் சேரலின் கருத்துப்படி நானும் இதுவரை காத்திருந்தேன். நீ இங்கே வந்து சேர்ந்த பிறகு இனித் தயங்க வேண்டியதில்லை. ஆனைப் படையோடு செல்கிறாயா அல்லது செங்குட்டுவனுடைய கடற் படையோடு செல்கிறாயா அல்லது மலை நாடு வழியாகத் தாக்கப் போகிறாயா என்பது குறித்து நார்முடிச் சேரலுக்கு நான் தூது சொல்லி அனுப்பியிருக்கிறேன். அதனுரிடமிருந்தும் சில செய்திகள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். இந்த மறுமொழிகள் வரும் வரை நாம் காத்திருப்போம்!'' என்றார் கொங்கு மன்னர்!

கொங்கு வஞ்சி அரண்மனையில் இவ்வாறு வேலவன் கோதையும் மன்னரும் மும்முனைப் போரைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்த வேளையில், மும்முனைப் போரின் குறிக்கோளாக விளங்கிய துளு நாட்டிலே தானைத் தலைவன் மிஞிலி எதிர்பாராதவாறு சீறி விழுந்து கொண்டிருந்தான் நாக மல்லன் மீது!

''நம்முடைய அரண்மனையிலிருந்து யாராவது எப்போதாவது தப்பிப் போகும் தருணத்தில் எல்லாம் நீ வந்து தோன்றுகிறாய். அடா மல்லா, எனக்கு உன்மீது சந்தேகமாக இருக்கிறது. சொல். இப்போது எதற்கு வந்தாய்? வேலவன் தப்பிப் போனதற்கு நீயும் உடந்தையாக இருந்து விட்டு இங்கே என்னிடம் வந்து எனக்கும் நல்லவனாக நடந்து கொள்ளப் பார்க்கிறாயா?''

இவ்வாறு கூச்சலிட்டான் மிஞிலி. நாகமல்லனுக்கு உடம்பு பதறியது.

''வீரர் திலகமே! முன்னொரு நாள் அழலாடி செய்த வஞ்சகத்தைக் கண்டதும் எனக்கு மனம் பொறுக்கவில்லை. ஓடோடியும் வந்தேன். இப்போதோ வேலவன் தப்பிச் செல்வதை நேரிலேயே பார்த்துவிட்டேன். அதைப் பார்த்ததும் எப்படிப் பொறுத்துக் கொண்டிருப்பேன்!''

நாக மல்லனுடைய நயவஞ்சகச் சொற்களைக் காதில் வாங்கிக்கொண்டே அவனை உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை ஒரு தடவை ஏற இறங்கப் பார்த்தான் மிஞிலி. நாகப் பாம்பைத் தீர்வை என்னும் கீரிப் பிள்ளை பார்ப்பது போல இருந்தது, அந்தப்பார்வை.

''மல்லா, வேலவனை எங்கேயோ வழியிலே பார்த்ததாகச் சொல்கிறாயே எங்கே பார்த்தாய்? எந்த இடத்தில் பார்த்தாய்?''


மிஞிலி எழுந்து வந்து நாகமல்லனுடைய தோள்பட்டையைப் பிடித்து ஒரு உலுப்பு உலுப்பினான்.

நாகமல்லனுடைய தலை சுற்றியது. முன்னொரு தடவை மிஞிலியைப் பார்த்துப் பேசியிருக்கிறான் அல்லவா? அது காரணமாகத்தானே அழலாடியின்மீது மிஞிலிக்குச் சீற்றம் ஏற்பட்டு, அதன் விளைவாக முல்லைமுற்றூர் நெருப்புக்கு இரையாயிற்று. அதோடு நிறுத்தியிருக்கலாம். அல்லவா? இப்போது மறுபடியும் எதற்காக வந்தான்? நெருப்புக்கு இரையானது முல்லைமுற்றூர் தானே? 'அழலாடி கல்லுப் போல் இருக்கிறானே' என்று எண்ணினான் நாக மல்லன். ஆத்திரம் உண்டாயிற்று. அழலாடியின் செல்வாக்கு நாளுக்கு

ஷஷ்டி அப்த பூர்த்தி விழா



சென்னை, யுனைடெட் கமர்ஷியல் பாங்கியில் ஆபீஸராகப் பணி புரியும் ஸ்ரீ P. N. ஈஸ்வரமணி, B'Com. அவர்களின் தந்தையார் ஸ்ரீ P. E. நாராயண அய்யர் அவர்களுக்கு ஷஷ்டி அப்த பூர்த்தி விழா சமீபத்தில் வெகு விமரிசையாக சென்னையில் நடைபெற்றது.



இவரேதான்!



அந்தச் சிறுவன் ஜெர்மனியின் பிரதம மந்திரியாக விளங்கிய அடினரே. ஜெர்மனிக்குப் புனர் வாழ்வு அளித்து ஜெர்மானிய மக்களின் மனத்தினில் அவர் நிரந்தர இடம் பெற்று விட்டவர். 1876ம் ஆண்டில் கோலோனில் பிறந்த அடினர் அவர்களை இருபதுக்கு மேற்பட்ட ஜெர்மானிய, அயல்நாட்டு சர்வகலாசாலைகள் டாக்டர் பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளன. 1904ம் ஆண்டில் எம்மானி வயர் என்ற பெண் மணியை மணந்து கொண்டார். அவர் 1916ம் ஆண்டில் இறந்து விடவே, இரண்டாம் முறையாக கஸினி ஸினிஸ்ஸரை மறுமணம் செய்து கொண்டார்.

ஹிட்லருடைய ஆட்சிக் காலத்தில் நாஜிகளால் சிறை வைக்கப்பட்டிருந்தார் அடினர். அப்போது நாஜி காவலர்கள் இவர் தற்கொலை செய்து கொண்டு விடுவாரோ என்று பயந்தார்களாம். காரணம், மனுஷனுக்கு வயதாகி விட்டது. ஆகவே இவருக்கு எதிர்காலம் என்று என்ன இருக்கிறது என்று அந்தக் காவலர்கள் எண்ணியது தான்! அவர்கள் எண்ணம்தான் எவ்வளவு தவறான ஒன்றாக முடிந்தது! ஹிட்லரின் வீழ்ச்சிக்குப்பிறகு அடினரின் எழுபத்து மூன்றாவது வயதுக்குப் பின்னர்தானே அவரது மகத்தான வாழ்க்கை ஆரம்பமாயிற்று!

நாள் அரச அரங்கிலே வளர்ந்து வருவதும், இப்போது வேலவன் கோதையும் அவனும் இணைந்து தமிழகத்து அரசச் சுற்றத்தாரிடையே பெருநிலை பெறுவதும் நாகமல்லனுக்குத் தாங்க முடியவில்லை. அவனை என்னவோ செய்தது அது!

ஆம்; ஆதன் ஆசிரியரின் மற்கூடத்திலே அழலாடிக்கும் நாகமல்லனுக்கும் இடையே ஏற்பட்ட மோதலுக்குப் பிறகு நாகமல்லன் அந்த மற்கூடத்தின் பக்கமே போவதில்லை. இந்நிலையில் ஆசிரியரிடத்திலுமே இப்போது சற்று ஆத்திரம் ஏற்பட்டது. இந்த அழலாடிக்கு ஆதனார் ஏன் இத்தனை பரிவு கொடுக்க வேண்டும் என்று நாகமல்லனுடைய உள்ளம் கொதித்தது. மற்கூடத்திலிருந்து வந்த சில மாணவர்கள் அன்றாட நடப்புக்களைச் சொல்லச் சொல்ல அழலாடியிடம் நாகமல்லனுக்கு மேலும் மேலும் ஆத்திரம் உண்டாயிற்று. இப்போது வேலவன் கோதையும் அழலாடியும் துளு நாட்டு அரண்மனையிலிருந்து தப்பிச் சென்று மற்கூடத்திலே வந்து தங்கியதும், பிறகு அங்கிருந்து கொங்கு வஞ்சிக்குச் சென்றதும் கேள்விப்பட்டு அவனுடைய உள்ளம் பேய்க் கூத்து ஆடியது.

'அழலாடி நாளுக்கு நாள் மேலே போகிறானே, தவிர, அணுவளவுகூடக் கீழே சரிகிறான் இல்லையே!'

இவ்வாறு எண்ணியதும் நாகமல்லன் ஒரே ஆத்திரத்தோடு துளு நாட்டு அரண்மனைக்கே புறப்பட்டு வந்து விட்டான். மிருநிலியிடம் என்ன செய்தியை எப்படிப் பேசுவது என்று ஒத்திகை பார்த்துக் கொள்ளாமல் நேரே வந்துவிட்டான். அதனால் என்ன நேர்ந்தது? மிருநிலியின் கேள்விகளுக்குச் சரியாக இப்போது மறுமொழி பேச முடியவில்லை.

''மல்லா, என்ன 'திருதிரு' என்று விழிக்கிறாய். வேலவனை எங்கே எந்த இடத்தில் நீ சந்தித்தாய். அவனோடு யார் இருந்தார்கள்? சொல்!''

மிருநிலி இவ்வாறு அதட்டிக் கொண்டே கேட்டதும், நாகமல்லன் உளறினான்.

''வேலவனும் அழலாடியும் வெள்ளைப் புரவிகளிலே சென்று கொண்டிருந்தார்கள்.''

''எங்கே பார்த்தாய்? மெய்யைச் சொல்லிவிடு. யாரங்கே? மெய்காவலர் யார் இருக்கிறார்கள்? பழுக்கக் காய்ச்சிய இரண்டு இரும்புக் கம்பிகளை இடுக்கியிலே பிடித்துக் கொண்டு வாருங்கள் இங்கே!''

மிஞிலி கூக்குரல் இட்டான். பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பிகள் வருகின்றனவா! எதற்கு? இரண்டு கண்களிலும் பாய்ச்சுவதற்காகவா?

நாகமல்லனுக்கு உடம்பு முழுதும் பதறியது.

''தானைத் தலைவரே!''

''சொல்! எங்கே பார்த்தாய் அவ்விருவரையும்? யாரங்கே, காவலர்களே!''

''கானகத்தில்—''

''எந்தக் கானகத்தில் பார்த்தாய்? சொல்! யாரங்கே கம்பிகளைக் கொண்டு வருகிறீர்களா?''

''இல்லை!''

''என்ன இல்லை? யாரங்கே, கம்பிகள் வருகின்றனவா இல்லையா?''

''இல்லை. பார்க்கவில்லை!''

''யாரைப் பார்க்கவில்லை?''

''வேலவனையோ அல்லது அழலாடியையோ யாரையும் பார்க்கவில்லை.''

''அப்படியானால் வேலவன் தப்பிச் சென்றது உனக்கு எப்படித் தெரியும்? சொல். அடா காவலர்களே, இங்கே வாருங்கள். முதலில் இவனைப் பிடித்து இந்தத் தூணிலே கட்டுங்கள். அதன் பிறகு பழுக்கக் காய்ச்சிய இரண்டு கம்பிகளைக் கொண்டு வந்து இவன் எல்லா உண்மைகளையும் சொல்லித் தீர்க்கிற வரை கண்களிலே செலுத்துங்கள்! கம்பிகளைச் செலுத்துங்கள் கண்களிலே!''

வேரோடு சாய்ந்து விழுந்த மரம் போல் கீழே விழுந்தான் நாகமல்லன்.

''என்னை மன்னிக்க வேண்டும். நான் ஒரு தவறும் செய்யாதவன். தங்களுக்குத் தொண்டு செய்யக் கருதி, தங்களுக்கு உதவக் கூடிய செய்திகளைச் சொல்லக் கருதித் தங்களுக்குப் பயன்படக்கூடிய ஆயங்களை—''

''நிறுத்து உன்னுடைய வஞ்சகப் பேச்சை. நீ யார் என்பதை மறைக்காமல், ஒளிக்காமல் அப்படியே சொல்! பத்து எண்ணுவதற்குள் சொல். யார் அங்கே கொண்டு வாருங்களடா கம்பிகளை! கட்டுங்களடா இவனைத் தூணிலே!''

அவ்வளவுதான். மெய்காவலர்கள் வந்து நாகமல்லனைத் தூணிலே கட்டுவதற்கோ அல்லது பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பிகளைக் கண்களிலே பாய்ச்சுவதற்கோ எத்தகைய அவசியமும் இல்லாதவாறு நாகமல்லன் பேசத் தொடங்கினான். அவனுக்கு இருபுறமும் காவலர்கள் கம்பிகளை ஏந்திய வண்ணம் நின்றார்கள். இவர்களோடு கூடவே தூண் ஒன்று எதிரே நின்று அதுவும் சேர்ந்து நாகமல்லனை அச்சுறுத்திக் கொண்டே இருந்தது.

நாகமல்லன் தூணுக்கும் சந்தர்ப்பம் தரவில்லை. இரும்புக் கம்பிகளுக்கும் வாய்ப்பு நல்கவில்லை. 'மளமள'வென்று எல்லா நடப்புக்களையும் அப்படி அப்படியே, ஊர், பெயர், வட்டம், மாவட்டம், மண்டலம் என்று மேலே மேலே சொல்லிக் கொண்டு போனான் அவன்!

ஆதன் ஆசிரியரின் மற்கூடம், அதிலே பயிலும் மாணவர்கள், அழலாடி, அவனுடைய தோழர்கள், கொங்கு மன்னர், அவருடைய கூட்டாளிகள், வேலவன் கோதை, அவனுடைய ஆசைச் சுழல்கள், அழலாடியின் காதல், தமிழகத்து அரசர்களின் போர் ஏற்பாடுகள், என்று பேசிக் கொண்டே போனான் நாகமல்லன். இரும்புக் கம்பிகளையும், எதிரே நின்ற தூணையும் காட்டியே மிஞிலி தனக்கு வேண்டிய செய்திகளை மனத்திலே குறிப்பு எடுத்துக் கொண்டான்.

''சரி, மல்லா! நீ இனிமேல் இந்த அரண்மனையிலிருந்து வெளியே எங்கும் போக முடியாது தெரிந்ததா? அவ்வப்போது உன்னை நான் கூப்பிட்டு அனுப்புவேன். கேள்விகள் கேட்பேன். கேட்ட கேள்விகளுக்கு மட்டும் மறுமொழி சொல்ல வேண்டும். தெரிந்ததா? யார் அங்கே, காவலர்களே, இந்த மல்லனை அழைத்துப் போய்ச் சிறைக் கூடத்து விடுதியிலே வைத்திருங்கள். துன்புறுத்தாதீர்கள். பாதுகாவலாக மட்டும் இருங்கள். மற்றப்படி நன்றாக உணவூட்டி இவனை நன்றாகப் பேணுங்கள்.''

இவ்வாறு சொல்லி அனுப்பிவிட்டு முக்கியமான வீரர் தலைவன் ஒருவனை அவசரமாக வரும்படி அழைத்தான் மிஞிலி.

''நேரே ஒரு பெரும் படையுடன் சென்று ஆதனாரின் மற்கூடத்தைத் தீயிட்டுக் கொளுத்துங்கள். நமது நகரத்தின் சாவடிகளிலும் மற்றக் காவல் நிலையங்களிலும் உள்ள ஆதனாரின் மாணவர்கள் யாரானாலும் உடனே விலங்கிட்டு இங்கே அழைத்து வாருங்கள். இன்னும் அறுபது நாழிகை நேரத்தில் என் கண் முன்னால் ஆதனார் அல்லது அவரது சாம்பல் வந்தாக வேண்டும்!'' — இவ்வாறு கட்டளை இட்டான் மிஞிலி.

(தொடரும்)

அட்டைப் படக் கதை



அவள் என் அத்தை மகள்

மயிலைமூர்த்தி

'வெண்கலக் கடையில் யானை புகுந்தது போல்' என்பார்களே அந்த நிலைதான்; பேச்சுக்குப் பேச்சு; வார்த்தைக்கு வார்த்தை அப்படி விடாமல் சிரிப்பதற்கு என்னதான் இருந்ததோ! பொழுது விடிந்ததிலிருந்து இரவு வரை இதேதான் ஒரு வாரமாக. இந்தக் காட்சியைக் கண்டு களிக்க அப்பா தான் ஊரில் இல்லை.

மௌனத்தின் எல்லையை எட்டியிருந்த இந்த வீட்டில் மாலதி வந்ததிலிருந்து ஒரு தனிக் களைதான் கட்டிவிட்டது. அவளுடன் அவள் சகோதரி ராஜியும் வந்திருக்கிறாள். அவள் கணவனுக்குக் காஷ்மீரில் வேலை. அவனுக்கும் விடுமுறை மாதிரிதான். அம்மாவுக்கு ஒரே மகிழ்ச்சி. பத்து வயது குறைந்தவளாக வளைய வந்து வேளாவேளைக்குப் புதுப் புது பட்சணங்கள் செய்து கொடுத்து அவர்களைத் திணற அடித்துக் கொண்டிருக்கிறாள். எல்லாம் சரிதான்: ஆனால், அந்த இன்பச் சூழ்நிலையில் பங்கு கொள்ள வேண்டிய நான் மட்டும் ஏன் இப்படிப் புழுங்கிச் சாகிறேன்?

மனத்தின் அடித்தளத்தில் எங்கோ கேள்வி ஒன்று உறுத்துகிறது. அவள் வந்து ஒரு வாரத்துக்கு மேலாகி விட்டது. அமர்க்களமும் கும்மாளமும் வீட்டுக் கூடத்து வரைதான். என் அறைப் பக்கம் எட்டிக் கூடப் பார்ப்பதில்லை அவை. மாலதியும் கூடத்தான்; தப்பித் தவறிக்கூட எதிரே வருவதில்லை அவள். ஏன் அப்படி? அம்மா ஏதாவது சொல்லி வைத்திருக்கிறாளா, மரியாதையா? அல்லது! — இப்படித்தான் வேண்டாததையெல்லாம் எண்ணிக் குழம்பிக் கொண்டிருக்கிறேன். இந்த நிலையில்தான்

இரண்டு நாட்களுக்கு முன் நடந்த அந்தச் சம்பவம் வேறு நிழலாடுகிறது.

அன்று கல்லூரியிலிருந்து நான் வருவதற்குச் சற்றுத் தாமதமாகி விட்டது. வீட்டை அடைந்தவன் திடுக்கிட்டேன்; வீடு பூட்டிக் கிடந்தது. என்ன செய்வது என்று தெரியாமல் நான் தவித்துக் கொண்டிருந்தபோது எதிர் வீட்டிலிருந்து இந்த மாலதிதான் ஓடி வந்தாள். எனக்கு ஒரே ஆச்சரியம். இவள் மட்டும் தனியாக என்ன செய்கிறாள்? அம்மாவும் ராஜியும் எங்கே? — யாரிடம் கேட்பது? இந்தப் பேசாமடந்தையிடமா இவ்வளவுக்கும் பதிலை எதிர்பார்ப்பது? நான் வியந்து கொண்டிருந்தபோதே, மடமடவென்று கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றவள், கையில் ஒரு செம்பு ஜலத்தோடு திரும்பி 'ணங்'கென்று திண்ணை மீது வைத்தாள். கை, கால்களைச் சுத்தம் செய்து கொண்டு உள்ளே சென்றேன். பசி வயிற்றைக் கிள்ளியது. உடைகளை மாற்றிக் கொண்டு சமையலறைப் பக்கம் சென்று எட்டிப் பார்த்தேன். என்ன அதிசயம்! என்னுடைய 'பிளேட்' வைக்கப்பட்டு அதில் எல்லாம் பரிமாறி யிருந்தன. சாப்பிட அமர்ந்தேன். பாதிச் சாப்பாட்டில் விக்கல் வந்து விட்டது. அருகில் கூஜா நிறையத் தண்ணீர். அதையும் எதிர்பார்த்துத்தான் எடுத்து வைத்திருந்தாள் அவள். அதெல்லாம் சரி, அம்மா எங்கே? எப்போது வருவாங்க? — மனத்தில் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அவளையே கேட்டு விடத் தீர்மானித்தேன். ஆனால் அவள் எங்கே இருந்தாள்? கடமைக்காகச் சாப்பிட்டுவிட்டு எழுந்தேன். சமையலறைக்கு வெளியிலே மறுபடியும் செம்பிலே தண்ணீர் வைக்கப்பட்டிருந்தது. ஏதோ மாயா ஜாலத்தில் நடப்பது போலத்தான் எல்லாம். ஒருவாறு சாப்பாட்டை முடித்துக் கொண்டு அறைக்குத் திரும்பினேன்.

எவ்வளவு நேரம் படிப்பில் ஆழ்ந்திருந்தேனோ, தெரியாது; வாசலில் அம்மாவின் குரல் கேட்டுப் புத்தகத்தை மூடினேன்.

''என்னடி, ரவி எப்போ வந்தான்? சாதம் கீதம் ஏதாவது போட்டாயா?''

''ஓ, அப்போதே சாப்பிட்டாகிவிட்டது.''

அடுத்த அறையிலிருந்து இந்த வார்த்தைகளைக் கேட்டபோது எவ்வளவோ குளிர்ச்சியாகத்தான் இருந்தது. மாலதியின் குரலல்லவா அது! அந்த ஒரு கணம் நான் அம்மாவாக இருக்கக் கூடாதா என்றுகூட நினைத்தேன்.

''என்னடா ரவி, கவனிச்சுச் சாதம் போட்டாளா?'' அம்மா உள்ளேயே வந்துவிட்டாள்.

''எங்கேம்மா போயிருந்தாய்?''

''குழந்தைகளுக்குப் பொழுதே போகவில்லை. ஏதாவது ஒரு படத்துக்குப் போகலாம்னு போயிட்டு வந்தேன் அப்பா. எல்லோரும் போவதாகத்தான் ஏற்பாடு. கடைசியில் புறப்படும் சமயத்தில் இவள் தலை வலிக்கிறது, நான் வரவில்லை என்று சொல்லி விட்டாள். கடைசியில் நானும் ராஜியும்தான் போக வேண்டியதாயிற்று.''

சிரிப்புத்தான் வந்தது எனக்கு. மாலதிக்குத் தலைவலியா? நான் வரும்போது எதிர் வீட்டிலிருந்து துள்ளிக் கொண்டுதானே ஓடி வந்தாள் அவள். சென்ற சில மணி நேரங்களாகத் தலைவலியில் அவள் முனகுவதுகூட என் காதில் விழவில்லையே! எப்படியோ போகட்டும்.

என்றோ நடந்துபோன சம்பவம் இது. அதற்குப் பிறகு எண்ணி ஆறு மாதங்கள் ஓடி விட்டன. மாலதியின் நினைப்பு மட்டும் தங்கிவிட்டது.

இப்போது நான் திருச்சிக்கு வந்திருந்தேன். அங்கே மூன்று மாதங்கள் தொழில் சம்பந்தமான ஒரு பயிற்சி. தன் வீடு இருக்கும்போது வேறு எங்கும் தங்க வேண்டிய அவசியம் இல்லை என்று அத்திம்பேர் எழுதியிருந்தார். எனக்கும் மகிழ்ச்சிதான், மாலதியை அவள் வீட்டிலேயே சந்திக்கப் போகிறோம் என்று. அதே சமயம் ஒரு பயம்; அந்த 'உம்மணாமூஞ்சி' சொந்த வீட்டில் எப்படி நடந்து கொள்ளுவாளோ என்று.

டாக்ஸியை விட்டு இறங்கும்போதே மாலதி தென்பட்டாள். சுமார் மூன்று அல்லது நான்கு வயதுக் குழந்தையொன்றின் தோளைப் பற்றியவாறு வீட்டு வாசலிலேயே நின்று கொண்டிருந்தாள் அவள். மிகவும் ஜாக்கிரதையாக, யாரும் பாரா வண்ணம் அவள் முகத்தை நோக்கினேன். ஏமாற்றம்தான்! அதில் எதையுமே கண்டு பிடிக்க முடியவில்லை என்றால். பேசத்தான் கூடாது; முடியாது; முகத்தைக் கூடவா உணர்ச்சியற்ற நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும்! பெண்களுக்கே உரித்தான குண நலன்களில் ஒன்றோ இது! மௌனமாக உள்ளே நுழைந்தேன்.

''வாடா ரவி, ஊரில் எல்லோரும் சௌக்யமா?'' — அத்தைதான் வரவேற்றாள்.

வந்து சில வாரங்கள் ஓடிவிட்டன.

வாசல் பக்கத்து அறையை எனக்குப் புழக்கத்துக்காக விட்டிருந்தார்கள். குளிப்பது, சாப்பிடுவது தவிர, மற்ற நேரங்களில் எல்லாம் அந்த அறையில்தான் அடைக்கலம். மாலதி எங்கே இருந்தாள்? பெரிய வீடு. எவ்வளவு பேர்கள் இருந்தாலும் ஒருவருமே இல்லாதது போல் இருந்தது. அத்திம்பேர் ஊரிலே சற்றுப் பிரபலமான ஒரு வக்கீல். தொழிலுக்கு ஏற்றபடி பேச்சு, செய்கை எல்லாவற்றிலும் ஒரு நிதானம், 'பிரின்ஸிபிள்!' அனாவசியமாக எதிலும் குறுக்கிட மாட்டார்.

''ஹலோ, ரவி, எப்படியிருக்கே? உன் டிரெயினிங் எல்லாம் எந்தமட்டில் இருக்கு?'' என்பவர் தொடர்ந்து, ''ஜானகி, வெந்நீர் தயாராகி விட்டதா?'' என்று கேட்டுக் கொண்டே என் பதிலைக்கூட எதிர்பாராமல் போய் விடுவார்; அவ்வளவு 'பிரின்ஸிபிள்!' அத்தைதான் உயிராக இருந்தாள். அப்பாவை ஒட்டிய உறவாயிற்றே!

இந்த ஊருக்கு வந்து இன்றுடன் இரண்டு மாதங்களாகி விட்டன. இன்றுதான் ராஜி வந்திருக்கிறாள், முன்பு அவளைப் பார்த்ததற்கும், இப்போது இருப்பதற்கும் எவ்வளவோ வித்தியாசம். தாய்மைப் பேற்றைச் சுமந்து கொண்டிருந்தாள் அவள்.


இப்படித்தான் ஒரு நாள் டிரஸ் செய்து கொண்டு வெளியே கிளம்பிக் கொண்டிருந்தேன். அறைக்கு வெளியே யாரோ

எப்பொழுதும் புத்துணர்ச்சியுடன் இருங்கள் நாள்முழுவதும் சுறுசுறுப்பாக இயங்குவதற்கான புத்துணர்ச்சிக்கு

புதிய கால்கேட் லோர்னே டால்க்

புதிய கால்கேட் லோர்னே டால்க்கின் புதுப்பிக்கும் நறுமணம் உங்களைக் குளுமையுடனும், புத்துணர்ச்சியுடனும் வைத்திருக்கிறது....நாள் முழுவதும் அந்தத் துடியான சுறுசுறுப்பைத் தருகிறது. இளமைத் துடிப்பும், சுறுசுறுப்பும், விளையாட்டுகளில் பிரியமுள்ளவர்கள் குறிப்பாக கால்கேட் லோர்னே டால்க் வியர்வையைத் துரிதமாக கிரகித்துக்கொண்டு தாங்கள், நாள் முழுவதும் உற்சாகமாக இருக்க உதவுவதை நன்கு அறிவார்கள்!

இது சிக்கனமானதும்கூட! உங்கள் குடும்பத்தினருக்கு கால்கேட் லோர்னே டால்க்கை வாங்குங்கள்.—அது சுறுசுறுப்பான நாகரீக மக்களுக்கேற்ற புதியதொரு பரவசமூட்டும் நறுமணம் கொண்டது!







CLT.G.1.TAM

'ரவி, ரவி' என்று அழைப்பது போல் இருந்தது. திடுக்கிட்டு ஜன்னல் வழியே சத்தம் வந்த திசையில் நோக்கினேன்.

மாலதிதான் காம்பவுண்ட் முள்வேலி ஓரமாக நின்று கொண்டு அடுத்த வீட்டில் யாரையோ கூப்பிட்டுக் கொண்டிருந்தாள். என் பெயரை அவள் குரலில் கேட்டபோது உடல் முழுதும் புல்லரித்தது. என் பெயரைத் தாங்கிய அந்த உருவைப் பார்க்கும் ஆவலில் அடுத்த வீட்டை உற்றுக் கவனித்தேன். குழந்தையொன்று தட்டுத் தடுமாறி வந்து கொண்டிருந்தது, அவளை நோக்கி. அன்று நான் ஊரிலிருந்து வரும்போது, அவளுடன் நின்று கொண்டிருந்த அதே குழந்தைதான். அந்தக் குழந்தை மீது சற்றுப் பொறுமை கூட ஏற்பட்டது எனக்கு. நான் அந்தக் குழந்தையாக இருக்கக் கூடாதா என்றுகூட ஏங்கியது மனம். அவள் பார்வையில் படாமல், அறையிலிருந்தவாறே மௌனமாகப் பேச்சைக் கவனித்தேன்.

''ரவி, சீக்கிரமா, அதோ அந்த ரோஜாப் பூவைப் பறிச்சுண்டு வாயேன்.''

தட்டுத் தடுமாறிக் கொண்டு அந்தக் குழந்தை ரோஜாச் செடியை அணுகுவதைக் கண்டேன். மனத்தில் இனம் புரியாத ஒரு இன்பக் கிளர்ச்சி. கூடவே ஒரு பயம்; மாலதி பார்த்து விட்டால்? எல்லாமே அல்லவா கெட்டுவிடும்! நாற்காலியில் அப்படியே அமர்ந்து விட்டேன். மாலதியின் குரல் மட்டும் தொடர்ந்து கேட்டது.

''இந்தா, இதைக் கொண்டுபோய் அதோ அந்த உள்ளே ஒரு மாமா இருக்கா பாரு. அவர் கிட்டே கொடுத்துட்டு வா, பார்க்கலாம். ....ம்... போ'' — மெதுவாக எட்டிப் பார்க்கிறேன். தொடர்ந்து அந்தக் குழந்தையின் மலர்க் கன்னங்களில் மாறி மாறி முத்தமிடுகிறாள் அவள். என்னை அறியாமலே கால்கள் என்னை இழுத்து அமர வைத்து விட்டன. மனம் மட்டும் அந்த இன்பக் காட்சியைப் படம் பிடித்து உள்ளே பத்திரப்படுத்தி விட்டது. அடுத்த சில வினாடிகள் பல யுகங்களாகக் கழிந்தன. அறை வாசலில் குழந்தையின் உருவம் நிழலாடியது. ஓடிச் சென்று அதை எடுத்துக் கொண்டவன் முகத்தோடு முகம் வைத்து அப்படியே கட்டிக் கொண்டேன். மிரள மிரள விழித்தவாறே மலரை நீட்டியது அந்தக் குழந்தை. அதை வாங்கிக் கோட்டில் செருகிக் கொண்டவாறே, 'உன் பேர் என்ன?'' என்றேன்.

''ரவி!''

''இதை யார் உங்கிட்டே கொடுத்தா?''

''உம், உம்'' — பதில் எதுவும் சொல்லாத குழந்தை திரும்பத் திரும்ப உள்ளே எட்டிப் பார்த்தது.

''சரி, உள்ளே இன்னொரு பாப்பா இருக்கு. நீ போய்ச் சமத்தா அதுகூட விளையாடிக் கொண்டிரு. அதுக்கும் கொஞ்சம் பேசக் கத்துக் கொடு.''

'களுக்'கென்ற சிரிப்பொலி வாசல் வராந்தாவில் கேட்டது. குழந்தை வாயிலாக யாருக்கோ செய்த உபதேசம் உரிய இடத்தை எட்டிவிட்டது.

வாசல் கேட்டின் கொக்கியைப் போடும்போது ஞாபகமாக என் கண்கள் வராந்தாவை நோக்கத் தவறவில்லை. அவளும் இடுப்பில் குழந்தையுடன் அங்கே காட்சி தரத் தவறவில்லை. ரோஜா மலரைத் தாங்கிய இதயம் நிறைந்த இன்பச் சுமையோடு நடந்து கொண்டிருந்தேன்.



''ஐயன்மீர்! பாதுகாவலரே! இவ்விடத்திலிருந்த தமிழக அரசு போக்குவரத்து ஊர்தி நிற்க வேண்டியதை அறிவிக்கும் பலகையுடன் கூடிய கம்பத்தை எந்தத் திருவாளர் திருடரோ திருடிச் சென்று விட்டார் என அறிகிறோம். ஆகவே மோப்ப சக்தி படைத்த நாயினை கண்டு அழைத்து வருவீரா?''

எஞ்சியிருந்த நாட்கள் ஓடிச் சென்று ஊர் திரும்பும் நாளை அருகில் அழைத்து வந்து கொண்டிருந்தன.

அன்று அத்தையும் அத்திம்பேரும் எங்கோ வெளியே போயிருந்தார்கள். அறையில் ஆராய்ச்சி சம்பந்தமான புத்தகம் ஒன்றில் ஈடுபட்டிருந்தேன். ஹாலில் பேச்சுக் குரல் சற்றுப் பலமாகக் கேட்டுக் கொண்டிருந்தது.

''மாலதி, ஏய் மாலதி, இங்கே வாயேன்; இந்தக் கடிதத்தைப் பாரேன்.'' ராஜியின் குரல் இது.

நான் செய்துவிட்ட ஒரு சிறு தவறு இப்போதுதான் கவனத்துக்கு வந்தது.

உடனே எழுந்து சென்று, ''ராஜி, உங்கிட்டே ஒரு விஷயம் பேசணும்'' என்றேன்.

''என்கிட்டேயா, மாலதிகிட்டேயா?''

''விளையாடாதே ராஜி. அன்று லாண்டிரியில் துணி போடும்போது என் பாண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த காகிதம் ஒன்றை எடுத்துக் கொள்ள மறந்துவிட்டேன். நினைவு வந்ததும் லாண்டிரியில் கேட்டேன். அவன் எதுவும் இல்லை என்று சொல்லிவிட்டான். அதைப்பற்றி ஏதாவது தெரியுமா?''

''ம், ஹூம், எனக்குத் தெரியாது. நான் ஏன் உன் பாண்டைத் தொடப்போகிறேன்?''

''இல்லை ராஜி, அது உன்னிடம்தான் இருக்கு. அந்தக் காகிதத்தை எதற்காகத் தேடுகிறேன் என்றால், என் நண்பன் ஒருவன் கதையொன்று எழுதியிருந்தான். அதை எப்படி முடிக்கிறதுன்னு கேட்டான். அந்தக் காகிதம்தான் அது!''

''அதென்னவோ, எனக்குத் தெரியாது; வேண்டுமானால் மாலதியைக் கேட்கிறேன்.''



''ஏன்டா இன்னும் பாப்பாவை அழ பண்றே?''

''தாத்தாவின் பல்செட்டைப் பல்லில்லாத பாப்பாவின் வாயில் வச்சேன் இனிமேல்லாம் வாயைத் திறக்க மாட்டேங்கறானே!''

என் முகத்தையே பார்த்த ராஜி, சிரிப்பை அடக்கமுடியாமல் திணறினாள்.

''கொடு ராஜி, ப்ளீஸ்!''

''ம், ஹூம், இப்போது மாட்டேன். வேளை வரும். அப்போது அதையும் சேர்த்துக் கொடுப்போம்'' — ராஜி போய்விட்டாள்.

ஊர் திரும்பி எவ்வளவோ நாட்கள் ஆகி விட்டன. நான்மட்டும் தனிமை கிடைத்த போதெல்லாம் அன்று ராஜி சொன்ன அந்த வேளையை மானசீகமாகக் கற்பனை செய்து அந்த இன்ப நினைவுகளிலேயே நாட்களை விரட்டினேன். என் மன நிலையை அவர்களுக்கு ஒருவாறு உணர்த்திவிட்டேன்.

இடையே ஒரு வருஷம் ஓடியது. வாழ்க்கைப் பாதையில் இதற்குள்தான் எவ்வளவு மேடு பள்ளங்கள்! நாங்கள் பள்ளத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தோம். அதுவும் அதள பாதாளத்தை நோக்கி. ஆம், ஒரு வார விஷ ஜுரத்தில் படுத்த அப்பா திடீரென்று யாரும் எதிர்பாராத வண்ணம் எஞ்சியுள்ளவர்களின் எதிர்காலத்தைப் பிரச்னையாக்கி விட்டுக் கண்களை மூடிவிட்டார். நான் படித்ததற்கும் புகுந்த வேலைக்கும் சம்பந்தமேயில்லை. அத்தையும் அத்திம்பேரும் அன்று வந்து ஆறுதல் சொல்லி விட்டுப் போனவர்கள்தான்.

இந்த நிலையில்தான் மாலதியின் திருமண அழைப்பு வந்தது. கடிதத்தைக் கண்ட அம்மாவின் முகத்தில் எந்தவித உணர்ச்சியையும் காண முடியவில்லை. அப்பாவா இருந்தார், உறவு முறையைத் தட்டிக் கேட்க. அவரோடு எல்லாமே போய்விட்டதே! நான்தான் சிந்திக்கும் சக்தியைக் கூட இழந்து விட்டேனே. கடைசியில் மனப் போராட்டத்துக்கெல்லாம் ஒரு முடிவுகட்டி விட்டு, அம்மாவின் கட்டளைப்படி கடமைக்காக, ஊருக்காக, மாலதியின் திருமணத்துக்குப் புறப்பட்டுச் சென்றேன்.

'பிரின்ஸிபிள்' அத்திம்பேர் வாசலிலேயே நின்று கொண்டிருந்தார். ''வாப்பா, ரவி! இப்போதுதான் வருகிறாயா?'' என்றவர், ''உள்ளே போ. அத்தை இருக்கிறாள். ராஜி, ராஜி, ரவியை உள்ளே அழைத்துப் போ'' என்று அனுப்பிவிட்டார். மௌனமாக அவளைத் தொடர்ந்தேன். ஊஞ்சல் நடந்து கொண்டிருந்தது. மாப்பிள்ளையைப் பார்த்ததும் எனக்கு ஒரே வியப்பு. பத்திரிகையில் பெயரைக் கண்டதும் நான் சந்தேகப்பட்டது சரியாகி விட்டது. என் ஆப்த நண்பன்தான் இவன். பள்ளிப் பருவத்திலிருந்து பல வருஷங்கள் இருவரும் ஒன்றாகப் படித்தவர்கள். ஆனால் அவன் ஓர் ஐ. ஏ. எஸ். இப்போது. என்னைக் கண்டதும் எழுந்தே விட்டான். ''ஏய், நீ ரவி இல்லே! இங்கே எப்படி.... யாருக்கு உறவு?'' — வாஞ்சையோடு அவன் கைகளைப் பிடித்துக்கொண்டபோது சிலிர்த்தது எனக்கு. என்னவென்று உறவைச் சொல்வது? கண்களில் ஓரம் கட்டிய நீர் முத்துக்களை ஜாடையாகத் துடைத்துக்கொண்டே மாலதியைப் பார்த்தேன். அவள் குனிந்த தலை நிமிரவேயில்லை. பெண் ஜென்மம், பேசாமடந்தை, வேறு என்னதான் செய்ய முடியும்?

ராஜி, அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்தவள் ஏதோ காரியமாக என் பக்கம் வந்தாள்.

''ராஜி, ஒரு நிமிஷம்.''

''என்ன ரவி!'' என்று கேட்டுக் கொண்டே அருகில் வந்தவள், 'ஓ'வென்று அழுதே விட்டாள். ''சொன்ன வார்த்தையைக் காப்பாற்ற முடியவில்லை ரவி. அம்மா கடைசிவரை ஒரே காலில் நின்றுவிட்டாள்; பிள்ளைக்குத் தாயார், தகப்பனார் இருக்க வேண்டும்; பிள்ளை நன்றாகப் படித்திருக்க வேண்டும் என்று. கடைசியில் ஜெயித்தும் விட்டாள். கடமைக்காகவாவது நீ இந்தக் கல்யாணத்துக்கு வருவாய் என்று தெரியும். உன்னை எப்படிச் சந்திப்பது என்று தவித்துக் கொண்டு அவர்கூட மாடியை விட்டுக் கீழே இறங்காமலேயே இருக்கிறார். நீ எதையும் மனத்தில் வைத்துக் கொள்ளாதே ரவி!'' கண்களைத் துடைத்துக் கொண்டாள் அவள்.

''அதெல்லாம் போகட்டும். அந்தக் காகிதத்தை — முற்றுப் பெறாத கதையை— இப்போது என்னிடம் கொடுத்துவிடலாம் அல்லவா?''

''ரவி, என்னை மன்னித்துவிடு. அம்மா மீது வந்த கோபத்தில் அதை நான் கிழித்தெறிந்து விட்டேன்'' என்றாள் ராஜி.

இதயத்தை ஆயிரம் சுக்கலாக யாரோ கிழித்தெறிவது போல ஒரு பிரமை. தள்ளாடியவாறே நடந்து கொண்டிருந்தேன்.

''கெட்டி மேளம்; கெட்டி மேளம்''— மேடையிலிருந்து குரல் கேட்டது. கூட்டத்தில் ஒருவனாக மேடையை நெருங்கினேன். அதோ மாலதி, என் அத்தை மகள், இந்த வினாடி முதல் வேறொருவருடைய உடைமையாகிவிட்டாள். இனிமேல் எனக்கு அங்கே என்ன வேலை? எங்குதான் என்ன வேலை?

மூன்று மணி வண்டிக்கே புறப்பட்டு விட்டேன்.

காய்ந்த மலர்களைச் செடிகள்தான் தாங்கிக்கொண்டிருப்பதில்லை. ஆனால் இதயமோ! என் மாலதி என்றோ பரிசாக அளித்த, காய்ந்துபோன, பையில் நான் பத்திரப்படுத்தியிருந்த அந்த ரோஜா மலரை ஒரு முறை தொட்டுப் பார்த்துக் கொண்டேன். அது மாலதி எனக்கு அளித்த உணர்வுக்கு அப்பாற்பட்ட உரிமை அல்லவா!

ஸ்ரீ ரமணேசுவர மகாலிங்க கும்பாபிஷேகம்

திருவண்ணாமலையில் ஞான நிதியாகவும் அருட்கடலாகவும் வாழ்ந்து வந்த பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷிகள் விதேக முக்தி எய்தியபின் அவர்களது திவ்யத் திருமேனியின் மீது எழுப்பப்பெற்ற சமாதி ஸ்தானம் தற்போது ஓர் ஆலயமாக முற்றுப் பெற்று, இவ்வாலயத்தின் மகா கும்பாபிஷேகம் இவ்வருடம் ஆனி நான்காம் தேதி (18-6-1967) நிகழ விருக்கிறது. ஆலயத்தின்கண் பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷிகளின் மறு உருவம் என்னத்தக்க ரமணேசுவர மகாலிங்கம் அன்று பிரதிஷ்டை செய்யப்படுகிறது. சாஸ்திரோக்தமாகச் சிறப்புற நிகழவிருக்கும் இப் புனித விழாவில் ஆஸ்திகர் அனைவரும், அருணை முனிவரின் அடியார் அனைவரும் பங்கு பற்றிப் புண்ணியம் பெறவேணும்.

ஒன்றரை லட்ச ரூபாய் செலவில் ஆலயம் நிர்மாணமாகின்றது. கும்பாபிஷேக விழாவுக்கு ரூ. 50,000 தேவைப்படும். பக்தர்கள் யாவரும் திருப்பணிக்குத் தாராளமாக உதவிப் பெருமை கொள்ள வேணும். நிதி அனுப்ப வேண்டிய முகவரி : *President, Board of Trustees Sri Ramanosramam, Tiruvannamalai.*



இலவசம் கார் சவாரி

லண்டனின் துப்பறியும் போலீஸ் தலைமை அலுவலகமான ''ஸ்காட்லாந்து யார்டின்'' டெலிபோன் எண் 999. அவசரமாக ஏதேனும் குற்றங்கள் பற்றி போன் செய்ய வேண்டுமானால் — அருகில் பொது 'டெலிபோன் பூத்' எதுவும் இல்லாவிட்டால் — ஏதாவது ஒரு டாக்ஸியை நிறுத்தினால் போதும்; அதிலுள்ள டெலிபோனிலிருந்து நீங்கள் தகவல் கொடுக்கலாம். அப்படி அந்த டாக்ஸியில் போன் வசதியில்லாவிட்டால், டாக்ஸிக்காரர் உங்களை இலவசமாக அருகிலுள்ள போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓட்டிச் செல்வார். திருடர்களை மடக்குவதற்காக இப்படி ஒரு திட்டத்தை அமுல் நடத்துகிறார்கள் லண்டன் டாக்ஸிக்காரர்கள்.

ஆதாரம்: 'டெய்லி மிர்ரர்'

சொன்னது யார்?

''தொழில்களைச் சர்க்கார் உடைமையாக்குவது அதருமம். நாகரிகமான ஒரு பொருளாதாரக் கொள்கை உண்டென்றால், நடைமுறை சாத்தியமான ஒரு பொருளாதாரக் கொள்கை உண்டென்றால் அது தனியார்த் தொழிலுக்கு எவ்விதத்திலும் கட்டுப்பாடு விதிக்காதிருப்பதுதான்.

''பனிப் போர் நடக்கின்றபோது நடுநிலைமை வகிப்பதாகச் சொல்வது கொடூரமான வார்த்தை ஜாலம்தான். இத்தருணத்தில் கௌரவமான நடவடிக்கை என்னவெனில், தேவர்களின் பக்கமோ, அல்லது அசுரர்களின் பக்கமோ வெளிப்படையாகச் சார்ந்து நிற்பதுதான்.''

இப்படியெல்லாம் சொல்லியிருப்பது ராஜாஜி அல்ல. பிரசித்திபெற்ற ஒரு சினிமாத் தொடருக்கு மூலகர்த்தாவாகிய ஒரு கதாசிரியரின் கருத்துக்கள் இவை. இன்னமும் யாரென்று ஊகிக்க முடியாவிடில் அடுத்த பக்கம் பாருங்கள்.

மனிதன் ஒரு மின்சார நிலையம்

'மானுட தேகம் என்பது தண்ணீர், உப்புக் கரைசல்கள், துத்தநாகம், இரும்பு முதலிய உலோகங்களாலானது. இதை உயிருள்ள ஒரு வறண்ட மின்சார செல்லாகச் சொல்லலாம். எனவேதான் மனித உடலிலிருந்து மின்சார சக்தியை உற்பத்தி செய்ய முடிகிறது' என்கிறார் டாக்டர் ஸால்வடோர் ஸான்டாரக்கியீரோ. இத்தாலியில் பிறந்து மெக்ஸிகோவில் வாழ்ந்து வரும் இவர், 'மனிதனின் நோயுற்ற உயிரணுக்களுக்கு அவனது உடலிலிருந்தே மின்சாரம் தயார் செய்து ஊட்டினால் நோயுற்ற அணுக்களும் மறுபடி ஆரோக்கியம் பெறும். இதனால் பாரிச வாயு, புற்று நோய் போன்ற கொடிய வியாதிகளைக் கூடக் குணப் படுத்தலாம்' என்கிறார். சிகிச்சைக்காகத் தேவைப்படும் காலம் எவ்வளவு தெரியுமா? மாதக் கணக்கோ, வாரக் கணக்கோ அல்ல. ஏன் மணிக்கணக்குக்கூட அல்ல, உயர்ந்த பட்சம் முப்பதே நிமிஷத்தில் மனிதனின் நோயுற்ற உயிரணுவை அவன் உடம்பில் உள்ள நல்ல உயிரணுக்களிலிருந்து உற்பத்தி செய்த மின்சாரத்தால் குணப்படுத்தி விடலாம் என்கிறார் டாக்டர் ரக்கியீரோ.

ஒரு மனித உடம்பில் மின்சாரக் கம்பிகளைப் பொருத்தித் தயாரிக்கும் மின்சாரத்தினால் பதினெட்டடி தள்ளியுள்ள இன்னொரு மனிதனின் உயிரையே போக்கி விடலாமாம். இந்தக் கெட்ட காரியத்தை நீக்க வேண்டாமெனில், ஒரு சிறிய தொழிற்சாலைக்குத் தேவைப்படும் மின் சக்தியையும், ஒளியையும் தயாரிக்கலாம் என்று சொல்லலாம். ஒரு சாதாரண ஆட்டிடமிருந்து உற்பத்தி செய்த மின்சாரத்தால் 40 வாட் பல்புத் தொடர் ஒன்றை ஏற்றி ஒளி தர முடிந்ததாம்!

மின்சாரம் கொடுத்த பின்னரும் அந்த ஆடு சகஜமாகவே உண்டு உறங்கியது குறிப்பிடத்தக்கது.

மனித உயிரணுக்கள் முற்றிலும் மடிந்து விடவில்லை; அவற்றுக்கு மின் சக்தியால் - எங்கிருந்தோ தயாரிக்காமல் அதே மனிதனின் உடம்பிலிருந்து தயாரித்த மின் சக்தியால் - புது சக்தி ஊட்ட முடியும் என்பது ரக்கியீரோவின் நம்பிக்கை.

மௌதிகமாகக் குணம் காண்பது மட்டுமின்றிப் பிறரது எண்ணங்களைப் படிப்பதற்குக்கூடத் தன்னிலேயே மின்சாரம் உற்பத்தி செய்து கொள்பவனால் இயலுமாம்!



இன்னமும் பரிசோதனைக் கட்டத்திலேயே உள்ள தம் ஆராய்ச்சி வெற்றிகரமாகவே முடியும் என்பது இந்த அடக்கமான, அதிகம் பேசாத டாக்டரின் நம்பிக்கையாகும். இப்போது கதைகளில் மட்டும் படிக்கும் காதல் 'ஷாக்' மட்டுமின்றி அப்போது மனிதன் பலவிதத்திலும் 'ஷாக்' தரக்கூடும்.

ஆதாரம்: 'ஸன்டே ஸ்டான்டர்ட்'

ஆட்சியின் அடித்தளம்

ஆதாரம்:
'மெயில்'

தகவல்:
'பாரூக்'

நில மட்டத்துக்கு ஐந்நூறு அடிக்குக் கீழே பூமிக்குள் குடையப்பட்டிருந்த குகைக்குள் ஐந்து நாட்கள் இருந்துவிட்டு வெளியே வந்த அச்சிறு கூட்டத்தைச் சந்திக்க ஒரு நிருபர் படையே காத்திருந்தது. பூமியின் ஆழத்தி லிருந்து வெளியே வந்தவர்களுக்கு நிருபர்கள் பட்டாளத்தைப் பார்த்ததும் பேராச்சரியம்? ஏனென்றால் தாங்கள் மறைந்திருந்த இடம் பரம ரகசியமானது என்று அவர்கள் எண்ணி யிருந்தார்கள். நிலத்தின் அடியிலிருந்து வெளியேறியவர்கள் சுரங்கத் தொழிலாளர் களோ அல்லது வேறு துறை வேலையாட்களோ அல்லர். மேற்கு ஜெர்மனியின் நான்கு அமைச் சர்களும், முப்பத்தொரு துணை அமைச்சர்க ளும்தாம் இவ்வாறு ஐந்து நாட்கள் 'அண்டர் கிரவுண்ட்' வாழ்க்கையிலிருந்து மேல்மட்டத் துக்கு வந்தவர்கள்.

ஏன் இந்த ரகசியப் புதைபொருள் ஆராய்ச்சி? திடீரென்று அணு ஆயுதப் போரினால் ஆபத்துக்கள் உண்டாகி, வெளி உலகத்துடன் தொடர்புகள் துண்டிக்கப்பட்ட நிலையிலும், ஒரு கணிசமான காலத்துக்குத் தகுந்த அரசியல் தலைமையுடன் ஆட்சியை நடத்திச் செல்வதற்கு, இப்படி ஓர் ஏற்பாடு இருந்தால் என்ன என்பதைப் பரீட்சைசெய்து பார்க்கவே மேற்சொன்ன சோதனையை நடத் தியது மேற்கு ஜெர்மனி அரசு!



'சொன்னது யார்?' விடை: ஜேம்ஸ் பாண்டைப் படைத்த இயான் ஃப்ளெமிங் தான் இப்படியெல்லாம் கூறுபவர்.

காற்றினிலே வரும் மின்சாரம்!

காற்றின் உதவி கொண்டே மின் சாரம் எடுக்கத் திட்டமிட்டுள்ளனர் ரஷ்ய விஞ்ஞானிகள்!

'டர்பைன்'களைப் பலூன்களில் கட்டி, அவற்றைப் பத்தாயிரம் முதல் 12 ஆயிரம் மீட்டர் வரை உயரே பறக்க விட்டு, அங்கு நிரந்தரமாக வீசும் காற் றின் வேகத்தால் இந்த டர்பைன்களை இயங்க வைத்து மின்சாரம் தயாரிப் பதே திட்டம்.

ஆதாரம்: 'அமிர்த பஜார்' பத்ரிகா.
தகவல்: எஸ். சம்பத்குமார்

பாட்டுத் திறத்தாலே



எகிப்து நாட்டின் பிரபல பாடகியான உம்மு குல்ஸூம் முப்பத்து இரண்டு ஆண்டு களாகப் பாடி வருகிறார். அறுபத்து நான்கு வயதுள்ள இந்த இசையரசிக்கு அரபு நாடு களில் ஐக்கிய அரபுக் குடியரசுத் தலைவர் நாஸரைவிடப் புகழுண்டு.

''அமல் ஹயாத்தி'' (என் வாழ்வின் நம் பிக்கை) என்னும் ஒரு பாட்டை எழுபத்து ஐந்து நிமிஷ நேரம் பாடுவாராம்; அவர் பாடும் காதல் இசைகளைக் கேட்கும் மக்கள், ''யா கல்பீ'' (ஆ என் நெஞ்சமே!), யாஹபீபி'' (ஆ என் காதலியே!) என்று ஏக்கத்தோடு கத்துவார்களாம்!

உம்மு குல்ஸூம் பத்துப் பன்னிரண்டு வயதாக இருக்கும் போதே தினசரி பத்து மணி நேரம் பாடுவார். அதற்கு அவர் அன்று பெற்ற ஊதியம் ஐம்பது காசுகள்; ஆனால் இன்று அவருடைய வருட வருமானம் சராசரி பத்து லட்ச ரூபாய்!

சென்ற ஆண்டு பால்பெக் என்னும் நகரில் உம்மு குல்ஸூம் இரண்டு கச்சேரிகள் செய் தார். அதற்கு அவர் பெற்ற தொகை இரண்டு லட்ச ரூபாய். நாஸர் நான்கு ஆண்டுகளில் பெறும் சம்பளம்!

ஆதாரம்: 'டைம்' தகவல்: 'கோடை



பொறுங்கள்!

தரமுள்ள துணிகள் விலை அதிகமென்று நினைக்கிறீர்களா?

இல்லை, நீங்கள் வாங்குவது டுவின் டஸ்கர் துணிகளாய் இருந்தால்! இந்த ரக துணிகள் உங்களுக்குப் பிடிக்கும்...உறுதியானவை, நீடித்து உழைப்பவை. அதி நேர்த்தியாய் தயாரிக்கப்பட்டவை. விலையிலும் நயமானவை. இவை எல்லாம் மதுரை மில்ஸாரின் பெரிய அளவு உற்பத்தி சௌகரியங்களால் சாத்தியமாகின்றன. ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்—டுவின் டஸ்கர். நயமான விலையில் தரமுள்ள துணிகள்.

ஹார்வி

டுவின் டஸ்கர்

பாப்லின் • டிரில் • லாங்கிளாத்

நயமான விலையில் தரமுள்ள துணிகள்

மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட்,
மதுரை.

மானேஜிங் ஏஜண்டுகள்:
ஏ. & எப். ஹார்வி லிமிடெட்

மதுரையைச் சேர்ந்த ஹார்வியின்



திருமுருக கிருபானந்தவாரியார்

கொலை என்பது செயலிலே மட்டும் அமையாது. அதனைச் செய்வோர் மன நிலையில் அது அமைகின்றது. கொலை சில இடத்தில் பாவமும், சில இடத்தில் புண்ணியமும், சில இடத்தில் கடமையுமாக அமைகின்றது. ஒருவன் ஒருவனைச் சினந்து — அல்லது ஒருவனிடமுள்ள செல்வத்தைக் கவர்வதற் பொருட்டுக் கொல்லுகின்றான் எனில் இது கொலை; பாவம். ஒரு காட்டு வழியில் சில பெண்களை ஒருவன் கொல்ல முயல்கிறான். அவ்வழி வந்த வீரன் ஒருவன் இடையில் புகுந்து கொல்ல முயன்றானைக் கொன்றான் எனில் இது புண்ணியமாகும்; கடமையும் ஆகும். ஏனெனில், கொல்லுகிறவன் மனத்தில் தீய எண்ணம் இல்லை. அப்பெண்களைக் காக்க வேண்டும் என்ற இரக்கத்தால் இது நிகழ்ந்தது. ஒரு நீதிபதி தன் வாழ்நாளில் கொலைக் குற்றம் செய்த பலரை மரண தண்டனை விதித்துக் கொல்லுகின்றார். அச்செயல் கொலையாகாது; அறமாகும். ஒரு மன்னன் தன் நாட்டை எதிர்த்து வந்த பகைவர்கள் பலரைக் கொல்லுகின்றான். இது கொலையன்று; கடமையாகும். டாக்டர், நோயாளியின் உடம்பில் உள்ள சீழ் முதலிய தீமை விலக அறுக்கின்றார். அது இம்சையன்று. அகிம்சையே ஆகும்.

ஆகவே, மன நிலையில் இது அமைகிறது.

தன்னலம் இன்றியும், தனது செயலின்றியும், அடியார்களுக்கு அமுதூட்டுதல் என்ற நியதி வழுவாதிருக்குமாறும், சிவபோதநிலையில் நின்றும் சிறுத்தொண்டர் சீராள தேவரை அரிந்தாராதலின், அது கொலையன்று. அன்றியும் வாளால் பலரைக் கொன்றும் வென்றும் மன்னனிடம் சேனைபதியாக நின்று இவர் செய்த வீரச் செயலுக்குப் பரிகாரமாகத் தமது அருமை மைந்தனையே அவ்வாளால் அரியும்படி இறைவருள் செலுத்தியது என்றும் கூறலாம்.

சிவானுபவச் செல்வராகிய அருணகிரிநாதர் இவருடைய சரிதையைத் திருப்புகழில் கூறும் திறத்தையும் நோக்க வேண்டும்.

> எண்தோளர் காதல்கொடு காதல் கறிவே பருகு
> செங்காடு மேனி பிரகாசமயில் மேலழகொ
> டெண்காதம் மாலைமுடி ஆறுமுக வாவ
> . பெருமாளே.

வாளால் மகனை அரிந்து சிறுத்தொண்டர் தலையின் இறைச்சி அமுதுக்கு ஆகாது என்று கருதித் தமது வேலைக்காரியாகிய சந்தன நங்கையின் கரத்தில் தந்து புதைக்குமாறு கட்டளையிட்டார். ஏனைய உறுப்புக்களைச் சமைக்கத் தகுந்த பக்குவமாகக் கூறு செய்து மனைவியிடம் தந்தார். திருவெண்காட்டு நங்கையார் அவைகளை அடுப்பில் ஏற்றி நன்கு சமைத்துத் தாளிதமும் செய்து அன்னமும் அமைத்து, "எல்லாம் தயாராகி விட்டது; நீர் சென்று அடியாரை அழைத்து வாருங்கள்" என்று கணவனாரிடம் கூறினார்.

விரைந்து திருக்கோயில் சென்று வயிரவரை அழைத்தார்.

வயிரவர், 'நல்லது வாரும்' என்று கூறி எழுந்து நடக்கலுற்றார். சங்கநிதி பதுமநிதி என்ற இருநிதிகளை வறுமையாளன் ஒருங்கே பெற்றது போல் சிறுத்தொண்டர் மனமகிழ்ந்து வயிரவரை அழைத்துக் கொண்டு மனை புகுந்தார்.

வீடு முழுதும் மாலைகள் தொங்க வைத்து, தூப தீபங்கள் அமைத்து, நிறைகுடம் வைத்து எதிர்பார்த்திருந்த அம்மையார், எதிர் வந்து, அரனடியார் அடிமலரை வணங்கி ஆசனத்தில் இருத்தினார். மனைவியார்

நன்னீர் கரத்தில் எடுத்து வார்க்க, நாதனடியார் பாதமலரை நாயனார் விளக்கினார். பாத பூஜை செய்த நீரைத் தன் செவ்வி மீதும், மனைவியார் சிரமீதும், வீடு முழுதும் தெளித்தார். திருவடிகளுக்குச் சந்தனமும் மலர்களும் சாத்தித் தூபதீபங்காட்டி வழிபட்டார். ''இனி அமுது படைக்கலாமோ?'' என்று வினவினார்.

அன்னமும் கறிகளும் ஒன்றாகப் படைக்குமாறு பயிரவர் பணித்தருளினார். இலைபிட்டு அன்னமும் காய்கறிகளும் படைத்தார்கள். அவற்றையெல்லாம் பார்த்தருளிய பயிரவர், ''நாம் சொன்னபடியே நரப்பசுவைக்கொண்டு எல்லாம் அமைத்திரோ?'' என்று கேட்டருளினார்.

திருவெண்காட்டம்மையார், ''தயாநிதியே! தலையிறைச்சி அமுதுக்கு ஆகாது என்று அகற்றினோம். மற்ற யாவும் கறியமுது அமைத்துள்ளோம்'' என்றார்.

''அதுவும்கூட நாம் உண்போம். ஆகவே, அதனையும் படையுங்கள்'' என்றருளினார் அடியார்.

அதைக் கேட்ட சிறுத்தொண்டர் நடுநடுங்கினார். சிந்தை நொந்தார். 'இத்தனை செய்தும் இப்பயிரவர் அமுது செய்யத் தடை நேர்ந்ததே' என்று திருவெண்காட்டு நங்கையும் திகைத்தார்.

அந்த வேளையில் அமிர்தசஞ்சீவி வந்து உதவியது போல், சந்தன நங்கை, ''வருந்தாதீர்கள். தாங்கள் தலையைப் புதைக்குமாறு தந்தபோது, ஒருகால் பயிரவப் பெருமானார் தலை இறைச்சியையும் கேட்கக் கூடுமோ என்று எண்ணிய நான் அதனைத் தனியே சமைத்து வைத்திருக்கிறேன். இதோ இருக்கிறது'' என்று கூறி அதனைக் கொணர்ந்து கொடுத்தார். பெரிய சுமை நீங்கியது போல் களிப்புற்ற நாயனாரும் அம்மையாரும் அதனை வாங்கி வந்து பயிரவர்முன் பரிகலத்தில் படைத்தார்கள்.

''அன்பரே! நாம் தனித்து உண்ண மாட்டோம். உடன் இருந்து உண்ண ஓர் அடியாரை அழைத்து வாரும்'' என்று பயிரவர் பணித்தருளினார். அதைக் கேட்ட நாயனார் இடியேறுண்ட நாகம் போல் நடுங்கினார். 'ஊர் முழுவதும் தேடியும் அடியார் ஒருவரையும் காணாது கவன்றேன். எண்ணிலாத அடியார்கள் வருகின்ற இவ்விடத்துக்குச் சோதனையாக இன்று ஒருவரேனும் வரவில்லை. இனி வேறு ஒருவரை நான் எங்கு போய்க் கொண்டு வருவேன்?' என்று சிந்தனை செய்து, வீட்டை விட்டுப் போய்ச் சுற்றுமுற்றும் பார்த்தார். திருவருளின் செயலால் ஒருவரும் கிடைக்கவில்லை.

சிந்தை நொந்து உள்ளே வந்து, வாடிய முகத்துடன் வயிரவரை வணங்கினார். ''எந்தையே! எங்கும் சிவனடியாரைக் காணப் பெற்றேனில்லை. அடியவர்களைக் கண்டு அடியேனும் திருநீறு பூசிக் கொண்டிருக்கிறேன்'' என்றார். எவ்வளவு பொருள் பொதிந்த பணிவான வாக்கு!

''ஓ! நல்லது; நல்லது. உம்மைப்போல திருநீறு இட்டார் எவருளர்? அருகில் அமர்ந்து நீர் எம்முடன் உண்ணும்'' என்று அருளிச் செய்து, ''அம்மா! அருகில் ஓர் இலை போடும். இந்த அன்னத்தில் பாதியும் இந்த இறைச்சிகளில் ஒரு கூறும் எடுத்து அந்த இலையில் படையும்'' என்று திருவெண்காட்டம்மையை நோக்கிப் பணித்தருளினார்.

அவர் அவ்வாறே படைத்தருளினார். வயிரவரை விரைவில் அமுது செய்விக்கச் சிறுத்தொண்டர் இலையில் கையை வைத்து உண்ணப் புகுந்தார்.

உடனே வயிரவர் தடுத்தருளி, ''நில்லும்; நில்லும். நாம் ஆறு மாதங்கட்கு ஒருமுறை உணவு செய்வோம். நாம் இன்னும் அருந்துவதற்குத் தொடங்கவில்லை. நாடோறும் உணவு செய்யும் நீர், நாம் உண்ணுமுன் உண்ணத் தொடங்கியது முறையோ? உம்மிடத்தில் நம்முடன் இருந்து உணவு செய்ய மைந்தனை அழையும்'' என்றருளினார்.

சிறுத்தொண்டர், ''எந்தையே! அவன் இப்போது உதவான்'' என்றார்.

ஆறுதிங்கள் ஒழிந்துண்போம் உண்ணுமளவு தரியாது
சோறுநாளும் உண்பீர்முன் உண்பதென் நம்முடன் துய்ப்ப
மாறின் மகவு பெற்றீரேல் மைந்தன் தன்னை அழையுமென
ஈறும் முதலும் இல்லாதார்க் கிப்போதுதவான் அவன் என்றார்.

''சிறுத்தொண்டரே! நாம் உமது புதல்வன் வந்தால்தான் உண்போம். இப்போது உதவான் என்று ஏன் கூறுகின்றீர்? அவன் எப்போதும் உதவுவான். நீர் சென்று நாடி அழையும்'' என்று அருள் செய்தார் வயிரவர்.

வையம் புகழும் சிறுத்தொண்டர், 'இனி அவர் அமுது செய்ய நாம் என்ன செய்வோம்?' என்று சிந்தித்து, நறுமலர் சூடிய திருநிகர் மனையாருடன் சென்று மைந்தனை அழைத்தார்.

எந்தாய் வருக இடர்நீக்க இங்கு வருக எமதுகுல
மைந்தா வருக மாணிக்கமணியே வருக மாதவத்தால்
வந்தாய் வருக மறைஞான மதலாய் வருக மதியனையாய்
சிந்தா குலந்தீர் சீராள தேவா வருக வருகவே!

hopt THE VERSATILE PHOTO FLASH UNIT

You've never had it this good. Wonderfully light (only 1 kg.) wonderfully compact, yet wonderfully powerful . hopt gives you the most light for the size . . and the most power for your money. (Light output 60 joules with guide number 254 for fast films). Created with West German collaboration. Performs professionally. Fully transistorized. Elegant. Versatile; fits all cameras having flash contacts. Guaranteed for one year against manufacturing defects. Available with all leading Photo Dealers. Lifelong companion to your camera!

LIBERTY INDUSTRIES, HYDERABAD.



என்று என்புருக அன்புடன் ஓலமிட்டு அழைத்தார்கள்.

பரமேசுவரர் திருவருளால் பள்ளியி லின்றும் ஓடி வருவார்போல் சீராள தேவர், காலில் சதங்கை ஒலிக்க, பொன்னுபரணங்கள் விளங்கத் தளர் நடையிட்டு ஓடி வந்தார். திருவெண் காட்டு நங்கையார் அந்தப் புத்திர மாணிக்கத்தை ஒப்பிலாத அன்புடன் எடுத்து அணைத்துத் தழுவிக் கணவனு ரிடம் தந்தார். தந்தையார் சிந்தை மகிழ்ந்து வாங்கி, 'இனி சிவபெருமா னுடைய அடியார் உண்ணப் பெற் றோம்' என்று உவகை கொண்டார்.

அடியாரை அமுது செய்விக்கும் பொருட்டுத் திருமகனை எடுத்துக் கொண்டு உள்ளே சென்றார். பயிரவ ராக வந்த முதல்வர் மறைந்தருளினார். பயிரவரைக் காணாது சிறுத்தொண்ட நாயனார் சிந்தை கலங்கினார். இலை யிலே இருந்த வெந்த இறைச்சியும் காணாது அஞ்சினார்.

மறைந்த அப்பரமபதி மலைவளர் மங்கையுடனும் மயில்வாகனக் கடவு ளுடனும் வெள்விடையின்மேல் ஆகரா கணித்து வானிடை காட்சியளித்தார். இங்கே தந்தை — தாய் — தனயன் மூவரும் பக்தி செய்ததால் இறைவன் — இறைவி — முருகன் மூவரும் எழுந் தருளினர் போலும்.

> அன்பின் வென்ற தொண்டரவர்
> அமைந்த மனைவியார் மைந்தர்
>
> முன்பு தோன்றும் பெருவாழ்வை முழுதுங்
> கண்டு பரவசமாய்
>
> என்பும் மனமும் கரைந்துருக
> விழுந்தார் எழுந்தார் ஏத்தினார்
>
> பின்பு பரமன் தருநிலைமை
> பெரியோரவருக் கருள்புரிவார்

சிவபெருமான் திருவடிக் கீழ் சிறுத் தொண்டரும், உமையம்மையார் திரு வடிக்கீழ் திருவெண்காட்டு நங்கையும் சந்தன நங்கையும், வேல் முருகன் திருவடிக்கீழ் சீராளரும் இருந்து, என்றும் பிரியாது இன்புற்றிருக்க அந் நால்வரும் உடன் வர அழைத்துக் கொண்டு சிவலோகத்துக்கு இறைவர் எழுந்தருளினார்.

60. அரியணையில் ஓர் அடியார்

மலை நாடு என்று புகழப்படுவதும், வளமிக்கதுமான சேர நாட்டின் தலை நகர் கொடுங்கோளூர். இப்பதி பரம் பரையாகச் சேர மன்னர்கள் வீற்றிருந்து அரசு புரிந்த அரிய திருநகரமாகும். மகோதை என்ற பேரும் இப்பதிக்கு உண்டு. இது, சிவபெருமான் எழுந் தருளியுள்ள திருவஞ்சைக்களம் என்ற திருத்தலத்தின் அருகில் விளங்குவது. ஷோரனூர் ஜங்ஷனுக்குத் தென் மேற்கே இருஞாலக்கடை என்னும் ஊரை அடைந்து, அங்கிருந்து ஆறு மைல் சென்றால் நான்கு மைல் படகில் போய்த் திருவஞ்சைக்களத்தைச் சேர லாம். இது சுந்தரமூர்த்தி நாயனா ருடைய தேவாரம் பெற்றது. இத் திருத்தலத்தில் உள்ள சுவாமியின் பெயர் அஞ்சைக்களத்தீசுரர். அம்மை யின் பெயர் உமையம்மை. தீர்த்தம்: சிவகங்கை.

காலையில் எழுகின்ற கலையொலியும், யானைக் கன்றுகளின் முழக்கமும், சோலையில் வண்டுகளின் ஒலியும், பாடல் ஆடல்களின் ஒலியும், கடல் ஒலியின் மிக்கனவாக அத்தலத்தில் ஒலித்தன. வீடுகள்தோறும் இன்பமும், நெருங்கிய சாலைகள் தோறும் அறங் களும், மடங்கள்தோறும் சைவ மேன்மை விரிவுரைகளும் திகழும். வேதநெறி நின்று விதிப்படி அனை வரும் உயிரினும் உயர்ந்ததாக ஒழுக் கத்தைக் கருதி வாழ்ந்து வந்தார்கள்.

கலியை அகற்றி அறந் தழைக்கும் பொருட்டு, சேரர் குலமும் உலகும் செய்த தவப் பயனால் சேரர் மன்னர் மரபில் பெருமாக் கோதையார் அவ தரித்தார். இனிது வளர்ந்து வந்த பெருமாக் கோதையார் முன்னைத் தவத்தின் பயனால் முக்கட் பெரு மானையே சிந்தித்து வருவாராயினர். அளவுமிக்க அன்புடைய அவர், அரச போகத்தையும், அரண்மனை வாழ்வை யும் விரும்பாதவராகி, திருவஞ்சைக் களம் என்னும் திருத்தலம் சென்று, அங்கு திருக்கோயில் திருத்தொண்டு களைப் புரிந்து வந்தார்.

உலக போகமும், அரச போகமும் நீர் மேல் எழுத்துக்கு நிகர் என்று சிவனருளால் உணர்ந்த அவர், அதி காலையில் நீரில் மூழ்கி, திருநீறு நிரம்பப் பூசிக் கொண்டு, திருநந்த வனம் சென்று, இறைவனுக்கு மலர் களைத் தருகிற செடி கொடிகளுக்குக் களையெடுத்து, நீர் பாய்ச்சி, மாலை மலரக்கூடிய முல்லை முதலிய மலர் களையும், காலை மலர்ந்த மலர்களை யும் எடுத்து, பல வகையான மாலை களைத் தொடுத்துக் கொண்டு, திருக் கோயிலுக்குள் சென்று, கூட்டி, மெழுகி, ஒருமைப்பட்ட மனத்துடன்

உள்ளம் உருகிப் பாடி வழிபாடு செய்து வந்தார்.

அப்போது கொடுங்கோளூரில் இருந்து அரசு புரிந்து வந்த செங்கோற் பொறையன் என்னும் மன்னர், பிறப் பென்னும் பெருங்கடற்குத் துறப் பென்னும் தெப்பமே துணை என்று துணிந்து நாட்டைத் துறந்து காட்டை யடைந்தார். 'இனி அரசுக்கு உரியவர் யார்'?' என்று மதிநல மிகுந்த மந்திரி மார்கள் சில நாட்கள் ஆராய்ந்து பெருமாக் கோதையாரே என்று தெளிந்தார்கள். ஆனை, தேர், பரி முதலியவைகளுடன் திருவஞ்சைக் களத்தை அடைந்தார்கள். முடிசூடிக் கொண்டு அரசு செலுத்துமாறு, அவர்கள் கோதையாரை வேண்டி நின்றார்கள். (தொடரும்)

படித்துப் பாருங்கள்

The Big Change

1967ம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் தமிழக அரசியல் அரங்கத்தில் ஒரு மாபெரும் மாறுதல் நிகழ்ந்தது — கத்தியின்றி ரத்த மின்றி நடந்தது. இருபது ஆண்டுகளாகத் தொடர்ந்து ஆட்சி புரிந்து வந்த காங்கிரஸ் ஆட்சி மக்களால் நிராகரிக்கப்பட்டது. திரா விட முன்னேற்றக் கழகத்தினர் மகத்தான வெற்றி பெற்றனர். அவ்வெற்றி அவர்களைத் தமிழக ஆட்சி பீடத்தில் அமர்த்தியது. இது தமிழகச் சரிதையில் மகத்தான திருப் பம்; புரட்சி என்றும் பகரலாம். இவ்வரிய நிகழ்ச்சியைப் பற்றி 'மாபெரும் மாறுதல்' (The Big Change) என்று மகுடமிட்டு திரு கே. எஸ். இராமானுஜம் அவர்கள் சிறந்த நூல் எழுதியுள்ளார்கள்.

தமிழக மக்களுடைய நல்வாழ்வுக்கு நெருங் கிய தொடர்பு கொண்டுள்ள இம்மாறுதல் நிகழ்வதற்குரிய காரணங்களை சொல்லாம் நுணுகி, நடுநிலையிலிருந்து ஆராய்ந்துள்ளது இந்நூல். இம்மாறுதலை நன்கு அறிந்து கொள்ளுவதற்குத் தமிழகத்தின் இருப தாண்டு அரசியல் நிகழ்ச்சிகளை அறிதல் வேண்டும். எனவே அச்சரிதையை விளக்க மாகவும், தெளிவாகவும் ஆதாரங்களோடும் பத்திரிகைகளில் வெளிவந்தபடி அழகாகவும் விவரமாகவும் இந்நூலாசிரியர் தொகுத்துத் தந்துள்ளார். டில்லி 'இந்துஸ்தான்' பத்திரி கையில் அரசியல் நிருபராக இந்நூலாசிரியர் பணிபுரியும் வாய்ப்பும் பேறும் பெற்றமை யால் நிகழ்ச்சிகளை நல்ல முறையில் கண்டு படக் கொடுப்பதற்குத் தகுதியும் உரிமையும் பெற்றுள்ளதை இந்நூலில் நன்கு காணலாம்.

ருசிகரமான புள்ளி விவரங்கள் பல இந்நூலுக்கு அணி செய்கின்றன. தமிழகத் தில் மக்கள் தொகை, வாக்காளர் தொகை, வீடுகளின் எண்ணிக்கை, வாக்கெடுப்போர் தொகை, வாக்காளர் பட்டியல் கையெழுத் துப் பிரதியில் எத்தனை பக்கங்கள், கட்சிகள் பெற்ற வாக்குகள் எண்ணிக்கை முதலான புள்ளி விவரங்கள் அரசியல்வாதிகள் அறிய வேண்டியவைகள். நம் மாநிலத்தில் வீடுகள் 77,05,160; வாக்காளர் பட்டியல் பிரதியில் ஒன்பது லட்சத்து ஐந்நூறு பக்கங்கள்! தேர்தல் எத்துணை பிரம்மாண்டமானது! எத்துணை சிரமம் வாய்ந்தது!

இம் மாறுதல [illegible] இராஜாஜி அவர்களின் சிரிய பங்கு இ[illegible]ில் நன்கு விளக்கப்பட் டிருக்கிறது. தி. மு. க. மகாநாட்டில் இராஜாஜி அவர்கள் சொற்பொழிவு முழுதும் தரப்பட்டுள்ளது. இராஜாஜி — அண்ணாதுரை முதல் சந்திப்பு, அவ் உறவின் வளர்ச்சி சுவையாக உள்ளது. திரு அண்ணாதுரை அவர்களைப் பற்றி இராஜாஜி கூறியதை இந் நூலில் காணலாம்:

''போதிய பொது அறிவின் பொலி வைப் பெற்ற நல்லதொரு தலைவர். பணி வும், இணங்கும் தன்மையும் உடையவர். நல்ல ஆட்சித் திறனுடையவர் ஆவார்''
(பக்கம் 240)

1947ல் சுதந்திர தினத்தைத் துக்க தின மாகக் கொண்டாட வேண்டும் என்று பெரி யார் விட்ட அறிக்கையை மறுத்து, அந்நிய ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றது மகிழ்ச் சிக்குரிய நிகழ்ச்சி என்றும், அதை மனப் பூர்வமாகக் கொண்டாட வேண்டும் என்றும் திரு அண்ணாதுரை அறிக்கை விடுத்த செய்தி யையும் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

மேலும் இவ்வாசிரியர் பத்திரிகையாளர் என்ற உரிமையோடு, பொதுத் தேர்தல் நிகழ்ச்சி ஒன்றை வன்மையாகக் கண்டித் திருப்பதைக் குறிப்பிட வேண்டும். ''திரு காம ராஜ் போட்டியிட்ட விருதுநகர்த் தொகுதி, திரு பக்தவத்சலம் போட்டியிட்ட ஸ்ரீபெரும் புதூர்த் தொகுதி. இரண்டிலும் வாக்கு எண் ணிக்கையை இரண்டாம் நாளைக்குத் தள்ளி வைத்தது, மற்றபடி நன்றாக நடைபெற்ற பொதுத் தேர்தலுக்கு மாசுதரும் நிகழ்ச்சி யாகும்!'' (பக்கம் 10) உண்மை! உண்மை!!

இத்துணிவுடைமை இந்நூலுக்கு அணி வுடைமையாகும்.

தமிழக அரசியலைப் பற்றி அறிய வேண்டு மென்று ஆர்வம் உடையவர் அனைவரும் அவ சியம் படிக்க வேண்டிய அருமையும் பெரு மையும் படைத்த அரிய நூல். தமிழக அரசியல் அறிவு வளர்ச்சிக்குப் பயன்படக் கூடிய இந்நூலை எழுதிய ஆசிரியர் பாராட்டுக் குரியவர்; ஆங்கிலத்தில் உள்ள இந்நூல் தமிழி லும் ஆக்கப்பெற வேண்டியது அவசியம்.

தமிழகத் தேர்தலில் போட்டியிட்டோர் பெயர்கள், பெற்ற வாக்குகள் முதலியன ஒரு அநுபந்தமாகச் சேர்த்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். அடுத்த பதிப்பில் தமிழ் மொழிபெயர்ப்பில் சேர்ப்பது நலம்.

— எம். கிருஷ்ணசாமி பாரதி

பிரசுரம்: ஹிக்கின்பாதம்ஸ், சென்னை - 2. விலை ரு. 7-50.



அவனும் ஒரு மனிதன்

சிறப்புச் சிறுகதை

• சுப்புடு •

1928ம் வருஷம். பௌர்ணமி திதி. ரங்கஸ்வாமி அய்யருக்குத் திருக்குமாரன் அவதரித்தான். ரோகிணி நட்சத்திரம். தொட்டிலிட்ட அன்று வைதிகச் சடங்குகள் நன்கு நடந்தேறின. நாமகரணம் வந்தபோது சர்ச்சை ஏற்பட்டது. ரோகிணி ஆகையால் கிருஷ்ணன், கண்ணன், முரளி என்று பெயர்கள் அடிபட்டன.

அத்தை வேடிக்கையாகச் சொல்லுவாள். எட்டாவது நாளே அம்மா கழுத்திலிருந்த பதக்கத்தை உருவி முதுகுக்குக் கீழே ஒளித்து விட்டது குழந்தை. வீடு முழுதும் தேடிய பின் பாய் முதுகின் அடியில் காணப்பட்டது. இவ்வளவு கள்ளத்தனம் படைத்த பயலுக்கு முரளி என்றே பெயர் வைக்க நிச்சயித்தார்கள். நிலைத்தது.

முரளி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் உருண்டு திரண்டு வளர்ந்தான்.

பள்ளிப் படிப்பில் நாட்டமே இல்லை. கீதோபதேசம் செய்த கண்ணனுக்குப் பள்ளிப் படிப்பு என்ன என்று பெற்றோர்கள் அலட்சியமா யிருந்து விட்டார்கள். ஆனால் அடிக்கடி புதிய நோட்டுப் புத்தகங்களும், பென்சில், பேனாக்களும் வீட்டுக்குக் கொணர்ந்த முரளியின் செய்கைகள் வயிற்றில் கொஞ்சம் அரளியைக் கரைத்தது.

வகுப்புக்கு இரண்டு வருடங்கள் என்ற கணக்கில் எட்டாவது வயதிலேயே முற்றிப் போயிருந்தான் முரளி.

அப்போதுதான் அந்த அருமையான சம்பவம் நிகழ்ந்தது. அருணாசலம் பாய்ஸ் ஸ்கூலில் பள்ளிக்கூடம் விடுமுறை கழிந்துத் திறக்கும் சமயம். மூன்று மாதச் சம்பளம் கட்டப் பிள்ளைகள் காஷியரை முற்றுகை இட்டுக் கொண்டிருந்தனர். ஒரே நெரிசல்.

அப்போது ஒரு மாணவன், ''நான்காம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை சம்பளம் இங்கே வாங்க ஏற்பாடாகியிருக்கிறது'' என்றான்.

இங்கே முரளி ஒரு ஜன்னலுக்குப் பின் ரசீதுப் புத்தகத்துடன் உட்கார்ந்திருந்தான். வாங்கிய பணத்துக்குத் தாற்காலிக ரசீது வழங்கியவண்ணம் இருந்தான். பள்ளியில் எடுபிடி வேலையெல்லாம் ஜரூராகச் செய்யும் முரளியை இந்தத் தோரணையில் கண்ட மாணவர்கள் சந்தேகப்படவில்லை. அதுவும் ஒரு போர்டில் ''நாலாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரை இங்கே பீஸ் கட்டி ரசீது பெற்றுக் கொள்ளவும்'' என்று எழுதப்பட்டிருந்தது.

மூன்று மணிக்கு மேல் முறையே ஜன்னல் மூடப்பட்டு, முரளி வசூலான ரூ. 1010.10 பைசாவுடன் அந்தர்த்தியானமானான்.

ஒரு வாரம் சல்லடை போட்டார்கள். ரங்கஸ்வாமி அய்யர் மானி. பிராவிடன்ட் பண்டிலிருந்து கடன் வாங்கி ஈடு செய்து விட்டார் பள்ளிக்கு.

ஒரு வருஷம் கழித்து முரளி திடீரென்று வீட்டில் பிரத்தியட்சமானான். பெற்றோர்கள் காலில் சாஷ்டாங்கமாக விழுந்தான். தான் அறவே மாறிவிட்டதாக அறைகூவினான்.

பெற்ற மனம் பித்து என்பார்கள். இளகி விட்டது அவர்கள் மனம். அம்மாவே சொன்னாள்: ''நம்ம கிட்ட இருந்தால் பாழாகி விடுவான். மதராஸில் மாமா வைத்தியநாதனிடம் அனுப்பி விடலாம். ஆள் கறார்ப் பேர்வழி. பையனும் உருப்பட்டு விடுவான்.''

ரங்கூனிலிருந்து சென்னை போகும் கப்பல் வெள்ளிக்கிழமை பகல் பத்தரை மணிக்குப் பழுத்த ராகுகாலத்தில் புறப்படுகிறது. திங்கள் எட்டேகால் மணிக்குச் சென்னையில் நங்கூரம் பாய்ச்சுகிறது கொழுத்த ராகு காலத்தில்.

முரளி பரஸ்தானம் பண்ணிவிட்டுப் புறப்பட்டான். ரங்கூன் வாசம் புளித்து விட்டது, ஏமாற ஆளில்லாமல்.

வைத்தியநாதய்யர் முரளியைச் சந்தித்து அழைத்துப் போனார். முன் ஹாலில் பெரிய பிரம்பு வைத்திருந்ததை அவன் பார்க்காமல் இல்லை. இரண்டு ராஜபாளையம் ஜந்துக்கள் அவனைப் பின்கட்டில் வரவேற்றன. எல்லாவற்றுக்கும் மேலாக உள்ளே பெரிய காண்டாமிருகம் காட்சியளித்தது. காமாட்சி மாமி

தன் இடுங்கிய கண்களுடன், ''வாடா, கடன்காரா!'' என்று முரளியை வரவேற்றான்.

மாமா ஓர் அட்டவிணையைக் கையில் தந்தார்.

அதிகாலையிலிருந்து இரவு பன்னிரண்டு மணிவரை அதில் அவனுடைய நிகழ்ச்சி நிரல் குறிப்பிடப்பட்டிருந்தது. ஒரு முடிவுக்கு வந்தவனாய் முரளி புன்னகையை வரவழைத்துக் கொண்டான்.

''மாமா! நீங்க வைதிகிருந்தே இப்படி வளர்த்திருந்தால் நான் சோம்பேறியாயிருக்க மாட்டேன்'' என்று குழைந்தான்.

அட்டவணைப் பிரகாரம் காரியம் செய்த தோடல்லாமல் மாமி கையிலிருந்து பிடுங்கி விட்டுக் காரியங்களைச் செய்தான். வெந்நீர் போடுதல், கறிகாய் நறுக்குதல், புடவை துவைத்தல், துணிகளைக் கொடியில் உலர்த்தல் இத்தியாதி. இந்தக் காரியங்களில் மாமி நெகிழ்ந்து விட்டாள். போதாததற்கு மாமி முகத்தில் லக்ஷ்மி களை தாண்டவமாடுவதை முதல் முதலாகக் கண்டுபிடித்துச் சொன்ன பெருமை முரளியைத்தான் சேர்ந்தது. அன்று முதல் மாமி மாறிவிட்டாள். இந்த மாதிரி ஒரு பிள்ளை தனக்கு இல்லையே என்று பரிதாபமாக ஏக்கம் தெரிவித்தாள்.

ஒரு நாள் ஒரு மூட்டை அரிசியை முதுகிலேயே தூக்கி வந்ததில் சுளுக்குப் பிடிப்புக் கண்டு படுத்து விட்டான் முரளி. மாமி கண் விழித்து சிசுருஷை செய்தாள். கழுத்துப்பக்கம் வீங்கி விட்டது. ஆங்கில வைத்தியம் பலிக்கவில்லை. நாட்டு வைத்தியர் இது சுளுக்கே இல்லை, பொன்னுக்கு வீங்கி என்று அடித்துச் சொல்லி விட்டார். யாராவது இல்லையென்று நிரூபித்தால் தம் கழுத்தையே நெரித்துக் கொள்வதாகச் சவால் விட்டார்.

அன்று இரவு முரளி கழுத்தில் அத்தையின் மூன்று வடச் சங்கிலி ஏறிற்று. அணைத்துக் கொண்டிருந்த முரளி சங்கிலி ஏறின பதினைந்தாவது நிமிஷத்தில் குறட்டைவிட்டான். அத்தை நாட்டு வைத்தியனை வாழ்த்தினாள். ஏழுமலையானுக்கு ரூபாய் முடிந்தாள்.

மறுநாள் காலை கடச்சுடக் காப்பியுடன் முரளியின் போர்வையை அகற்றியபோது அங்கே நீளவாக்கில் ஒரு தலையணையும் நெடுக்குவாட்டில் இரண்டும் இருந்தன.

'லபோ, லபோ' என்று அடித்துக்கொண்டாள் காமாக்ஷி. வைத்தியநாத அய்யருக்கு வேலை கங்க இலாகாவில். போலீசுக்கு கம்ப்ளெய்ண்ட் செய்ய மறுத்துவிட்டார். மாமிக்கு இந்த விஷயம் புரியவில்லை.

ஃ ஃ ஃ

பம்பாய் ரொம்பப் பிடித்திருந்தது முரளிக்கு என்பது அவன் பம்பாய் வந்துவிட்டான் என்பதைக் குறிக்கிறது. துணிக் கட்டுப்பாடு இலாகாவில் சாரங்கபாணி வேலை பார்க்கிறான் என்று பராபரியாகக் கேள்விப்பட்டிருந்தான் முரளி. இரண்டே நாட்களில் அவன் இருப்பிடம் தெரிந்து கொண்டான்.

ஒரு நாள் காலை சாரங்கன் வீட்டு வாசலில் ஒரு பெரிய லிமோஸின் கார் வந்து நின்றது. டிரைவரின் கையில் ஒரு அச்சடித்த சீட்டை அனுப்பினான் முரளி. 'ஆர். முரளி, ஓ. எஸ். எம்., டில்லி' என்று எழுதியிருந்தது. மாதுங்கா புறாக்கூடுகள் ஒன்றிலிருந்து சாரங்கன் குடுகுடுவென்று வந்து முரளியை வரவேற்றான். அவன் சூட்டும் கோட்டும் அடையாளம் தெரிந்துகொள்ளக் கொஞ்சம் நாழியாயிற்று.

''எலே! மொட்டை! இன்னும் அந்த ஆந்தை முழி முழிக்கிறே. அதே கிளெர்க் வேலைதானா? எத்தனை குழந்தை?'' என்று கேட்டான் முரளி.

சாரங்கன் அசந்து போய்விட்டான்.

''ஏதோ இருக்கேண்டா. ஆமாம்.நீ இங்கே எங்கே வந்தே? என்ன பிஸினஸ் பண்ணறே? காரைப் பார்த்தால் எது முன் பக்கம் எது பின்பக்கம் என்று தெரியலே. வாடா மேலே.''

முரளி வீட்டை ஒரு நோட்டம் விட்டான். ''இந்தப் புறாக் கூண்டிலே எப்படிடா காலம் தள்ளறே. ஸ்டுபிட் பெல்லோ'' என்றான்.

குழந்தை மாலதி இதற்கிடையில் உள்ளே வந்தாள். சட்டென்று மாலதியை அணைத்து ஒரு முத்தமிட்டான். ''டார்லிங் லிட்டில் திங்! ஏண்டா ஒன் மொகரக்கட்டைக்கு இவள் எப்படிடா வந்தா? ஓ ஐ. ஸீ... உன் 'ஒய்ப்' ரொம்ப...'' சாரங்கனுக்கு வாயெல்லாம் பல்லாயிற்று.

குழந்தை கையில் ஒரு நூறு ரூபாய் நோட்டைத் திணித்தான் முரளி.

''அவளுக்கு இஷ்டப்பட்டதை வாங்கிக் கொடுடா'' என்று கூறிவிட்டுக் கிளம்ப எழுந்திருந்தான். சாரங்கனுக்கு ஒன்றும் புரியவில்லை. அதற்குள் அவன் மனைவி மைதிலி உள்ளே நுழைந்தாள். நூறு ரூபாய் நோட்டு அவள் மேனியையும் சிலிர்க்க வைத்திருந்தது.

''ரொம்ப நன்னாயிருக்கு! பாஸ்ய ஸிநேகிதர் வந்திருக்கிறார். சாப்பிடுன்னு சொல்லக்கூட வக்கில்லே உங்களுக்கு. சமையல்லாம் ஆயிடுத்து. நிமிஷத்திலே இலை போட்டுடறேன்'' என்றாள் மைதிலி.

''நதிங் டூயிங்! பத்தரை மணிக்கு முதன் மந்திரியைப் பார்க்கணும். சாப்பாடு எல்





லாம் அப்புறம். ரெண்டு வருஷங்கள் நீ வெளிநாடு போயிட்டு வா. ஏற்பாடு பண்றேன்'' என்றான் முரளி.

''ஏய், அதெல்லாம் இருக்கட்டும். இப்ப தானே மணி எட்டு. இன்னும் இரண்டரை மணி நேரம் இருக்கு. ஆமாம். நீ எங்கே வேலை பார்க்கிறே? சேதியைச் சொல்லு!'' என்றான் சாரங்கன்.

''நீ பயப்படாமல் இருந்தா சொல்றேன். லயஸான் (Liason) 'வொர்க்' தான். முரதாபாத்தில் ஒரு சர்க்கரை முதலாளிக்கு அட்வைசர். மண் மூட்டைன்னு புக் பண்ணிச் சர்க்கரையை பம்பாய்க்குத் தள்ளிண்டு வரவேண்டியது. இங்கே ராம்லால் சேட் பில்டிங் காண்ட்ராக்டர் அதை வாங்கி இரண்டு நாள் கிடங்கில் வைத்துவிட்டுக் கள்ள மார்க்கட்டில் தள்ள வேண்டியது!'' இது முரளி.

''என்னடா! தண்ணி குடிக்கிருப்பலே சொல்றே. பாவி!'' —இது சாரங்கன்.

''இல்லேன்னா உங்களைப் போல மசமசன்னு இருப்பானாக்கும்!''—இது மைதிலி.

''அது கெடக்கட்டும். எனக்குக்கூட ரெண்டு மூணு சேர் சர்க்கரை தள்ளி விடேண்டா.'' இது சாரங்கன்.

''தரித்திரப் பயலே. கேட்கிறதை மூட்டையாய்க் கேளேண்டா. ஒன் பிச்சைக்காரப் புத்தி போகாது ஒனக்கு'' — முரளி.

''சும்மா சவால் விடாதே. ஒரு மூட்டை கொண்டா பார்ப்போம். மைதிலீ! பர்ஸை லேந்து ரூ. 80 எடு. வெளியிலே மணங்கு ரூ. 120க்கு விக்கிறது. ரூ. இரண்டு மேனிக்கு எனக்கு ஒரு மூட்டை தள்ளிடு.'' —சாரங்கன்.

''போட்டு போடு. பணம் அப்புறம் பாத்துக்கலாம். சாயங்காலம் சர்க்கரை வரும். நானே ராத்திரி சாப்பிட வரேன். விருந்து கூடாது. வத்தக் குழம்பு. சுட்ட அப்பளாம். டாடா.'' முரளி குடுகுடுவென்று கீழே இறங்கி விட்டான்.

சாரங்கனுக்குத் தலைகால் புரியவில்லை. உதவாக்கரை முரளிக்கு அடித்த யோகம் அவனைப் பிரமிக்கச் செய்தது.

மாலை ஏழு மணிக்கு ஒரு கூலியாள் இருட்டோடு ஒரு மூட்டை சர்க்கரையை இறக்கிவிட்டுப் பணம்கூட வாங்காமல் போய் விட்டான். சாரங்கனும், மைதிலியும் அன்றிரவு வெகு நேரம் வரையில் சர்க்கரை மாகாத்மியம் பாடினார்கள். பேசிப் பேசி ஓயவே இல்லை.

மறு நாள் காலை ஏழு மணிக்கு முரளி பட்டு வேட்டியும், ஸில்க் ஜிப்பாவும் அணிந்து வந்தான். குழந்தை மாலதிக்கு ஒரு பெரிய டின் சாக்லேட்டுடன் வந்தான்.

''வத்தக் குழம்பு வாசனை மூக்கைத் துளைக்கிறதே?'' என்றான் முரளி.

''மனசு கேட்க மாட்டேங்கிறது. இவ்வளவு பெரிய உபகாரி. வெறும் வத்தக் குழம்பு போதும்கிறேள்.''—இது மைதிலி.

''ஏய்! அவ வேறே ஏதுக்கோ அடிபோடறா. பெண்டுகளாலே ரகஸியம் வைச்சுக்க முடியுமா? ஆத்துக்குச் சர்க்கரை மூட்டை வந்ததே 'ரகஸியமா' பக்கத்து வீட்டு பார்வதி கிட்டே மாத்திரம் சொன்னாள். அவள் கோடி வீட்டு மேனகாதேவிக்கு மாத்திரம் சொன்னாள். இன்னிக்குக் காலமே ஏழு மணிக்குள்ளே இந்த சொஸைட்டியில் உள்ள 36 வீடுகளுக்கும் எட்டி அவா தலா எண்பது ரூபாய்மேனிக்கு ரூ. 2880யை அட்வான்ஸ் கொடுத்துட்டுப் போயிருக்காளாம். தவறு நேர்ந்து போச்சு. இந்தத் தடவை மன்னிச்சுட்டியானா இனிமே ஜாக்கிரதையா யிருப்போம்.'' — சாரங்கன் மென்று விழுங்கினான்.


''நம்ப தேசம் உருப்படாதுன்னுதான் நான் எப்போதுமே சொல்லுவேனே. ஒரு சின்ன ரகசியத்தைக் காப்பாத்த வழியில்லே. ஆனா மைதிலியைப் பழி சொல்லிப் பயனில்லே. அது நேஷனல் டிரேய்ட் சரி, பணத்தைக் குடு. நீ உன் மூட்டைக்குத் தர வேண்டாம். அது என் பரிசு. ராத்திரி 11—30 மணிக்குக் கரிமூட்டை வைக்கிற லாரியிலே சர்க்கரையோட ஒரு கரிகால் சோழன் வருவான். யாரோ என்னமோன்னு பயந்து அலறாதே. மூட்டையெல்லாம் உங்க வீட்டிலேயே இறக்கிக்கோ. காதும் காதும் வச்சாப்ல. அப்புறம் பட்டுவாடா பண்ணிக்கலாம்'' என்றான் முரளி.

அன்று மாலை ஏழு ஐம்பது ஃப்ரான்டியர் மெயிலில் முரளி ரொக்கம் 2880 பணத்துடன் டில்லிக்குப் பயணம் போய்க் கொண்டிருந்தான். 'சௌராஷ்ட்ரா குரு'வில் மறுநாள் ஒப்பாரி கேட்டது.

முரளி டில்லி வந்தது போக்குக் காட்டத்தான். இரண்டே நாட்களில் மதராஸ் வந்து திருவனந்தபுரம் நோக்கிப் பயணமானான். முதல் முதலாக மூன்றும் வகுப்பில் தலைமறைவாய் யாத்திரை செய்தான். எதிரே இரண்டு மலையாளத்துக்காரர்கள் யாரையோ பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். சம்பாஷணை பின்வரும் தோரணையில் அமைந்திருந்தது.

''சங்குருக்கு ரொம்பப் புத்தி முட்டாகும். இவன் பார்க்கற ரேஞ்சர் வேலைக்கு ஐ. ஏ. எஸ்.ஸா இட்டும். அங்க பொறந்தா ஆண்டியாக்கும், இவனுக்கு ஆறு சொன்னு சேச்சொன்னும் வாண்டாம். ஏ....ய்!''

''சங்குருக்கு இப்ப எங்கியாக்கும் போஸ்டிங்...?''



''கொளக்கோட்லயே! யானைக்காடு.... மனுஷ்ய சஞ்சாரம் கிடையாது.''

''மொதல் பொண்ணை அம்பீஸ் கபே அச்சுதனுக்குக் கொடுத்தேன். பொண்ணு எஸ். எஸ். எல். ஸி. ஜெயிச்சிருக்காளாம். ப்டாதுான்னூப்புட்டான். ப்ராந்தன்னு விட்டுட்டேன்.''

முரளிக்கு மூளை வேலை செய்தது. திருவனந்தபுரம் இறங்கி, நாலைந்து சீட்டி ரவிக்கைத் துணிகள் வாங்கிக் கொண்டு ஒரு டாக்ஸி பிடித்து முப்பது மைல் தள்ளியிருந்த கொளக் கோட்டைக்குப் போய்ச் சேர்ந்தான்.

ஒரு மர வீடு. சுற்று வட்டாரத்தில் ஜன வாடையே இல்லை. முரளி குரல் கொடுத்தான். ''ஸார்!''

''யாராக்கும்?''

''பிரஸ் ரிப்போர்ட்டர். ஜன்ம பூமி. நமஸ்காரம். இந்த இலாகாவைப் பற்றி ஒரு ஸர்வே ரிபோர்ட் எழுதணும்.''

''ஓ!''

''ஒங்களுக்கு அதிகம் சிரமம் தரலே. நாளைக் காலையிலே கிளம்பிடுவேன்.''

''ஓ!''

''மொதல்லே கைகால் அலம்பணும். இந்தாங்கோ, என் அன்பளிப்பு.''

''என்னவாக்கும். அதலே.''

''குழந்தைகளுக்குச் சீட்டித் துணி.''

''சரியா ஆறன்னமிருக்கே. எப்படி கணக்கா கொண்டு வந்தேள்?''

''கொஞ்சம் இக்ஷிணி உபாஸனை உண்டு. எங்கப்பா வேதராம தீக்ஷிதர் தெரியுமா? அஷ்டாவதானி.''

''நன்னாச்சு. ஸொல்பமா ஆகாரம் பண்ணிட்டுப் போசலாம். மீனாக்ஷி, சாயா உண்டாக்கு.''

''இந்தத் தனிக் காட்ல எப்படி மானேஜ் பண்றேள்?''

''பண்ணுதிக்கி....! ஆறு பொண்ணு. நூத்தம்பது ரூபாயாக்கும் தரான். ஈசுவரன் இருக்கான்.''

முரளி மேலும் மேலும் பேச்சுக் கொடுத்துப் பல நுணுக்கங்களைத் தெரிந்து கொண்டான். மரங்கள் தூக்கச் சுமார் ஐம்பது யானைகள் உண்டு. மதம் பிடிக்காமலிருக்க வருடத்தில் நான்கைந்து மாதங்களுக்கு வெறுமே கட்டிப் போட்டு வைப்பார்கள்.

சடக்கென்று முரளிக்கு ஒரு யோசனை தோன்றியது. மனத்தைத் திடப்படுத்திக் கொண்டான். மறு நாள் காலை சென்னை நோக்கி முதல் வகுப்பில் பயணமானான்.

வண்டியில் இவன் எதிரே வயிற்றைச் சாய்த்துக் கொண்டு வாரேவன் செட்டியார் தலையில் கையை வைத்துக் காட்சி தந்தார்.

''முருகா!'' என்றான் முரளி, நிசப்தத்தைக் கலைக்க.

''சாமி எந்த ஊரு?''

''யாதும் ஊரே, யாவரும் கேளிர்!'' என்றான் முரளி. ''ஐயாவுக்கு என்ன கவலை?''

''மனிசன்னு பொறந்துட்டா பொறவு கவலைதானே! உட்டுத் தள்ளும்.''

''ஆனைமுகனை நினைத்தால் ஆகாததும் உண்டோ?''



''அதுதானே தவிப்பு. ஆனைமுகன் கெடக்காமத்தானே வள்ளி படம் அந்தரத்திலே தொங்குது. ஜிம்னி சர்க்கஸ் சிங்காரவேலன் ஆனை தரேன்னு சொல்லியிருந்தான். காலை வாரிப்புட்டான். படப் பிடிப்பு ஒரு நாள் நடவாட்டிச் செலவு என்னு தெரியுமில்லே தம்பி!''

''ஆனைமுகனை நெனைச்சுக்கிட்டா ஏன் நடவாது? விசயத்தை எங்கிட்ட உட்டுட்டு மேலே நடக்க வேண்டியதைப் பாரும்.''

''நெசமாவா சொல்றீங்க.''

''செஞ்சு காட்றம்யா. நானை ராவைக்குத் திருவனந்தபுரம் போய்ப் பாகனோட யானை பதினைந்து நாளுக்குப் பேசி அனுப்பறேன். இன்னிக்கு நாலாம் நாள் உம்ம கம்பெனி வாசல்லே ஆனை நிக்கும்யா.''

''அட்வான்ஸ்!''

''அட்வான்ஸ் வாங்கற கத்திரிப் பய நானில்லேய்யா. நானும் ஒங்க மாதிரி படம் எடுத்துப் பல்லை ஒடைச்சுக்கிட்டு நிமிர்ந்து நிக்கறேன், வேறே லைன்லே. ரயில் டிக்கட்டுக்குத் தாரும். போனவுடன் பிக்ஸ் பண்ணித் தந்தி தரேன். பணத்தை டி. எம். ஓ. பண்ணும். சரியா?''

செட்டியார் சொக்கிப் போனார். இரண்டு நாட்கள் முரளிக்கு விருந்துபசாரம் நடந்தது. மூன்றாம் நாள் முரளி கொளக்கோட்டிலிருந்தான். இந்தத் தடவை பெண் குழந்தைகளுக்குச் சின்னாளப்பட்டிப் புடவையை எடுத்துப் போயிருந்தான்.

சங்குரு அய்யருக்கு வாயெல்லாம் பல். யார் அவரை நாடி அந்தக் காட்டுக்கு வருகிறார்கள், அதுவும் பரிசுடன்?

''சங்குரு மாமா! நீங்க கொடுத்த தகவலை வைத்துக் கொண்டு ஒரு விரிவான கட்டுரை எழுதினேன். நல்ல பெயர். அதை வெளி நாடுகளுக்கு அனுப்பப் போறேன். எல்லாம் ஒங்க ஆசீர்வாதம். ஏதோ என்னால் ஆனது. இந்தப் புடவைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்'' என்றான் முரளி.

''மீனு! சாயா உண்டாக்கு. மாமாக்கே!''

''சாயிருக்கட்டும் மாமா. ஒரு முக்கியமான விஷயம் ஒங்கிட்ட பேசணும். தப்பில்லேன்னு சொல்றேன்.''

''ஏய்!. விரோதமொண்ணுமில்லே..... சொல்லு. நீ நம்பாமாயாச்சே!''



''ஆபீஸ் வேலை தலைக்கு மேலே இருக்கு.''
''தலைக்குக் கீழேதான் இருக்கு!''

''நீங்க வாங்கற சம்பளத்திலே, எப்படி குடும்பம் நடத்தப் போறேன்? பொழைக்கிற வழியைப் பார்க்கணும் மாமா!''

''விபரீதமாக்கும் அம்பி. விபரீ.''

''அதெல்லாம் இல்லே. நான் சொல்றபடி கேட்டேன்னு விமோசனம் உண்டு.''

''நீயென்னவாக்கும் சொல்றாய்?''

''ஒங்ககிட்ட ஸர்ப்ளஸ் யானை இருக்கல்லவா? ஒண்ணை ஒரு பதினைஞ்சு நாளைக்கு மெட்ராஸ் அனுப்பி வைக்கணும், மாருத்தனோட. ஒரு பிலிம் ஷூட்டிங் ஆனவுடனே திரும்பி வந்துடும்.''

''அய்யோடா! டேஞ்சராக்கும்!''

''என்ன டேஞ்சர். யாருக்குத் தெரியப் போறது? ரொக்கம் ரூ. 1500. யானைக்கு வேலையில்லே. காதும் காதும் வச்சாப்பல நடத்திப்புடலாம்...!''

''டேஞ்சர் இல்லையே!''

''டேஞ்சரை உடப்பிலே போடும்.''

''வந்தாலோ?''

''வராதய்யா, வராது!''

''நீர் ரிஸ்க் எடுக்கலாம்கறீரா?''

''பேஷா! ஆறு பொன்னை வச்சுண்டு அக்கடான்னு இருக்கிறே. அடியுமய்யா ஒரு அடி. யானை சூடு பிடிச்சா வருஷத்துக்கு நாலு தடவா ஆனை கடன் கொடுத்துப் பணம் பண்ணலாம். நல்ல டிமாண்டு. தலை ஆட்டுமய்யா.''

சங்குரு தலையை ஆட்டினார் அடி மேல் அடி வைத்தால்......

மறு கணம் வயிரவன் செட்டியாருக்குத் தந்தி பறந்தது. ''ரூ. 2000. உடனே அனுப்பவும். யானை ரயிலில் வருகிறது.

—முரளி.''

இரண்டாயிரம் ரூபாய் மறு தினம் வந்தது. ரூ. 200 சங்குருக்குக் கைச் செலவுக்குத் தரப்பட்டது. யானையும் மாருத்தன் மாஹூலாவும், குட்ஸ் வண்டியில் பயணமானார்கள். ஆனால் ஒரே ஒரு வித்தியாசம்.

யானையின் கழுத்தில் ''டு பே'' (to pay) (பணம் கட்டி வாங்கிக் கொள்ளும்) சீட்டு ஒட்டப்பட்டிருந்தது. ஐந்தாம் நாள் செட்டியார் ஸ்டேஷன் போன போது யானையைக் கண்டார். புளகாங்கிதமானார். ஆனால் ''டு பே'' அவருக்குப் பேயறை தந்தது. அதைச் சமாளித்துக் கொண்டார்.

''அய்யர் நல்லவர். அட்வான்ஸ்கூட வாங்கலியே. ஒரு வேளை மணியார்டர் போய்ச் சேரவில்லையோ என்னவோ? என்ன போஸ்டல் இலாகா?'' என்று சமாதானம் செய்து கொண்டு ரூ. 2000 கட்டி யானையைப் பெற்றுக் கொண்டார்.

இதற்கிடையில் ரூபாய் இரண்டாயிரத்துடன் முரளி கல்கத்தா பயணமானான்.

கல்கத்தா வந்த கையோடு முரளிக்குக் கங்கா ஸ்நானம் செய்ய வேண்டுமென்ற அவா பிடரியைப் பிடித்து உந்தியது. ஏனோ தெரியவில்லை. தான் தவறான பாதையில் சென்று விட்டதாகத் தோன்றியது. ஆனால் பிராப்தம் யாரை விடுகிறது? ''சீ! இது என்ன கோழைத்தனம்!'' என்று சமாதானப்படுத்திக் கொண்டான். இரண்டு நாட்கள் கழிந்தன.

வெள்ளியன்று மாலை தக்ஷிணேசுவரம் சென்றான். ஆசிரமத்தின் அமைதியும் விருக்ஷங்களின் குளுமையும் அவனைப் பரவசப்படுத்தின. இரவை அங்கு கழிக்கத் திட்டமிட்டான். அறையொன்றை வாடகைக்கு எடுத்துக் கொண்டான். அவனுடன் அந்த அறையில் ஒரு வயோதிகர் இருந்தார். நோயாளி. எலும்புக்கூட்டை என்னலாம்.

மாலை ஸஹஸ்ரநாமம் பாராயணம் செய்தார் கிழவர். இலகுவாக ஆகாரம் செய்து விட்டு, கீதை பாராயணம் செய்தார். ஒன்பது மணிக்கே படுக்கச் சென்று விட்டார்.

முரளியின் மூளை தீவிரமாய் வேலை செய்தது. அவரிடம் ஒரு தோல் பை இருந்தது. அதைத் தவிர ஒரு துணிப் பை. துணிப் பையைத் தலையணைக்கடியில் வைத்துப் படுத்ததை முரளி கவனிக்கத் தவறவில்லை. தோல் பை பக்கத்தில் இருந்தது. அடிக்கடி துணிப் பையை எடுத்துக் கையை விட்டுத் துளாவி விட்டுப் படுத்தார்.

பத்து மணிக்குக் கிழவர் உறங்கி விட்டார். மூச்சு பயங்கரமாக வந்து கொண்டிருந்தது.

முரளி எழுந்து மூக்கண்டை கை வைத்துப் பார்த்தான். இருமியும் பார்த்தான்.

மெள்ளத் தலையணையைத் தூக்கித் துணியை எடுத்தான்.

நெஞ்சு அடித்துக் கொண்டது.

கையை விட்டான். கையில் வந்தது ஜபமாலை. விரிதி எறிய முற்பட்டபோது கிழவர் திடீரென்று விழித்துக் கொண்டார்.

''மகனே! அதிலிருப்பது கீதையும் ஜபமாலையும்தான். பணம் ரூ. 5000 தோல் பையில் இருக்கிறது. திருடுவது பாவம், அப்பா'' என்று சொல்லி விட்டு இருமுறை இருமினார். அவ்வளவுதான். அவர் ஆவி நீங்கி விட்டது.

முரளி ஸ்தம்பித்து நின்றான். ரூபாய் ஐயாயிரத்துடன் தோல் பை அவன் முன்னால் கிடந்தது. மறுபக்கம் கிழவர் தொட்டுத் தொட்டுப் பார்த்துப் பத்திரப்படுத்திய கீதையும் ஜபமாலையும் விழுந்து கிடந்தன. என்ன தோன்றியதோ! கிழவர் காலடியில் விழுந்து நமஸ்கரித்தான். ரூபாய் ஐயாயிரத்தை ஆசிரம நிர்வாகிகளிடம் சமர்ப்பித்துவிட்டுப் பெரியவரின் இறுதிச் சடங்குகளைச் சிரத்தையுடன் செய்து முடித்தான்.


அன்றுடன் புது வாழ்வு தொடங்கினான்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor: T. Sadasivam.

உங்களுடைய கேசம் ஆரோக்யமாகவும்
பளபளப்புடனும் விளங்கும்

பிரில்க்ரீம்

தடவி நேர்த்தியாக தலையை வாரிக்கொண்டால்!





பிரில்க்ரீம் மட்டுமே

- அதிக எண்ணெய்ப்பற்று இல்லாமலும், தாறுமாறாக உரோமம் கலையாமலும் நேர்த்தியாக தலையை வார உங்களுக்கு உதவுகிறது.
- மிகவும் சிக்கனமானது—ஒருமுறை தடவி வாரிக்கொண்டால் நாள் முழுவதும் உங்கள் தலை கலையாது அழகாக தோற்றமளிக்கும்.
- உரோமம் உதிர்ந்து வழுக்கை விழாமல் தடுக்கக்கூடிய, ஆரோக்யமான உரோம வளர்ச்சியைத் தூண்டக்கூடிய, சேர்த்தியான கலவை வாய்ந்தது.
- உங்களுடைய கேசத்தின் இயற்கையான வண்ணத்தைப் பாதுகாக்கிறது.

எனவே இனிமேல் பிரில்க்ரீமையே உபயோகியுங்கள்!

உலக முழுவதிலும் லக்ஷகணக்கான நேர்த்தியான மனிதர்கள் இதையே உபயோகிக்கிறார்கள்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் 40 சதம்
தபால் செலவு தனி